
https://tamileelamarchive.com/

ஓகஸ்ட் 2006

# எரிமலை
# ERIMALAI

தமிழீழக் கடற்படையின்
சிறப்புத் தளபதி கேணல் சூசை
அவர்களுடனான நேர்காணல்





https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/

எரிமலை

# 06

## தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களுடனான நீண்ட உரையாடல்





14

தமிழீழம் பற்றி பேசுவோம்!



32

தமிழீழ மக்கள் பிரச்சினையை சர்வதேச உலகால் தீர்க்க முடியாதிருப்பதேன்?

### கட்டுரைகள்


| | |
|---|---|
| நாதன் | 14 |
| சாரணன் | 16 |
| சபேசன் | 20 |
| அருஷ் | 24 |
| எஸ்.ஆர்.வி.கஜன் | 26 |
| சூ.யோ.பற்றிமாகரன் | 32 |
| த.அகிலன் | 52 |


### நேர்காணல்


| | |
|---|---|
| தமிழீழக் கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை | 06 |


### கவிதைகள்


| | |
|---|---|
| புதுவை இரத்தினதுரை | 04 |
| ப.அருள்நேசன் | 18 |
| முல்லை யேசுதாசன் | 28 |
| கோசல்யா சொர்ணலிங்கம் | 45 |
| அனார் | 56 |
| ந.கிருஷ்ணசிங்கம் | 60 |


### சிறுகதைகள்


| | |
|---|---|
| நிலவுமகள் | 38 |
| செ.யோகநாதன் | 42 |
| போராளி தேனா | 50 |
| அலையிசை | 54 |

https://tamileelamarchive.com/



"விடுதலையை வேண்டிநிற்கும்
ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை,
எந்தவொரு சக்தியாலும்
அழித்துவிட முடியாது."

— தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

https://tamileelamarchive.com/




# தலைவாசல்

## குரங்கின் கையில் பூமாலை

பெருந்தலைவர்கள் தமது நாட்டின் அடுத்த சந்ததியினரின் நல்வாழ்வுக்காகத் திட்டமிடுகிறார்கள், இயலுமென்றால் அதற்கு அப்பாலும் அவர்களுடைய செயலூக்கமும் சிந்தனைத்திறனும் நீட்சி அடைகிறது. அரசியல்வாதிகளோ தமது பதவிக்காலத்துக்குப் போதுமானளவு, அதாவது தமது பதவியைத் தக்கவைக்கும் அளவுக்குச் செயலாற்றுகின்றார்கள். அவர்களிடம் சிந்தனைத் திறனை எதிர்பார்க்கக் கூடாது, ஏனென்றால் அவர்கள் அரசியல் வாதிகள், விதி வம்சத்தாலும் தமிழீழ மக்களின் பிச்சையாலும் பதவிக்கு வந்த அதிபர் மகிந்த ராஜபக்ச ஒரு வித்தியாசமான மனிதர். அவர் பெருந்தலைவருமல்ல அரசியல்வாதியுமல்ல. வேண்டிப் பெற்ற மட்பாண்டத்தை போட்டுடைக்கும் சிறிய மனிதராகவே தோன்றுகிறார்.

இலக்கு ஒன்றுமில்லாமல் நிமிடத்திற்கு நிமிடம் மாறாட்டம் அடையும் மனிதராக மகிந்தர் காட்சி தருகிறார். ஒன்றைச் சொல்லி அதற்கு எதிராக நடக்கும் போக்கைக் கடைப்பிடிக்கும் அவரை தமிழர்கள் மாத்திரமல்ல பெரும்பாலான சிங்களவர்களும் நம்புவதற்கு மறுக்கின்றனர். இப்போக்கை அவர் மிகப் பெரிய இராச தந்திரமாக நினைக்கக்கூடும். ஆனால் தனக்கு தானே குழிபறிக்கும் போக்கு என்பதுதான் வரலாற்று உண்மை.

ஏழு சகோதரர்களுடன் கூடப்பிறந்த ராஜபக்ச நடத்தும் ஆட்சியை குடும்ப ஆட்சி என்று வகைப்படுத்தலாம். குடும்பத்தினரும் குடும்பத்தை சார்ந்தோரும் மகிந்தரை குழப்பி அடிக்கின்றனர். யாழ்க்கோட்டை அடிபாட்டில் புறமுதுகு காட்டியோடி அமெரிக்காவில் பதினைந்து வருட காலம் அஞ்ஞாத வாசம் புரிந்த தம்பி கொட்டபாயா ராஜபக்ச இப்போது மகிந்தரின் பாதுகாப்பு ஆலோசகர். இன்னுமொரு தம்பி சாமல் ராஜபக்ச விவசாய அமைச்சர். ஒரு அமைச்சர் பதவியும் வகிக்காத பசில் ராஜபக்ச கொழும்பிலுள்ள அத்தனை அமைச்சு அலுவலகங்களுக்குள்ளும் தீவிரமாகத் தலையிடுகிறார். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் 'பசில் கறணவா' என்று சிங்கள மொழியில் கூறுமளவுக்குத் தம்பி பசில் புகழ் பெற்றுள்ளார். ராஜபக்சாவின் அக்கா மகள் நிருபமா ராஜபக்சா இப்போ பெலியத்த தேர்தல் தொகுதியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் மத்திய வங்கியை தனது ஊழல் சாம்ராச்சியத்தின் அங்கமாக ராஜபக்ச உருவாக்கியுள்ளார். மத்திய வங்கியின் ஆளுனர் பதவியைத் தனது நெருங்கிய சகாவும் ஊழல் மோசடிகளில் சாதனை படைத்தவருமாகிய கபிறால் என்பவரிடம் ஒப்படைத்தது மூலம் நாட்டின் நிதி ஆதாரத்தை ஆட்டங்காணச் செய்துள்ளார். இன்று இலங்கையின் மொத்த தேசிய வருமானம் பாதாளம் வரை வீழ்ந்துள்ளது. மூதலீட்டாளர்கள் நாட்டை விட்டகலுகின்றனர். இந்திய எண்ணை நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டிய கடன் தொகையைத் கொடுக்க முடியாது அரசு இந்த நிறுவனத்தை வெளியேற்றுவதற்கு முயற்சி எடுக்கிறது. எல்லாவற்றிக்கும் மேலாகத் தோல்வி அடைந்த நாடு என்ற முத்திரையைச் சிறிலங்காவுக்கு மேற்கு நாட்டு அவதானிகள் சூட்டியுள்ளனர்.

2002 இல் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் காணாமல் போய்விட்டது. படுகொலைகள், காணாமல் போதல்கள், ஊடுருவல் தாக்குதல்கள் என்று நாடு அல்லோல கல்லோலப்படுகிறது. முப்படைகளையும் கட்டுப்படுத்தும் வல்லமையை ராஜபக்ச இழந்து விட்டார். இழுத்த பாட்டிற்கு இழுபட்டு போகிறார். நெருப்போடு விளையாடுவது போல் தமிழீழத்தின் மீது வான் தாக்குதல் நடத்தும் அளவுக்கு அவர் துணிந்து விட்டார். புலிகளின் பொறுமையைத் தவறாக புரிந்துள்ளார் பதிலடி விழும் போதுதான் அவருக்கு உண்மை விளங்கும். மகிந்த ராஜபக்சவுக்கு வரலாற்றில் ஒரு இடம் காத்திருக்கிறது. இலங்கைத்தீவில் இரு இறைமை நாடுகள் தோன்றுவதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் உடனடிக் காரணமாக இருந்தவர் என்று சிறப்பு விருது அவருடையதாகும். அது மட்டும் அவர் பூமாலையோடு விளையாடட்டும்.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு

ஓகஸ்ட் 2006
இருபத்தைந்தாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்ஸ்

https://tamileelamarchive.com/







# ஆடி நெருப்பு தேடி எரிக்கிறது

வருடங்கள் இருபத்தி மூன்றான பின்னரும்
இன்றும் எரிந்துகொண்டேயிருக்கிறது
எம் நெஞ்சிலும்
தேசத்திலுமான நெருப்பு.
அச்சம் விளைத்து அமுக்கிவிடலாமென்றே
தென்னிலங்கையில் தீமூட்டினர்.
அன்று எங்களை எரித்து
இன்று அவர்களை எரிக்கிறது நெருப்பு.
பாவம் மூட்டியோர் அறிந்திருக்கவில்லை
அந்த நெருப்பு இப்படிச் சூழுமென்று
ஆடிநெருப்புத் தேடியெரிக்கிறது.
ஐம்பத்தாறில் பொறியாகி,
ஐம்பத்தெட்டில் சுடராகி,
எண்பத்தி மூன்றில் எரியாகிப் போனது
தமிழர் உயிர்க்கூடுகள் மட்டுமல்ல
இணைந்து வாழலாமென்றிருந்த நம்பிக்கையும்தான்.
துடிக்கத் துடிக்கக் கொன்றும்,
துவளத் துவளத் தின்றும்
கபால ஓடுகள் தரித்த பேய்கள் ஆடின
வீதியில் இறங்கவும்,
வீடுகளில் உறங்கவும் மறுக்கப்பட்ட உரிமைகள்
தெருக்களிற் கிடந்தன பிணமாக.
'அப்பே ஆண்டுவ' எனும் குரல்களின் பின்னே
குருதி குடிக்க அலைந்தன காட்டேறிகள்.
"தலைமாட்டில் தமிழர்
கால்மாட்டில் கடல்
எப்படித் தூங்குவேனம்மா" என்றான் ஒருவன்
கடைசித் தமிழனின் தோலில்
செருப்புத் தைப்பேனென்றான் இன்னொருவன்
இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வார்த்த எண்ணையிற்தான்
கொழுந்துவிட்டெரிகிறது நெருப்பு.
தீமையிலும் ஒரு நன்மையிருக்குமல்லவா?
அதற்காக நன்றி அவர்களுக்கு.
ஈழத்தமிழருக்கு விழிதிறந்ததும்,
இழிவுக்கெதிரான வழிதிறந்ததும்
அந்த ஒளிநெருப்பின் நாவுகளாற்தான்.
வடக்குக் கிழக்கு நமக்கான வாழ்விடம்
பூர்வீகப் பூமி
எல்லையிட வேண்டிய உறுதிக்காணியெனும்
உண்மையால் முகத்தில் அறைந்தனர்.
வலித்ததெனினும் இத்தனை நிமிர்வையும்
அவர்களின் சாட்டையே சாத்தியமாக்கியது.
வருடங்கள் தோறும் அஞ்சலிப்பது
வன்முறையின் வலிசொல்லவல்ல.
எமக்கானதைத் தேடும் வழிமுழுதும்
ஆடியெரிப்பையும் சுமந்து திரிகின்றோம்
அதிலிருந்துதான் விடுதலைக்கான ஒளிவிரிகிறது
மீண்டும்.... மீண்டும்.
இதிலுமா இலாப நட்டக் கணக்கு
இல்லையில்லை
இது பாவ புண்ணியக் கணக்கு. ●


https://tamileelamarchive.com/

# பயண ஆரவாரங்களுக்குக்கிடையே ஒருகிழவனின் குரல்


நடக்க நடக்க நீள்கிறது
தொலையாத பயணவழி.
நடத்தல்,
தொடர்ந்தும் நடத்தலெனும் வலி
அடுத்த தலைமுறையின் தோள்களிலுமாக
கூடவே வருகின்றனர் அவர்களும்.
பக்கத்தில் பிள்ளைகள்
அருகருகாய்ப் பேரர்களென
தொகையான வழிப்போக்கராகித் தொடர்கிறது
நெடும்பயண அலைவு.
இந்தா முடிவுற்றது பயணமெனும் பூரிப்பில்
காலாறும் பொசிப்பிழந்த யாத்திரியராய்
வயல்களை,
வனங்களை,
மலைகளையும்கூட நடந்து கடந்துள்ளோம்
இதுவரையான பயணத்தில்.
நாக்குலர்ந்தவேளைகளில்
நீர்கூட உள்ளிறக்க வழியற்று
தாகத்தில் அல்லாடிய பொழுதுகளே அதிகம்.
விரிந்த கானல்வெளியிடையே
திசைமயக்கத்தில் கணிப்புத் தவறிப்போனவரும்,
ஒத்துவரவில்லை இப்பயணமெனக்கூறி
ஒதுங்கிக் கொண்டவர்களும் ஏராளம்.
பசிதின்றவேளை
ஒருவருக்கு மற்றவர் சிரிப்பையே தீத்தியபடி
நடந்த நாட்கள் இனிக்கிறது
நெஞ்சில் ஒட்டியபடி ஒருமூலையிற் கிடந்து.
இக்கணம்வரையான பயணத்தில்
முன்னே பாடிக்கொண்டும்,
வழித்துயர் மறக்க ஆடிக்கொண்டும்
இணையென வந்த பலர்
கைதவறிப்போயினர்.
பனியில் ஒற்றைப்போர்வையுள் உறங்கியும்,
கோடையில் ஒருவர் நிழலில் மற்றவர் களைப்பாறியும்,
வந்தவரிற் சிலரின் உடல்விதைத்தும்,
நினைவு சுமந்தும்
இத்தனை தூரமும் நடந்துள்ளோம் இதுவரையும்.
காடுகள் கடந்தாயிற்று
மலைகள் ஏறி இறங்கியாயிற்று
பயணத்தின் இறுதியான ஊரின்
முன்னான நகரொன்றில்
தரித்துள்ளோம் இப்போது.
இங்கு அள்ளிக் குடிக்கக் கிணறுகளும்,
ஜலக்கிரீடைக்கு வாகான கேணிகளும்,
அறுசுவை உணவுகளும் கிடைக்கின்றன.
மதுக்கடைகளும்,
மனோரம்மியக் கேளிக்கை விடுதிகளும் இருக்கின்றன.
முன்னறிமுகமில்லாத பலர்
குசலம் விசாரிக்கின்றனர்.
எல்லோரும் ஒருவித மிதப்பில்
முகில்களுக்கிடையான வாழ்வில் அலைகின்றனர்.
இங்கேயே தங்கிவிடுங்களேன் என்று
சுருக்கிடும் வார்த்தைகளுடன்தான்
சுகமாக மேனியழுத்தி நீவிவிடுகின்றனர்.
மீண்டும் முள்ளும் கல்லும் நிறைந்த வழியில்
ஏன் பயணம் புறப்படவேண்டுமென
எதிர்கொள்ளும் எல்லோருமே அறிவுறுத்துகின்றனர்.
பயணம் தொடர்வதா?
இங்கேயே தங்கிவிடுவதா?
ஏம்பலிக்கிறது பயணிகளின் மனங்கள்.
தொடக்கத்திலிருந்தே கூடவந்த முதுகிழவன்
எழுந்து முழக்கமிடுகின்றான்,
"இது மாயைப்பொய்கை நகரம்
எவரையும் தடுமாறச் செய்துவிடும்
கணப்பொழுது தரித்தாலும்
கவடுகிழிய விழுத்திப்போடுவான்கள்
நாங்கள் புறப்படுவோம்
இன்னும் கொஞ்சூண்டு தூரம்தான் இருக்கிறது
முழுதான வெளிச்ச ஊருக்கு
புறப்படுங்கள்"
காற்றிலெழுந்து எழுந்து எதிரொலிக்கிறது
புறப்படும் பயண ஆரவாரங்களுக்கிடையே
கிழவனின் குரல்.



https://tamileelamarchive.com/




# தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களுடனான நீண்ட உரையாடல்



https://tamileelamarchive.com/

உலக விடுதலைப் போராட்டங்களில் எங்குமே கடற்படையொன்று கட்டியெழுப் பப் பட்டிருந்ததாக நாங்கள் அறிந்திருக்கவில்லை; ஆனால் தமிழீழ விடு தலைப்போராட்டத்தில் தான் சக்திவாய்ந்த அதி நவீனமான ஒரு கடற்படை கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது. இந்த சிந்தனை, பலம், எங்கிருந்து பிறந்தது?

உலக வரலாற்று நூல்களையும், வரலாற்று நாவல்களையும் வாசித்தறிந்த தலைவரின் மனதில் சோழனின் கடற்படை இடம் பிடித் துக் கொள்கிறது; (பண்டைய தமிழ் மன்னர்கள் யாவரும் கடற் படையை வைத்திருந்த போது பலம் வாய்ந்த கடற்படையாக சோழர் கடற்படையே இருந்தது) எனவே எம் நாட்டின் நிலையினைச் சிந்தித்த பொழுது ஒரு புறம் வலிமைபெற்றால் தான் எமது விடுதலை பூரணமாகும் என்ற உண்மையை உணர்கிறார் தலைவர். எனவே தமிழீழம் என்பதற்கு தனியே தரையை மாத்திரம் மீட்டெடுப்பதல்லா மல் சூழவுள்ள கடலை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும். ஆகவே எம்மிடம் பலம் வாய்ந்த ஒரு கடற்படை உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை அவர் மனதில் எழுகிறது. அத்துடன் போராட்ட ஆரம்ப கட்டத்தில் போராட்டத்தளம் தமிழகமாகவும், போராட்டக் களம் தமிழீழம் என்றும் இருக்கும் போது எமக்கு இரு நாடுகளுக்குமிடையே கடற்போக்குவரத்து அவசியம் என்ற தேவை யும் எழுகிறது. எனவே 1984 இல் கடற்புலிகள் என்ற அமைப்பை உருவாக்குகிறார். மேலும் பிறநாடுகளுடனான வாணிபத் தொடர்பு தான் எமக்கு வலுச் சேர்க்கும் என்பதை உணர்ந்து கப்பல்களை வாங்கி சர்வதேச வாணிபத்தில் ஈடுபட வைக்கிறார். இந்த வகையில் தூரநோக்குடனான தலைவரின் சிந்தனையும் போராட்டத்தின் தேவை யும் கடற்புலிகள் என்ற அமைப்பை உருவாக்கும் பலத்தை அவ ருக்குக் கொடுக்கிறது.

நிலத்தில் நின்று போராடும் தரைப்படைக்கும், கடலில் நின்று போராடும் கடற் புலிகளுக்குமான வித்தியாசத்தை குறிப்பிடுவீர்களா?

தரைப்படை, கடற்படைக்குமான வித்தியாசம் எனும் போது, இது கையிற்கும், காலுக்குமுள்ள வேறுபாடு என்ன? என்பது போலத்தான் அமையும். ஏனெனில் இரண்டும் வெவ்வேறானவை இரண்டிலும் சண்டைகள் என்ற பொது அம்சத்தை - அதாவது கடற்சண்டைக்கும் தரைச்சண்டையொன்றிற்குமான வேறுபாடு என்று பார்ப்போமா னால், தரைச்சண்டையானது நீண்டகாலத்தைக் கொண்டது. அதில் ஈடுபடுபவர்கள் தத்தமது சுய கடமைகளைச் செய்வதற்குக் கூட பிறிதொரு அணியால் மாற்றீடு செய்யப்படும் வரை காத்திருக்க வேண்டும். எதிரியின் காப்பரண் அருகே நகரும் போது கனரக ஆயு தங்களைக் கூட காவிச்சென்றே சண்டையிட வேண்டிய நிலை. அதே வேளை விமானத்தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, காப்பு எடுக்கவும் முடியும்.

கடற்சண்டை, குறுகிய நேரச் சண்டையாகும். ஒரு சில சண்டைகள் தவிர ஏனையவை மணித்தியாலத்திற்கு உட்பட்ட சண்டைகளே. ஆனால் அந்த நேரம் அதிலுள்ள ஒவ்வொருவரும் தத்தமது கடமை களை விரைவாகவும் நேர்த்தியாகவும் செய்யவேண்டும் தாக்கு தலுக்கான காப்பு என்ற சொல்லிற்கே இடமிருக்காது. தரைச்சண் டையில் முன்நகரும்போது காயமுற்றவர், ஆயுதம் என்பவற்றை நகர்த்துவது, சண்டையிடும் போராளிகளே. அவர்களை பின்னணி யில் நிற்கும் வாகனத்தில் ஏற்றும் வரை காவிச் செல்ல வேண்டும் கடற் சண்டையில் படகு கரைதிரும்பும் போது காயமுற்றவர், ஆயுதம் என்பன படகுடன் வரும் மற்றும் எமது தரைத்தாக்குதலணியினரின் பணிகள் எதிரியுடன் சண்டையிடல், பிடித்த பிரதேசத்தைப் பாது காத்தல், பின் தளத்திலிருந்து அவர்களுக்கான விநியோகம் என்றவாறு அமையும்.

கடற்புலிகளைப் பொறுத்தவரை கடற்கரையோரத்தைப் பாதுகாத்தல், கிழக்கிற்கும் வடக்கிற்கும் போராளிகளை இடம் நகர்த்தல், அதன் போது, எதிரியுடன் சண்டையிட்டு வெற்றிகரமாக அப்போராளிகளை உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தல். இவையெல்லாவற்றிற்கும் மேலாக போராட்டத்திற்குத் தேவையான ஆயுத வெடிபொருட்கள் மற்றும் மருத்துவப் பொருட்களைக் கொண்டுவந்து சேர்த்தல் (தொலைத்தொடர்பு சாதனங்கள், இயந்திரங்கள், படகுகள்). மேலும் எமது படகுகளைக் கடலில் தரித்து வைத்திருக்க முடியாது. தேவை யின் போது கடலில் இறக்கத்தக்கதாகவும், எதிரியின் வான் கலங்களின் கண்காணிப்பிலிருந்து பாதுகாத்து வைத்திருத்தல் எனப் பரந்து செல்கிறது.

தமிழீழக் கடற்பரப்பில் நடந்த சண்டைகளை நீங்கள் நேரில் நின்று வழி நடத்தியிருக்கிறீர்கள். கடற்போர் அனுபவங்களை பெற்ற மிகப்பெரிய தளபதி நீங்கள். உலக வரலாற்றில் தமிழீழக் கடற்புலிகளின் கடற் சண்டை பற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் ஆய்வுகள் வியந்து நிற்கின்றன, அந்த சண் டைகளைப் பற்றிய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?

கடற்புலிகள் பிரிவை ஆரம்பித்த பொழுது எமது பணி புதிய போராளிகளை பயிற்சிக்குக் கொண்டு செல்லுதலும்; பயிற்சி பெற்றவர்களை தமிழீழம் கொண்டு வருதலும் மற்றும் தேவையான வெடிபொருட்களைக் கொண்டு வருதலும் காயமுற்றவர்களைச் சிகிச்சைக்கென இந்தியா கொண்டு செல்லுதலுமாக இருந்தது . இக்காலகட்டத்தில் தான் நாம் ஓட்டிகளை இணைத்துக் கொண் டோம். பின் எமது போராளிகளை ஓட்டிகளாக வளர்த்தெடுத்தோம். இக்காலப்பகுதியில் எம்மிடம் ஆள், படகு, ஆயுதம் வெடிபொருள் வளங்கள் மட்டுப்படுப்படுத்தப்பட்டதாகவே இருந்தன. எதிரியின் பாரிய கலங்களுடன் எதிர்த்துப் போரிட முடியவில்லை, எனவே எதிரியின் கண்ணில் படாதவாறு எம் பயணம் தொடர்ந்தது. எதிரியின் பார்வையில் சிக்கினால் அங்கு உயிரிழப்புத்தான். எனவே எதிரியைக் கண்டு ஓடுபவர்களாகவே இருந்தோம். எனவே எதிரியின் கலங் களுக்கு போக்குக் காட்டிவிட்டு ஓடித்தப்பிய சம்பவமாக 19.6.1983 சம்பவத்தைக் கொள்ளலாம். கப்டன் பழனி, கப்டன் ரகுவப்பா உட்பட 6 போராளிகள் SLR உட்பட சிறுரக ஆயுதங்களும் வெடிபொருட் களும் கொண்டு தமிழீழம் திரும்பிக் கொண்டிருக்கையில், வானத்தில் வட்டமிட்ட ஹெலியின் பார்வையிலிருந்து தப்ப முடி யாதென எண்ணுகையில் ஹெலி தாக்கத் தொடங்குகிறது. ஓடித் தப்பக் கூட வழியற்ற நிலையில் தம்மிடமிருந்த SLR ரைபிள்கள் மூலம் ஹெலியை நோக்கிச் சுடுகின்றனர். குறிதவறவில்லை. ஹெலி புகைத்த வண்ணம் திரும்பிச் செல்கிறது. அதேவேளை எதிரியின் கடற்கலங்கள் தாக்கத் தொடங்கவே படகு திரும்பிச் செல்கிறது.

இக்காலப்பகுதியில் சிறீலங்கா கடற்கலங்கள் வடக்குப்பிராந்திய கடலெங்கும் ரோந்து செல்வதுடன், கரையோரமெங்கும் தாக்குதல் நடத்துவதும், மீனவர்கள் மீது தாக்குதல் என அட்டூழியங்கள் புரிந்து வந்த காலம். தமிழரின் கடலில் சிங்களக் கடற்கலங்கள் எக்காள மிடுவதைத் தடுக்கவென தலைவர் திட்டம் தீட்டுகிறார். மில்லர் நெல்லியடியில் கொடுத்த அடியிலும் பாடம் கற்றுக் கொள்ளா தவர்களுக்கு வல்வைக் கடலிலும் பாடம் புகட்ட எண்ணினார் தலைவர் அவர்கள். 07.10.1990 அன்று வல்வைக் கடலிலே ஆதிக்கம் செய்து வந்த கட்டளைக் கப்பல்களில் ஒன்றான எடித்தாரா மீது இலக்கு வைக்கப்பட்டது. மேஜர் காந்தரூபன், கப்டன் கொலினஸ், கப்டன் வினோத் என்ற கடற்கரும்புலிகள் புதிய சகாப்தத்தைக் கடலில் தொடக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து 05.04.1991

https://tamileelamarchive.com/

அபீதா மீது தாக்குதலைக் கடற்கரும்புலிகளான கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் செய்து நின்றனர். இந்நிலையில் தீவகம் முற்று முழுதாக சிறீலங்கா அரசபடைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தமையினால் தீவகக் கடலில் அவர்கள் அட்டகாசம் புரிந்தனர்.

இதேவேளை கடற்புலிகள், கடற்புறாவாகி பின் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் எனும் புதிய பெயர் சூட்டப்பட்டது. அதே போல் புதியபோராளிகளும் கடற்புலிகள் அணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு புதிய உத்வேகம் கொண்டது. கண்ணிவெடித் தாக்குதல்கள் இடம்பெற்றன. 22.09.1991 இல் தீவகக் கடலில் சீகாட் படகு சிதைக்கப்பட்டது. பின்னர் முதன் முதல் நேரடிக் கடல் தாக்குதலாக 02.10.1991 வள்ளத்தாக்குதல் இடம்பெற்றது. இதிலேயே முதன் முதல் AK-LMG என்ற ஆயுதம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

பூநகரியை அரச படையினர் கைப்பற்றி முகாம் அமைத்துக் கொள்கின்றனர். யாழ் நகரிலுள்ளோருக்கான ஆனையிறவுப் பாதையும் தடை. மக்கள் பூநகரி - சங்குப்பிட்டி பாதையூடாக பயணத்தை மேற்கொள்கின்றனர். அரசு திட்டமிட்டபடி ஒன்றும் நடக்கவில்லை. இடர் மிகுந்த பாதையிலும் மக்கள் தம் பயணத்தை தொடர்ந்ததை பொறுத்துக் கொள்ளாத அரசபடைகள் ஆனையிறவிலிருந்தும் பூநகரிக்கு ரோந்து என்ற பெயரில் சென்று பூநகரி - சங்குப்பிட்டி ஊடாகப் பயணம் செய்த மக்களை வெட்டியும், சுட்டும் கொலை செய்தனர். மக்களின் பயணத்திற்கு பாதுகாப்பளிக்கும் பணியும் கடற்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. கடற்புலிகளின் முதற் தாக்குதற் தளபதி லெப்.கேணல் சாள்சின் தலைமையில் பாதுகாப்புப் பணி தொடர்கிறது. பயணம் செய்யும் மக்களைத் தாக்க வந்த கடற்படையினரும் கடற்புலிகளும் சமர் புரிய மக்கள் தம் பயணம் தொடர்கிறது.

இவ்வேளையிலே எமது தரப்பிலும் லெப்.கேணல் சாள்ஸ், லெப்.மகான், கப்டன் வேந்தன், கப்டன் சாஜகான், லெப். மணியரசன், லெப். சேகர், மேஜர் அழகன் என போராளிகள் வீரச்சாவடைய, எங்கெல்லாம் எமக்குத் தடை வருகிறதோ அவற்றைத்தம் உயிராயுதத்தால் தவிடுபொடியாக்கும் எம் இனிய கரும்புலிகளின் சேவை இடம் பெறுகின்றது.

அந்த வகையில் 26.08.1993 அன்று கப்டன் மதன்/பற்றிக், மேஜர் நிலவன்/வரதன் ஆகிய கடற்கரும்புலிகள் இரு நீரூந்து விசைப் படகுகளை அழித்துக் காவியமாகின்றனர். மேலும் கப்டன் சிவா, லெப்.பூபாலன், 2ம் லெப்.சுரேந்திரன் இவ்வாறாக மக்கள் காப்புப்பணியிலே கிளாலியில் நாம் இழந்த மாவீரர் தொகை கரும்புலித் தாக்குதலில் பின் நிறுத்தப்படுகிறது.

வடமராட்சிக் கடலில் சிறீலங்காக் கடற்கலங்கள் சுதந்திரமாக நட மாடுவதை தடுக்கவெண்ணி 29.08.1993 கப்டன் மணியரசன், மேஜர் புகழரசன் சுப்பர் டோறாவைத் தகர்த்து வீரகாவியமாகின்றனர்.
தொடர்ந்து 11.11.1993 தவளைத் தாக்குதலிலும் கடற்புலிகள் பங் காற்றினர் இத்தாக்குதலிலும் 28 கடற்புலிகள் காவியமாகினர். கண் ணிவெடி கரும்புலி இடித்தல் என செயலாற்றி வந்த நாம் 16.08.199 மேலும் வளர்ச்சியடைந்து நீரடி நீச்சல் அணியினரின் உதவியுடன் கட்டளை கண்காணிப்புக் கப்பல் எடித்தாரா இழுவைப்படகு என் வற்றைக் காங்கேசன் துறைமுகத்தில் மூழ்கடித்தோம்.

இதில் முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி காவி யமானாள். தீவகக் கடல், மாதகற்கடல், வடமராட்சிப் பகுதிக்கடல், கிளாலி நீரேரி என விரிவடைந்த எமது களம், மேற்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்படுகிறது. கடலரக்கன் என்று வர்ணிக்கப்படும் சாக



https://tamileelamarchive.com/

வர்த்தனா என்ற கப்பல் எமக்கு இலக்காகிறது. ஜெயவர்த்தனா காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டு பெயரிடப்பட்ட ஆழ் கடல் ரோந்துக் கலங்கள் இரண்டில் ஒன்று சாகரவர்த்தனா (மற்றையது ஜெயசாகர. இந்தக் கப்பல் தான் 26.3.2006 அன்று வெடித்து சிதறிய டோறாவுடன் கொழும்பிலிருந்து வந்து ரோந்தில் ஈடுபட்ட கலம்)

தனியே இடிப்பதன் மூலம் மாத்திரம் அவ்வகையான பெரிய கடற் கலங்களைத் தகர்ப்பது கடினம் என்பதை எமக்கு எடுத்தாரா, அபிதா முன்னைய (1990,1991) தாக்குதல்கள் கற்றுத் தந்த அனுபவங்கள் எனவே நீரடிநீச்சல் அணியினரதும், இடியன் படகுகளினதும் துணை கொண்டு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

1996 காலப் பகுதி 25.01.1995 எமது படகு ஒன்று 7 பேருடன் கிழக்கு மாகாண விநியோகம் செய்து விட்டு திரும்புகையில் இயந்திரக் கோளாறு காரணமாக கற்குடாவில் கரையொதுங்குகிறது. அவ்வாறு வந்த கலத்தை தம்மைத் தாக்கவந்ததென்று அரசபடைகள் கூறி படகையும், அதிலுள்ளவர்களையும் கைது செய்கின்றனர் தொடர்பு கிடைக்காமையால் கிழக்கு மாகாண தளபதியுடன் தொடர்பு கொள்ள அவர் படகையும் பொருட்களையும் ஒப்படைத்து சரணடையுமாறு கூற, எம்மவர் அதன்படி ஒழுகினர். எவ்வளவோ முயன்றும் படகையோ, பொருட்களையோ மீளத் தரவில்லை கடற்புலிகளின் மரபில் இப்படியொரு செயல் இதுவரை நடைபெறவில்லை. ஏன் அப்படிச் செய்தீர்கள் எனக் கூறி எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறு செய்ய வேண்டாமெனக் கூறப்பட்டது. இது நிகழ்ந்த சில வாரங்களில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது. (1987 யுத்தநிறுத்த காலத்திலும் எங்கள் தளபதிகள் லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட பத்துப்போராளிகள் கடலில் கைது செய்யப்பட்டனர். 1995 இலும் எமது படகுகள் பொருட்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை லெப்.கேணல் திருவடி 30 புதிய போராளிகளை ஏற்றிக் கொண்டு கிழக்கு மாகாணத்திலிருந்து வரும்போது திருமலைக்கு நேரே கடற்படை வழிமறித்து படகைத் திருப்பி துறைமுகப் பகுதிக்குள் வருமாறு கட்டளையிட்டது. சென்றவாரம் படகையும் பொருட்களையும் எம்மவர் கொடுத்து விட்டு வந்ததை அறிந்தவன், படகையும் போராளிகளையும் ஒப்படைக்க விரும்புவானா? படகுகள் அழித்துக் கொள்ளவும் விரும்பவில்லை; ஏனெனில் 30 புதிய போராளிகள். எனவே அவர்களுக்குப் பணிந்தது போல் போக்குக் காட்டிவிட்டு படகையும் போராளிகளையும் பக்குவமாக கரைக்சேர்கிறான் அந்த தளபதி. இவ்வாறாக நிலைமையை உணர்ந்து துணிவுடன் செயலாற்றிய மாவீரர்களே இன்றைய எம் வளர்ச்சியின் அடிக்கற்கள். சந்திரிகாவுடனான பேச்சுக்கள் பயனற்றவை என்பது உறுதிப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதாக உத்தியோக பூர்வமாக அறிவித்த பின், திருமலைத் துறைமுகத்திலேயே நீரடி நீச்சல் அணியைச் சேர்த்து 4 கடற்புலிகள் ரணசுறு, சூரயா கப்பலைத் தகர்த்துக் கடலோடு கரைந்தார்கள்.

மேலும் எம் போராட்டத்துக்கான வளம் சேர்த்தல் பணியின் போது சிறிலங்கா கடற்படையினர் வழிமறித்த வேளைகளில் அவற்றைத் தாக்கியழித்து, சண்டையிட்டு எமது விநியோகப்படகுகளை பாதுகாத்த சமர்கள்.

எங்கும் எம்மால் தாக்கிட முடியும் என்ற கருத்தை எதிரிக்குக் கூறிய கொழும்புத் துறைமுகத் தாக்குதல் எந்த அரணுக்குள் நுழைந்தும் எம்மால் தாக்க முடியுமென்பதை உணர்த்திய தாக்குதல். யாழ்ப்பாணத்தை விட்டுவந்து புலிகள் பலம் குறைந்து விட்டார்கள் என்று கூறிய காலத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்.

எமது கடற் போக்குவரத்திற்குத் தடையாகவும் மக்களின் தொழில் செய்வதற்கு குறிப்பாக கடற்தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் விவசாயிகளுக்கு இடையூறாகவும் இருந்த முல்லைப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டது. ஓயாத அலை - 1 எனப் பெயரிடப்பட்ட இத்தாக்குதலில் கடற்புலிகளின் படகுகள் கடலில் அணிவகுத்து நின்று கடலில் வரும் உதவிகளைத் தடுத்து நிறுத்தினர் ரணவிரு என்ற கப்பலைத் தகர்த்ததுடன் சிறீலங்கா வான்படை, மற்றும் கடற்படையினரின் தாக்குதலுக்கு முகம் கொடுத்தவாறு பாதுகாப்பு வழங்கி நின்றனர்.

ஓயாத அலைகள் ஒன்று, பின் இரண்டு, மூன்றாகி ஒட்டிசுட்டான் இராணுவத்தை ஓமந்தை வரை ஓட ஓட விரட்டியாயிற்று. அடுத்து தலைவர் அவர்களின் இலக்கு ஆனையிறவு என்றாயிற்று. தோல்வியில் இருந்து கற்று அதனையே வெற்றியாக மாற்றிடும் எம் தலைவர் திட்டமிடுகிறார். ஆம்! 1991 இல் ஆனையிறவை வெற்றி கொள்ள முடியாமைக்கான காரணம், வெற்றிலைக் கேணியில் எதிரி தரையிறக்கம் ஒன்றை மேற்கொண்டு, எமது முற்றுகை உடைத்தெறியப்பட்டமை எனவே இம்முறை அவ்வாறே நாமும் தரையிறக்கம் செய்து சுற்றிவளைத்துத் தாக்குவது. 13 Km கரைத் தொடர்பின்றி குடாரப்பைத் தாண்டி மாமுனையில் தரையிறக்க முடிவெடுக்கப்படுகிறது. எதிரியின் டோறாக்களுடன் எமது சண்டைப் படகுகள் மோத தாளையடி வெற்றிலைக்கேணியில் இருந்த கடற்படையினரின் தாக்குதலைச் சமாளித்தவண்ணம் தரையிறக்கம் 26.03.2000 இடம் பெறுகிறது அதனைத் தொடர்ந்து தரையிலும் எமது அணியினர் தாக்குதல் தொடுத்து கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, தாளையடி முகாம்களைத் தகர்த்த வண்ணம் முன்னேறுகின்றனர். வெற்றிபெற முடியாதது என வெளிநாட்டு நிபுணர்களாலும் பரிந்துரைக்கப்பட்ட ஆனையிறவுப் படைத் தளத்தில் புலிக்கொடி ஏற்றப்படுகிறது.

இவ்வாறாக முதலாம் கட்ட ஈழப்போரில் எமது பணி விநியோகம் போராளி இடமாற்றம் என அமைந்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர்க் காலத்தில் எதிரிக்கு கடலிலும் கரும்புலித் தாக்குதல் நடைபெறும் என்பதை உணர்த்தியதோடு கடற்கண்ணித் தாக்குதல்களும் என கடற்புலிகள் தாக்குதலிலும் ஈடுபடத் தொடங்கினர். மூன்றாம் கட்ட ஈழப்போரில் மேற்கூறப்பட்டவற்றுடன் முகாம் தகர்ப்புத் தாக்குதலுக்கு தாக்குதலணியினரை குறித்த இடங்களில் தரையிறக்கம் செய்தல் எனப் பரந்து நின்றது.

மேற்கூறப்பட்ட காலங்களிலெல்லாம் கடற்தொழிலாளர்கள் எமக்குப் பக்கபலமாக பின்தள உதவிகளைச் செய்து நின்றனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எழுச்சி கடலிலும் எம்முடன் ஆயுத மேந்திப் போராடும் நிலைக்கு மக்களை தள்ளிவிட்டிருக்கிறது எனலாம் கடற்புகளின் விசேட துணைப்படை அணியும் கடற்புலிகளுடன் கைகோர்த்து தலைவரின் ஆணையை எதிர்பார்த்து நிற்கிறது.

கடல்பற்றிய அறிவு கடற்புலிகளிடம் நிறைந்து போய்க் காணப்படுகிறது. சிறீலங்கா கடற்படைக்கு எதிராக நிறைய பாதுகாப்புச் செயற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள்.1983 இலிருந்து மிக வேகமாக வளர்ந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். அதி நவீன ஆயுதங்களையும்,படகுகளையும் வைத்திருக்கிறீர்கள். இந்திய கடற்படைக்கு நிகரான சிறீலங்காவின் கடற்படையை எதிர் கொள்ளும் பலத்தை எவ்வாறு வளர்த்துக் கொண்டீர்கள்.

எதிரியின் சூடுகள் நிறுத்தப்பட்டாலே எமது கலம் பாதுகாக்கப்படும். எனவே எதிரி எம்மை வீழ்த்துவதன்முன் நாம் எதிரியை நிலை குலையச் செய்வதென்பதே சண்டையில் வெற்றியின் தார்ப்பரியம். அந்த வகையில் காப்பெதுவும் எடுக்க முடியாத வெட்டவெளிக் கடலில் எதிரி வீழ்த்தப் படாவிட்டால் அவனது ரவை எம்மைத் துளைக்கலாம். எனவே குறிதவறாத சூடு, சந்தர்ப்பத்திற்கேற்ப படகை உரிய முறையில் ஓடிக்கொடுத்தல், எதிரியின் இலக்குகள் பற்றிய தெளிவான அறிவு, எல்லாவற்றையும் விட வேகமான நகர்வும், முடிவெடுத்

https://tamileelamarchive.com/

தல் திறனும் மற்றும் இயங்குநிலைத் தடைகளை இலகுவில் இனங் கண்டு விரைவில் திருத்தும் திறன் எனப்பல இதில் அடங்குகின்றன.

இந்த வகையில் இவற்றில் திறம்படப் போராளிகள் இயங்க வேண்டு மென்பதற்காக அவற்றிற்கான பயிற்சிகள், ஊக்குவிப்புகள், தவறு களை இனங்கண்டு அவை திரும்பச் செய்யப்படாதவாறான அறி வுறுத்தல்கள் எனக் கூறிக் கொள்ளலாம். மேற்கூறப்படும் இந்த செயற்பாடுகள், அநேகம் உறுதிப்படுத்தல்கள் அண்ணையின் நேர டிக் கண்காணிப்பில் இடம் பெறுவதுண்டு. இதுவே எங்கள் மிகப் பெரிய பலம். மேலும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடனான சரியான வழிநடத்தல் என்று கூறிக் கொள்ளலாம். இவற்றுடன் அண்ணை சொன்னதைச் செய்தே முடிக்க வேண்டும் என்ற பற்றுறுதியுடன் களமாடும் எம் கடற்புலி வீரரின் அசையாத உறுதி. மற்றும் ஒரு கலத்தைத் தாக்கி வந்து கூறும்போது அது செய்தால் வீரமல்ல. அதைவிட அழிக்கப்பட வேண்டிய இலக்கு இருக்கிறது அதை அழித்தாலே வெற்றி என இலக்கைப் படிப்படியாக உயர்த்திச் செல்லும் தலைவரின் அணுகுமுறை. இதற்கு உதாரணமாகச் சொல்வதானால் 26.08.1993 கிளாலிக் கடல் நீரேரியில் கடற்கரும்புலித் தாக்குதலின் மூலம் வோட்ட ஜெற் இரண்டைத் தாக்கியழித்த பின் அண்ணையைச் சந்திக்கிறேன்.அப்பொழுது அண்ணை சொல்கி றார். வோட்ட ஜெற் அடித்தால் காணாது. டோறா மூழ்கடிக்க வேண் டும். 29.08.1993 இல் சுப்ப டோறா அடித்தபோது டோறா அடித்தது சரி. வீரையாவை அடியுங்கள் பார்ப்பம் என மெல்ல மெல்ல இலக்கை உயர்த்திச் செல்வதன்மூலம் பலம் வாய்ந்த எதிரியுடன் எதிர்த்துத் தாக்கும் எமது திறனை வளர்த்த பெருமை அண்ணனையே சாரும் என்றால் மிகையன்று.

**கடலில் பல நீச்சல் பிரிவுகளைத் தாங்கள் உருவாக்கி வைத்திருப்பதா கத் தகவல்கள் பல தெரிவிக்கின்றன. நீச்சல் பிரிவினர் மிக நீளமான கடலில் நீந்திச் சென்று தாக்குதல்களை நிகழ்த்த வல்லவர்கள் எனவும் குறிப் பிடுகிறார்கள்.**

உண்மை. அதிசயிக்கத்தக்க வகையில் பல சந்தர்ப்பங்களில் எம் போராளிகள் நீந்திக் கரைசேர்ந்த சம்பவங்கள் உண்டு. 1986 இல் படகு விபத்தொன்றில் கடலில் சம்பவம் அறிய முடிந்தது. 28.08.1992 கடற்புலிகள் எதிரியின் கலமான வோட்டஜெற்றைச் சேதமெதுவு மின்றி கொண்டு வந்து சேர்த்தார்கள் என்பது யாவரும் அறிந்ததே. மண்டைதீவிலிருந்து அடித்த தேடொளி வெளிச்சத்தில் பிரிந்து சென்று போராளி மறு நாள் நீந்திக் கரைசேர்ந்தமை கடற்புலி களுக்கும், தலைவருக்கும் வெளிச்சம். கரும்புலித் தாக்குதல்களில் பல நீச்சல் திறமையினாலே சாதிக்கப்பட்டவையாகும். அந்த வகையில் 15.8.1994 இரவுப் பொழுது. ஊர் உறங்கிவிட்டது. இலட்சிய உறுதியில் இரும்பாகி எதிரிக் கப்பலின் முடிவே தம் வெற்றியாகக் கொண்ட 'மீன் குஞ்சுகள்' வைக்கப்பட வேண்டிய வெடிகுண்டுடன் நீந்துகின்றன. ஆம்! பெரிய வெடியோசை. உலகமே அதிசயித்து நிற்கிறது. முதற் பெண் கடற்கரும்புலி காவியமாக மற்றைய மீன் போல நீந்திச் சென்றதை மற்றவர்கள் அறிந்திடவில்லை. இவ்வாறாக 19.09.1994 கற்பிட்டிக் கடற்பரப்பிலும் எமது மீன்களின் செயற்பாடு பற்றி தலைவருக்கும் எங்களுக்கும் மட்டும் தெரிகிறது. ஆனால் சாகரவர்த்தனா கப்பல் மூழ்கடிக்கப்பட்டு அதன் கப்டன் பொயாகொட கைது செய்தமையும், கடற்கரும்புலிகள் நால்வரும் காவியமான கதை உலகறிந்தது. இவ்வாறாக அநேகமான கரும்புலித் தாக்கு தல்களிலும் எமது போராளிகளின் நீச்சல் திறமையே எம்மை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்கிறது.

இங்கு மேலுமொரு சம்பவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானது என நினைக்கிறேன். 16.07.1995 புலிபாய்ச்சல் நடவடிக்கையின் ஓரம் சமாக காங்கேசன் துறைமுகத்தில் தாக்குதல் இடம்பெறுகிறது. கரும் புலிப்படகு இடிக்கமுன் வெடிபிடித்தமையால் அதனைக் கைவிட்டு நீந்தும்படி கடற்கரும்புலிகள் இருவருக்கும் கட்டளை இடுகின்றேன். உடன் தனக்குக் கரும்புலிக்கான சந்தர்ப்பம் தரவேண்டுமென்ற வேண்டு கோளுடன் கடலில் குதிக்கிறாள் செவ்வானம். இரவு விடிந்து விட்டது. எதிரி இருவரை உயிருடன் பிடித்துவிட்டேன் என எக்காள மிடுகிறான். திசைபார்த்து நீந்தி வருவாள் என எதிர்பார்த்த செவ் வானம் வரவில்லை. விதையாகிப் போனவர்கள் பட்டியலில் சேர்க்க மனமின்றி சேர்க்கப்படுகிறது. மறுநாள் வீரச்சாவு நிகழ்வுகள் இடம் பெற ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. அதிகாலை மயிலியதனை முகாமினருக்கு ஓர் ஆச்சரியம். வீரச்சாவடைந்து விட்டாள் என இருந்த செவ்வானம் தள்ளாடியபடி கடற்கரையில்!..... கனவா? நினைவா? சந்தேகத்துடன் கடற்கரை நோக்கி ஓடுகிறார்கள் போராளி கள். ஆம். நிழல்லல்ல. நிஜம் தான். செய்தி எங்கும் அறிவிக்கப் படுகிறது. தனது மகளின் வித்துடல் வரக்கூடுமோ கரையொதுங் குமோ தருவார்களோ என எதிர்பார்த்த பெற்றோர் முன், செவ்வானம்.

ஆம், 24 மணி நேரம் கடலில் நீந்தி இலங்கை வான்படை, கடற் படையினருக்குப் போக்குக் காட்டிக் காட்டி, சரியான திசையில் நீந்திக் கரைசேருகிறாள் செவ்வானம். இதே போல் சுண்டிக்குளத்தில் எமது நிலையத் தாக்குதலுக்கான பழிவாங்கல் தாக்குதல். 1999 இல் எதிரியின் டோறாப் படகைத் தாக்கி அதிலேறி அதிலிருந்த 20 மிட் பரல் கழற்ற பாதுகாப்பிற்கு வந்த டோறா தாக்கத் தொடங்க அந்த இரும்புக் குழலுடன் நீந்தி எம் படகேறி அதைக் கொண்டு வந்து சேர்க்கிறான், 07.10.1999 எம் துணைத் தளபதியான லெப்.கேணல் நிரோஜன். 'உப்பில் உறைந்த உதிரங்கள்' படம் எல்லோர் மனதிலும் இடம் பிடித்திருக்கும். ஆம்! அந்த உண்மைச் சம்பவமே படமாக்கப் பட்டுள்ளது. கிளாலியில் எதிரியின் முகாமருகே காயமுற்ற விழுந்த போராளி மறுநாள் நீந்தி எம் கரையேறி, இன்று வரை போராளியாகக் கடமையாற்றுகிறான். இவ்வாறு நீச்சல் திறமையின்றேல் நாம் இன்று முன்னேறியிருக்கவே முடியாது. இந்த நீச்சல் திறமையினை வளர்க்கவே வருடாவருடம் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் போட்டிகளும் உள்ளடக்கப்பட்டு, வெற்றி பெற்றோருக்குப் பரிசளித்து ஊக்குவிக்கிறார் தலைவர் அவர்கள்.

**1983ம் ஆண்டு காலப்பகுதியில் 'ஓட்டிகள்' என அழைக்கப்படுபவர்கள் கடற் புலிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை பற்றியும் அவர்களுடைய கடற் பயணங்கள் பற்றியும் எங்களுக்குக் கூறு வீர்களா?**

வடமராட்சியின் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த மீனவர்கள் இவர்கள் இந்திய இலங்கை வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர்கள். இவர்கள் தமது படகுகளிலேயே தம்பயணங்களை மேற்கொண்டனர். நாமும் தமிழகம் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டபொழுது நாம் அவர்களை நாடி எம்மை கூட்டிச் செல்லுமாறு கேட்டு அவர்களின் உதவியுடன் சென்று வந்தோம். எமக்குத் தேவையான பொருட்களை மற்றும் போராளிகளை இடம் மாற்றுவதில் எமக்குக் கைகொடுத் தவர்கள் இவர்கள். அவர்கள் பயன்படுத்திய சிறிய படகுகளே அப் பொழுது எம் பயணத்திற்கான படகுகள். வேகமும் குறைவு. எனவே தான் எதிரி கண்ணில் பட்டால் திரும்பி வருவது மிகக்குறைவு. எமது பொருட்களைக் கொண்டு வரும் வழியில் எதிரியினால் அவர்கள் மடிவதைப் பொறுக்காது எமது பயணத்தைப் போராளிகளைக் கொண்டே நடத்த முடிவெடுத்தார் தலைவர் அவர்கள். 1985 இன் பின் கடற்புலிகளின் படகுகளே இப்பணியில் ஈடுபட்டன.

**ஆசியாவினுடைய மிகப்பெரிய பலமாகத் திகழும் திருகோணமலை இயற் கைத் துறைமுகத்தைப் புலிகள் விரைவில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுவார்கள் என சில சக்திகள் அச்சம் கொண்டிருக்கின்றன. கடற்புலிகளுக்குத் தங்களுடைய பலம் பற்றித் தெரியும். அவர்களுக்கு மக்கள்**

https://tamileelamarchive.com/

**பலம் இருக்கிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள இந்தத் திருகோணமலைத் துறைமுகம்பற்றி நெப்போலியன் கூட அறிந்திருக்கிறார்.அவர் கூட இத் துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேசியிருக்கிறார். நீங்கள் இத்துறைமுகம் பற்றிய வரலாறுகளையும், முக்கியத்துவங்களையும் எமக்கு விரிவாகக் கூறுவீர்களா?**

கடற்கலங்கள் நிறுத்தப்படும்போது காற்றினாலும், கடலலைகளாலும் பாதிக்கப்படாமலிருக்கவே துறைமுகங்களில் கட்டப்படுகின்றன. சிறிய படகுகளாயின் கட்டுப்படுத்த கடலிலே நீர்த்தடைகள் எனப் படும் (water break) கட்டப்படுகின்றது. அந்த வகையில் கொழும்பு, காங்கேசன்துறை என்பவற்றில் இவ்வாறான நீர்த்தடைகளைக் காணலாம். ஆனால் திருக்கோணமலைத் துறைமுகமானது இயற்கையாகவே இந்த பாதுகாப்பினைக் கொண்டுள்ளது. இதுவே இதன் சிறப்பம்சமாகும்.

இந்த வகையில் திருமலைத் துறைமுகம் உட்துறைமுகப்பகுதி, வெளித்துறைமுகப்பகுதி என வகைப்படுத்தப்படக் கூடியதாயும் வருடம் முழுவதும் கடற்கலங்களைப் பாதுகாப்பாக விடக்கூடியதான இயற்கை அமைப்பைக் கொண்டிருப்பதையும் காணலாம். இந்த அம்சம் காரணமாகவே ஐரோப்பியர் இதனைத் தமது படைத்தளக் கேந்திர மையமாக வைத்திருந்துள்ளனர். அத்துடன் தென்னாசியப் பிராந்தியங்களிலுள்ள துறைமுகங்களில் சிறந்த இயற்கைத் துறைமுகமான இதன் அமைவிடமும் இதற்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. இந்து சமுத்திரத்தினூடாகப் பயணம் செய்யும் கப்பல்கள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிச்செல்லக் கூடியதான ஒரு துறைமுகமாக இது விளங்குகிறது. வருடம் முழுவதும் பாதுகாப்பாகவும், பெரிய கலங்களை உட்கொண்டு செல்லக் கூடியதான ஆழத்தையும் கொண்டிருப்பதன் காரணமாகவே இது பாதுகாப்புப் படையின் கலங்களை பாதுகாப்பாக விடப்படும் இடமாக உள்ளது. இதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் இந்து சமுத்திரத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாமென்பதன் காரணமாகவே 1948.02.04 இல் இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்த போதும், பிரித்தானிய கடற்படை அதிகாரிகள் (M.S. பிளையர் ) M.S. flyer என்ற இந்தத் துறைமுகத்தை 15.10.1957 இல்தான் இலங்கையிடம் ஒப்படைத்தனர். சிறீலங்காக் கடற்படையின் நடவடிக்கைத் தலைமையகமும் இங்குதான் உள்ளது. கப்பல்கட்டும் நிறுவனமும், கடற்படைப் பயிற்சிக் கல்லூரியும் இங்குண்டு. அத்துடன் கடற்படையின் அதிவேகப் பீரங்கிக் கப்பல் அணியும், அதிவேகத் தாக்குதற் படையணியின் கலங்களும் இங்குதான் நிறுத்தப்படுகின்றன.

**கடல்பற்றிய ஒரு கல்விக்கான பாடசாலையொன்றை நீங்கள் எதிர்காலத்தில் நிறுவுவீர்களா?**

நிச்சயமாக, ஏன் தற்பொழுதுகூட அடிப்படை இராணுவப்பயிற்சியை முடித்து வரும் போராளிகளுக்கு எமது பிரிவில் சேர்க்கப்பட்டவுடன் லெப்.கேணல் நிரோஜன் ஆரம்பக் கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் கடல்சார் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்பே வேலைகளுக்கெனப் பிரித்து விடப்படுகிறது. 1992 இல் ஆசிர் கடற்படைப் பயிற்சிக் கல்லூரி, பின் லெப். கேணல் நரேஸ் தொழில் நுட்பக் கல்லூரி, லெப்.கேணல் பெத்தா அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி. ஏன்? இன்று கட்டளை அதிகாரிகளாகக் கடமையாற்றும் பலர் கடற்புலிகளின் கடற்படைப் படைத்துறைப்பள்ளியில் பயின்று வந்தவர்களே. இந்த வகையில் ஆயுதம், இயந்திரம், படகோட்டம், வழிகாட்டலும் தொலைத் தொடர்பும் எனக் காலத்திற்குக் காலம் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு பயிற்றப்படுகின்றன. இவற்றின் பரிணாம வளர்ச்சியாக நிச்சயமாக கடற்படைக் கல்லூரி அமையும் என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

**சுனாமி போன்ற பேரழிவுகளை முன்கூட்டியே அறியும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் வண்ணமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறீர்களா?**



https://tamileelamarchive.com/

**இழப்புக்களையும் துன்பங்களையும் கண்டு துவண்டு விடும் மனம் தலைவரிடம் இல்லை மாறாக துன்பத்தைத் தந்தவனுக்கே அதனை திருப்பிக் கொடுக்க வேண்டும். என்ற தத்துவத்தை கொண்ட மனமே அவருடையது.**

ஆம்! தலைவர் அவர்கள் இதற்கான முயற்சியினை மேற்கொண்டு வருகிறார். (கிளிநொச்சியில் அறிவியல் நகரில் வானிலை ஆராய்ச்சி மையம்)

**எமது கடல் மாசடைந்து வருகிறதாக ஒரு செய்திக்குறிப்பின் மூலம் அறிந்தோம் கடல் மாசடைவதற்கான காரணங்கள் எவை? கடல் மாசடைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுத்து வருகிறீர்கள்?**

1. வைத்தியசாலைக் கழிவுகள், சந்தைக் கழிவுகள் போன்றன கடலில் கொட்டப்படுதல்.

2. கடற்கலங்கள் அழிக்கப்படுதலின் போது அவையும் கடலிலேயே விடப்படுகின்றன.

3. அல்சீனியா என்ற தாவரம் வளர்ந்து சிறு மீன்கள், இறால் உற்பத்தியைத் தடை செய்தல்.

சுனாமி மூலம் இந்தோனேசியா போன்ற இடங்களிலிருந்து வந்த பெருமரங்கள், கழிவுப்பொருட்கள் என்பன அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அல்சீனியா என்ற தாவரத்தை ஓய்வு நேரங்களில் சமாசம் மூலம் மக்கள் பிடுங்கி அகற்றும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

**உலக விடுதலைப் போராட்டங்களை வழிநடத்திய தலைவர்களுடன் ஒப்பீட்டுப் பேசுவதற்கு உரியவரான எமது தேசியத் தலைவரோடு அருகில் நின்று பல யுத்த களங்களைக் கண்ட நீங்கள் எமது தேசியத் தலைவருடைய ஆளுமைகளைப் பற்றிப் பேசமுடியுமா?**

வாசிப்பதில் முக்கிய கவனம் செலுத்துபவரான தலைவர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வரலாறுகள், கடற்புறா போன்ற வரலாற்று நாவல்களை வாசித்த பொழுது கடாரம் வென்ற சோழனின் கடற்போர் பற்றிய பகுதி அவரை மிகவும் ஈர்த்துள்ளது. எமது தமிழீழம் ஒரு புறம் சிறிலங்காவினாலும் ஏனைய பகுதிகள் கடலாலும் சூழப்பட்டே காணப்படுகின்றது. தரையில் எவ்வளவு வலிமை இருந்தாலும் கடலில் நின்று தாக்கும் எதிரிக்கு முகம் கொடுக்க மற்றும் பிற நாட்டுத் தொடர்புகளுக்கு கடலில் நாம் பலம் பெற்றிருக்க வேண்டும் என்பதை உணர்கிறார். மேலும் ஆரம்பத்தில் எமது போராட்டத் தளம் தமிழகத்திலும், போராட்டக்களம் தமிழீழத்திலும் என இருக்கும் போதும் கடற் பயணம், எதிரியைத் தாக்குதல் என்பன பற்றிய தேவையை நன்குணர்ந்து 1984 இல் கடற்புலிகள் என்ற அமைப்பை உருவாக்குகின்றார். இங்கு நாம் தலைவரின் தூரநோக்குடைய சிந்தனையை, செயற்பாட்டை நோக்கக்கூடியதாக உள்ளது. அதாவது 1984 இல் கடற்புலிகள் என ஆரம்பிக்கும் பொழுதே கடலில் எதிரியை வெல்ல நீரடி நீச்சல் அணியின் தேவையை உணர்ந்து அக்காலப் பகுதியிலேயே நீரடி நீச்சல் அணிக்கான ஒரு பயிற்சியை ஆரம்பித்து அவர்கள் அதில் திறமை பெற வேண்டும் என வலியுறுத்தி விடுகின்றார். எமது வெற்றிகளுக்கு பல இடங்களில் கை கொடுத்து நிற்கும் இப்பிரிவின் தேவையை அக்காலத்தில் உருவாக்க நினைத்தார் தலைவரவர்கள். மற்றும் எமது கடற்கலங்களின் தேவையை நிறைவு செய்ய நாமே எமது படகுகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஒரு உன்னத நோக்குடன், படகுக் கட்டுமானப் பிரிவு உருவாக்கப்பட்டு படகுகள் உருவாக்கப்பட்டன.

இவற்றை விட பிரதேச வாணிபத் தொடர்புகள் எமக்கு பல வழிகளில் கை கொடுக்கும் என நினைத்து. 1985ல் கப்பல் வாங்கி சர்வதேச தொடர்பை உருவாக்கினார். கெரில்லாப் போராளிகளாக மிகக் குறைந்த தொகையினராக இந்த போதும் எதிர்காலத் தேவைகள் கருதி உபபிரிவுகளை உருவாக்கி நின்ற தலைவரின் சிந்தனைத் திறனை செயற்படுத்தலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

போராட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டவையாகும் போதே வெற்றியெமக்கு என்பதில் அசையாத உறுதிகொண்ட தலைவர் அவர்கள் கடற்புலிகள் பிரிவு உருவாக்கப்பட்டபின் கடற்புலிகளுக்கும், மக்களுக்குமான தொடர்பு வலுப்பெற வேண்டுமென்பதை உணர்ந்து கடற்புலிகளுக்கெனத் தனியாக அரசியற் பிரிவொன்றை 1991 இல் உருவாக்கி நின்றார்.

1992.08.26 அன்று அண்ணையைச் சந்தித்து 28.08.1992 மண்டைதீவுக் கடலில் கட்டிநிற்கும் ஒரு வோட்ட ஜெற்றைத் தகர்க்க முடிவெடுத்ததைக் கூறினேன். அப்பொழுது 'ஏன்ராப்பா கிட்டப்போய் தகர்க்கிறதை விட, இழுத்து வரலாமே' என்று அண்ணா கேட்டார். அதன்பின் தான் நாம் அதனை இழுத்து வந்து குருநகர் மக்களின் உதவியுடன் கரையேற்றினோம். கடற்புலிகள், மக்களுடன் நன்கு பழகி இருக்க வேண்டுமென்றும் என்ற அண்ணனின் சிந்தனையின் பலனை நன்கு உணர்ந்த சந்தர்ப்பம் இதுவாகும்.

1992 காலப்பகுதி, கடற்புலிகள் மகளிரணி உருவாக்கல் பற்றி அண்ணை கூறி லெப்.கேணல் நளாயினி தலைமையில் 30 பேர் கொண்ட அணி தரப்பட்டது. இவர்களால் முடியுமா? என்ற எனது வியப்பு அண்ணனின் கூற்றிற்கு மறு கதை கதைக்காமல் மனதிற்குள் சங்கமமாகின்றது. நீச்சல் பயிற்சி தொடங்குகிறது. ஒரு கடல்மைல் நீந்தி முடித்தால் ஜிப்சி வாகனத்தை தருகிறேன் எனக் கூறினேன். [illegible] நாட்களில் அவர்கள் நீந்தி முடித்து ஜிப்சியைத் தமதாக்கிக் கொள்ள அண்ணனின் நம்பிக்கையையும், இவர்களின் செயற்றிறனையும் கண்டு எம் கை, வலுப்பெற்றதை உணர்ந்தேன்.

எதிரியின் கலத்தை அழிப்பதைவிட அதைக் கைப்பற்றுவதே மேல் என்ற அண்ணனின் முன்னைய கருத்தே பூநகரிச் சமரில் ஐந்து நீருந்து விசைப்படகுகளை நாம் கைப்பற்றிக் கொண்டு வர வழி வகுத்தது.

1996 ஆண்டு மாசி நடுப்பகுதி எமது கப்பல் 70 கடல் மைலில் வந்து கொண்டிருந்தது. இந்திய இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் எமது கப்பலை மறித்து நிற்கின்றன. அண்ணை சொல்கிறார்; படகில் எங்கடை ஆக்களை அனுப்பி மாலுமிகளை மீட்டெடு எனக் கூறி

https://tamileelamarchive.com/

கிறார். எனக்கு சந்தேகம். சிறிய படகில் இரு நாட்டுக் கடற்படைக் கிடையில் சென்று ஆக்களை மாற்றி வருவது சாத்தியமா? அண்ணை சொல்கிறார், அனுப்பினேன். மாலுமிகள் பக்குவமாகக் கரை வந்து சேர்ந்தனர். எம் போராளிகள் கப்பலைக் கொண்டு வந்து சேர்க்கக் கடுமையாக முயற்சித்தும், இறுதியில் கிபிர் தாக்குதலில் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. முடியும் என்ற நம்பிக்கையுடனான செயற்பாடே வெற்றிக்கு வழி என்ற அண்ணனின் கொள்கையை அனுபவத்தில் உணர்ந்து அடுத்த நோக்கினைப்பற்றிப் பார்ப்போம்.

1991 ம் ஆண்டு, ஆனையிறவுத்தளம் முற்றுகையிடப்பட்டு எம்வசம் வீழ இருந்த நிலையில் வெற்றிலைக்கேணியில் தரையிறக்கம் செய்யப்பட்டு எமது முற்றுகை முறியடிக்கப்பட்டது. எனவே அதே பாணியில் ஆனையிறவைக் கைப்பற்ற வேண்டுமென முடிவெடுத்த தலைவர் குடாரப்புவில் தரையிறக்கிக் கண்டிவீதியை ஊடறுத்து இத்தாவில் பகுதியில் நிலைகொண்டு எதிரியைத் தாக்குவதென முடிவெடுக்கிறார். திட்டத்தை அண்ணை என்னிடம் சொல்ல, என்னிடமிருந்த எரிபொருள் கொண்டுபோய் இறக்க மட்டும் தான் போதுமானது என்பதை அண்ணையிடம் கூறினேன்.

தரையிறக்கப்பட இருந்த அணியினருடன் அண்ணை கதைக்கும் போது, இரண்டாம் உலகப்போரில் நடந்த தரையிறக்கத்தின்போ அவர்களின் தளபதி தரையிறக்கம் செய்யப் பயன்படுத்தப்பட்ட கப்பல்களை எரித்தமை பற்றிக் குறிப்பிட்டு, நான் எமது படகுகளை எரிக்க மாட்டேன் எனக் குறிப்பிட்டு, மீளப் படகுகளில் ஏற்றி எடுக்க மாட்டேன். வெற்றி பெறுவதே முடிவு என்பதை அவர்களுக்கு உணர்த்தினார். அதை விளங்கிக் கொண்ட தாக்குதல் அணியினரும் ஆனையிறவைக் கைப்பற்றி கண்டிவீதியால் தான் வருவம் என உறுதியளித்து அதை நிறைவேற்றினர். தலைவர், போராளிகளின் மன உறுதியை வளர்த்து அவர்களது ஆற்றலை வெளிக் கொணர்ந்த விதம் எம்மை வியக்க வைத்தது.

இழப்புக்களையும் துன்பங்களையும் கண்டு துவண்டு விடும் மனம் தலைவரிடம் இல்லை. மாறாக துன்பத்தைத் தந்தவனுக்கே அதனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற தத்துவத்தை கொண்ட மனமே அவருடையது.

ஒரு முறை, மூன்று படகுகளையும் 30 போராளிகளையும் நாம் இழக்கிறோம். அந்த இழப்பு எம்மை நிலை குலையச்செய்கிறது. அந்த மனச் சோர்வுடன் தலைவரிடம் நடந்ததைப் போய்க் கூறிய போது தலைவர் சொல்கிறார். "இஞ்சை வா, முதல் அவன்ர மூன்று டோறாவையும் அதில இருக்கிற கடற்படைகளையும் அழி. அதுக்கு என்ன வேணுமோ கேள். நான் உடனே தாறன்" என்று இழப்புக்குள்ள இருந்து எங்களைத் தட்டிக் கொடுத்து, தானும் அந்த அந்த இழப்புக் குள்ள ஆட்கொண்டு விடாத மன உறுதியையும் காணக் கூடிய தாய் இருந்தது.

ஒவ்வொரு ஆயுதங்களிலும் அவரவருக்குச் சிறப்புத்தேர்ச்சி வேண்டும் என்பதில் தலைவர் அக்கறை கொண்டிருந்தவர் என்பதை விளக்க ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாமென்று நினைக்கிறன். ஒரு முறை தலைவர் RPG அனுப்பியிருந்தவர். அதனைப் புலேந்தி அம்மான் ஆட்கள் புல்மோட்டையில வைத்து ராங் ஒன்றை அடிக்க. அதில் ராங் வெடிக்கவில்லை அது பிழைத்துவிட்டது; எங்கோ போய்விட்டது. அப்ப எல்லோரும் முடிவெடுத்தனர். அந்த ஆயுதம் பயனளிக்காது என்று அப்படியே வைத்துவிட்டனர். தலைவர் சொல்லி அனுப்புறார். "மண்ணை நிறைச்சுப்போட்டு பூச்சாடியா கவுட்டு வைக்கட்டாம்" என்று. பேசிப் போட்டு ஆயுதத்தைக் கொண்டு வருமாறு சொல்லிவிட, அதைக் கொண்டு போய்க் கொடுக்கிறோம். அப்போது அண்ணை சொல்லுறார் "ஆயுதங்களைக் கொடுத்தா ஸ்ராண்ட் போட்டு அடுக்கி வைக்கிறது. ஏதும் எண்டால் அதத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் அடிச்சுப்போட்டுத் திரும்பவும் ஸ்ராண்டில் வைக்கிறது. அந்த ஆயுதத்தால 100 மீற்றரிலோ 200 மீற்றரிலோ சுட்டுப் பாக்கிறது இல்லை".

நான் வடமராட்சியில இருக்கேக்க எனக்குக் கீழ இருந்த ஓராள் தலைவருக்குப் போய்ச் சொல்கிறார் "ஆமி சுடச்சுட வாறான்" என்று. அப்பபோது தலைவர் "சுடச்சுட வாறான் என்றால் அவன் என்ன பிளட் புறாவா போட்டிருக்கிறான்" என்று அந்தப் போராளியைக் கேட்கிறார். உண்மையிலேயே அதற்குச் சரியான காரணம், சரியான முறையில் சூட்டுத் தேர்வு செய்து இவன்தான் இந்த ஆயுதத்திற்கு கைதேர்ந்தவர் என்று நாங்கள் விடவில்லை என்பதாகும். அண்ணை நாட்டுக்கு வந்த பிறகுதான் அவரவருக்கென்று பயிற்சிகள் வழங்கப் பட்டு அவரவருக்கென்று தேர்ந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன. தலைவர் இதைச் செய்த பின் எல்லா ஆயுதங்களுமே நல்ல வெற்றியை எங்களுக்குத் தந்தன.

தவறு விடும் போராளிகளைத் தண்டிப்பதிலும் தலைவர் கையாளும் விதம் ஒரு தனித்துவமானது. ஒரு முறை தவறு செய்தவர் மீண்டும் அப்பிழையை விட வைக்காது. வடமராட்சியில ஒப்பிறேசன் நடவடிக்கையில் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் எஞ்சிய போராளிகளைக் கூட்டிக்கொண்டு தென்மராட்சிக்குப் போய்த தலைவரைச் சந்திக்கிறன் அப்பொழுது தலைவர் சொல்கிறார், "வடமராட்சிய விட்டிட்டு வந்து தென்மராட்சியில நிர்வாகம் நடத்தலாம் எண்டு நினைக்காதை, அது அழகில்லை ஒன்றில வடமராட்சிய பிடி, இல்லையெண்டா அந்த முயற்சியில வீரச்சாவடை அப்பதான் புதிய பரம்பரை ஒன்று எங்கட போராட்டத்தை முன்னெடுக்கும்" என்ற தலைவரின் அந்தக் கட்டளை, பின்னாளில் பல வெற்றிகளுக்கு காரணமாயிருந்தது. 1998 காலப்பகுதி எமது அரசியல் ஆலோசகர் பாலா அண்ணா கடும் சிறுநீரக பாதிப்பிற்குள்ளாகியிருந்தார். சிகிச்சைக்காக வெளிநாடு அனுப்ப சிறீலங்கா அரசு அனுமதிக்கவில்லை. எனவே கடலால் அனுப்புவதென முடிவெடுக்கப்பட்டது. பயணம் ஆரம்பமாகும் நேரமும் வந்தது. நானும் கூடச்சென்று அனுப்பிவிட்டு வருவதாக இருந்தது அப்பொழுது தலைவர் தனது கட்டளை மையத்திற்கு தளபதியை அனுப்பி, நிலைமையை உடனுக்குடன் தனக்கு அறிவிக்கும் படி கூறிவிட்டு வழமையாக நடவடிக்கை நேரங்களில் நான் நிற்கும் இடத்தில், தான் வந்து நின்று எங்களது ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டு, நான் திரும்பி வரும்வரை அவ்விடத்திலேயே நின்றார். தலைவரின் இந்தக் செயற்பாட்டில் அவரது கடமையுணர்வு, பற்றுணர்வு என்பதை அறியக் கூடியதாய் இருந்தது. ஒரு வட்டத்திற்குள் இருந்த பெண்களை, ஆண்களுக்கு நிகராக களத்தில் இறக்கி மாபெரும் சமூகப் புரட்சியை நடத்திக் காட்டியமைக்கு இன்னுமொரு சம்பவத்தை எடுத்துக் கூறலாம். 5 பிள்ளைகளின் தாயொருவர் சிறப்பாக ஒரே சண்டைக்காக பயிற்சியில், மகனும் தாயும் பயிற்சி எடுத்தும் பின் கடற் சண்டையொன்றில் அத்தாய் 50 கலிபருடன் வீரகாவியமானதையும் எடுத்துக் கொள்ளலாம்.

வளர்ந்து வரக் கூடியவர்களை அவ்வவத்துறைகளில் வளர்க்க வேண்டும் என்ற பண்பை தலைவரின் செயற்பாட்டில் காணலாம். 1990ம் ஆண்டு நான் வடமராட்சிக்குப் பொறுப்பாக இருந்த போது தலைவர் என்னை அழைத்து மருத்துவத்துறையில் தேர்ச்சி பெற்ற ஒரு போராளியை என்னிடம் தந்து அவரைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பினார். அன்று தூரநோக்கோடு அவரை அனுப்பி கல்விகற்க வைத்தமை இன்று அந்தப் போராளி வைத்தியத்துறையில் வல்லுனராக போராளிகளுக்கு மட்டுமின்றி மக்களுக்கும் சேவை செய்யும் வைத்திய கலாநிதியாக மாற்றி நிற்கின்றார். ■

● நேர்கண்டவர்கள்: எரிமலை சஞ்சிகை குழுமம் ● உதவி: தமிழன்பன், தவபாலன்

https://tamileelamarchive.com/

# தமிழீழம் பற்றி பேசுவோம்!

■ நாதன் ■




சாவிலும் வாழ்வோம் - அமெரிக்கா

எங்கள் வரலாற்றின் விளைபொருளான தமிழீழம் எனும் களயதார்த்தம் இலங்கை முரண்பாடு களைவுக்கான தவிர்க்க முடியாத வழியெனப் பிரகடனப்படுத்திடுவோம்.

இலங்கை இனச்சிக்கல் தணிப்பு முயற்சிகள் தனது நீண்ட பாதையில் மற்றுமொரு கட்டத்தை தாண்டுகின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் போன்ற இராணுவ, பொருளாதார வல்லரசுகளின் பின்புலத்தில் நோர்வே முன்னெடுத்த சுமார் 5 வருடகால தணிப்பு முயற்சி பலவீனப் படுத்தப்பட்டு இனச்சிக்கல் தணிப்புக்கு போர் தவிர்க்க முடியாத மாற்றுவழியாகி விட்டது. இந்த மாற்றுவழியானது தவிர்க்க முடியாதவிதத்தில் புதிய சமநிலையை இலங்கைத் தீவில் உருவாக்கும். அதாவது, முரண்படு தரப்புக்களான தமிழ் - சிங்கள தேசிய இனங்களிடையே மற்றுமொரு புதிய வலுச்சமநிலை தற்போதைய சூழலின் முடிவில் வெளிப்படும். இந்தப் புதிய வலுச்சமநிலை அச்சிலிருந்தே தீர்வுக்கான அடுத்த கட்ட நகர்வுகள் ஆரம்பமாகும் என முரண்பாடு தணிப்புக்கான ஆய்வாளர்கள் இப்போது ஊகங்களை வெளியிடத் தொடங்கி விட்டனர். இந்த வழிமுறை பற்றிய புரிதல் தமிழ்த் தேசிய இனத்திற்கு மிக முக்கியமானது. ஏனெனில், வரலாற்றில் எப்போதுமில்லாத வகையில் தங்கள் சுதந்திரத்திற்கு மிக அருகில் நிற்கும் நாங்கள் எழுகின்ற புதிய சூழலில் உறுதிவாய்ந்தவர்களாக தேசிய இலக்குடன் அணிதிரண்டு நிற்பதற்கு இந்தப் புரிதல் முக்கியமானது.

* * * * *

நோர்வே இணக்க முயற்சிகள் ஏன் பல வீனப்பட்டன என்கின்ற கேள்வி எங்களின் அரசியல் நியாயத்தினை சர்வதேச அரங்கில் விவாதிப்பதற்கு முக்கியமானதாய் அமைகின்றது. சிங்கள பெரும் தேசியவாதத்தின் விட்டுக் கொடுப்பில்லாத தேங்கிப் போன அணுகுமுறைக்கும் - வரலாற்று அனுபவங்கள் ஊடாக வளர்ச்சி கண்ட தமிழ்த் தேசியத்தின் அரசியல் இராஜதந்திர அணுகுமுறைக்கும் இடையே பாலமிடும் கடுமையான பணியில் நோர்வே தோற்று வருகின்றது என்பதை 'வெறுமையான' அரசியல் பார்வையில் புரிந்து கொள்ளலாம். சிங்கள தேசியவாதம் தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரமான இயங்குதலை ஏற்றுக் கொள்ளாது என்பது எமக்கு வரலாற்று அனுபவம். ஆனால், இனச்சிக்கற் தணிப்பை இறுதி இலக்காகக் கொண்டு - உலக வல்லரசுகளின் பெரும் பின்பலத்துடனும் - பலமில்லியன் டொலர்கள் செலவில் நிபுணத்துவ ஆதரவுடனும் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச முயற்சி ஏன் பலவீனப்படுத்தப்பட்டது என்பதை சர்வதேச இனச்சிக்கல் தணிப்பு ஆய்வாளர்கள் வேறு விதமாகவே ஆய்வு செய்வார்கள். சர்வதேச தணிப்பு முயற்சிகள் முரண்பாட்டிற்கான விடயங்களை அரசியல் - பொருளாதார - இராணுவ - சமூகப்பண்பாட்டுத் தளங்கள் ஊடாகவே கையாளும். முரண்படும் தரப்புக்களிடையே உள்ள இடைவெளியை கணக்கிலெடுத்து, அந்த முரண்பாடுகளுடன் தொடர்புபட்ட சமூக - அரசியல் - இராணுவச் சக்திகளை கற்று, படிமுறை ஊடாகவும், பொறிமுறை ஊடாகவும் அந்தச் சக்திகளை நெருக்கி அருகருகே வரச் செய்யும். நோர்வேயும், அதன் ஆதரவுச் சக்திகளும் இதனை இலங்கைத் தீவில் முயன்றிருக்கும். 'அக்னிகீல' - கட்டுநாயக்க படைத்தள தகர்ப்பின் பின்னணியில் உடைந்து போய்கிடந்த சிங்கள அமைப்பு நோர்வேயின் தணிப்பு

https://tamileelamarchive.com/

முயற்சி உத்திகளை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. ஒருபுறம் தமிழ்த் தேசிய தலைமையுடன் இனச்சிக்கல் தணிப்புக்கான வழிமுறைகள் பற்றிப் பேசியது. தமிழர்களின் வலுச்சமநிலையை ஏற்று மதித்து நடப்பது போன்று ஒருபுறமும், தனக்குச் சாதகமான சர்வதேச சக்திகளை ஒருங்கிணைத்து பாதுகாப்பு வலை என்கின்ற பெயரில் நீண்டகால முரண்பாட்டிற்கான தயாரிப்புக்களில் மறுபுறமும் சிங்களம் ஈடுபட்டது. தமிழ் தேசிய தலைமை இந்த நோர்வே முயற்சிகளின் ஊடு தமிழர்களின் அரசியல் - இராஜதந்திர நலன்களுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.

* * * * *

சுமார் 4 வருடகால போர்நிறுத்தத்தின் பின்னர் நிலமைகளைப் பார்க்கும் போது,

- சிங்கள தேசியம் தன் தேக்கமடைந்த மையமான சித்தாந்தத்தை முன்னிறுத்தும் மகிந்த சிந்தனையை ஆளும் தத்துவமாக வரித்துக் கொண்டது.

-தமிழர் தரப்பு ஏமாற்றப்பட்டவர்களாகவும், தொடர்ந்தும் ஏமாற்றப்படுபவர்களாகவும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர்.

இதுவொரு பலவீன நிலையாகும். இதனால் அனைத்துலக முயற்சிகள் தொடர்பாக பலவித கேள்விகளை எழுப்புகின்றது. இந்த துருவ மயப்பட்ட நிலைக்கு பிரதான காரணம் என்ன? சிங்கள தேசியவாதம் இணக்கத்திற்கான போர்நிறுத்த காலத்தில் தன் தேக்கமடைந்த பார்வையை ஏன் விசாலப்படுத்தவில்லை அல்லது அவ்வாறு பார்க்குமாறு ஏன் வற்புறுத்தப்படவில்லை ஏன் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை என்கின்ற சனநாயகபூர்வமான நோக்கு சர்வதேச சக்திகளால் அங்கீகரிக்கப்படவில்லை

* * * * *

நோர்வேயும், இனச்சிக்கல் தணிப்பு முயற்சிக்கான சர்வதேச சக்திகளும் இலங்கை இனச்சிக்கல் தணிப்பினை பல்வேறு நிபந்தனைகள் கொண்ட படிமுறைகள் ஊடகவே அணுகி வந்தன. முக்கிய விடயங்களில் அரசுகளை ஆதரிப்பது என்கின்ற நிபந்தனை, ஒன்றுபட்ட இலங்கைத் தீவிற்குள் தீர்வு என்கின்ற நிபந்தனை, வலுச்சமநிலை அடிப்படையில் பேச்சுக்கள் நடப்பதாக ஒருபுறம் ஏற்றுக் கொண்டு மறுபுறம் அந்த வலுச்சமநிலைக்கு அடிப்படையான தமிழர்களின் படைநடவடிக்கைகளை வன்முறை என்பது அல்லது பயங்கரவாத தடை நடவடிக்கைக்கு உட்படுத்துவது எனப் பலவித நிபந்தனைகள் முயற்சிகளுக்கு குறுக்கே நின்றன. அதாவது, முரண்பாடு களைவு முயற்சிகளை வெளிப்படையாகவே பலவீனப்படுத்தும் நிபந்தனைகளுடனே நோர்வே செயற்பட்டது. பாதுகாப்பு வலை எனும் ரணிலின் பகிரங்கமான மிரட்டல் சர்வதேச தரப்பால் மறுக்கப்படவில்லை. தமிழர்களின் தேசிய தலைமையான புலிகளை பலவீனப்படுத்துவதற்கான பலவித நடவடிக்கைகள் சிறீலங்காவால் பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்ட போது புலிகளை தடை செய்யும் நடவடிக்கை ஐரோப்பிய யூனியனாலும், கனடாவாலும் மேற்கொள்ளப்பட்டது. இவை இலங்கை முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணியான சிங்களப் பெருந் தேசியவாதத்தினை வலுப்படுத்தின. தமிழ் மக்கள் படிப்படியாக நோர்வேயிலும், அதற்குப் பின்னால் செயற்பட்ட இணைத்தலைமைகள் மீதும் நம்பிக்கை இழப்பதற்கு இதுவே வழிவகுத்தது. சுருக்கமாக விபரிப்பின், இனச்சிக்கல் தணிப்பு முயற்சி முரண்பாடுகளின் இடைவெளியினை நிரப்பத் தவறிவிட்டது.

கூர்மையாகப் பார்த்தால், நோர்வேயும், சர்வதேச சக்திகளும் இலங்கைத் தீவின் இனச்சிக்கலை இரு தேசிய இனங்களுக்கு இடையேயான முரண்பாடு என்பதை பகிரங்மாக அங்கீகரிக்கவில்லை. இலங்கைத் தீவில் நிலவிய இரு தேசங்கள், இருபடைகள் என்கின்ற கள யதார்த்தத்தை அங்கீகரிக்கவில்லை. இனச்சிக்கல் பலவீனப்படுத்தப்பட்ட பின்னர் அமெரிக்கா தரப்பு இனச்சிக்கல் பற்றிய சில சாதகமான புரிதலை முன்வைத்த போதும் அது வடிவமைக்கப்பட்ட சர்வதேச அணுகுமுறையாக வெளிப்படவில்லை. வெறும் தந்திரோபாயரீதியிலான அறிவிப்புக்களாகவே அவை அமைந்தன. அவ்வாறாயின் எத்தகைய அணுகுமுறை பயன்தந்திருக்கக் கூடும் எனும் வினா எழுகின்றது. இலங்கை இனச்சிக்கல் தணிப்புத் தொடர்பாக வெளிவிவகார கொள்கை கற்கை பேராசிரியர் கலாநிதி சதானந்தன் ஒருவர் சுவராசியமான அவதானிப்பை இவ் வருட ஆரம்பத்தில் வெளியிட்டார். வன்முறை (படை மற்றும் சட்ட அமுலாக்கம்) என்பது அரசின் தனியுடமை. ஒரு நாட்டில் அவற்றினை பிற தரப்பு அனுபவிப்பதை அரசு எனும் வடிவம் ஏற்றுக் கொள்ளாது. எனவே அங்கு முரண்பாடு களைவு சாத்தியமாவதாயின் இந்தப் புற யாதார்த்தம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவில் இரு தரப்புக்கள் வன்முறையை பாவிக்கும் வலுவைக் கொண்டிருப்பதால் அங்கு தீர்வுக்கான அடிப்படை அந்த களயதார்த்தத்தை ஏற்றதாகவே இடம் பெறல் வேண்டும் எனப் பேராசிரியர் கூறினார். நோர்வே முயற்சிகளும், இலங்கைத் தீவில் இருதேசங்கள் அல்லது அரசுகள் எனும் கட்டமைப்பு நிலவுகின்றது என்பதையும், அந்த யாதர்த்தத்தின் அடிப்படையில் தணிப்பு முயற்சிகள் இடம்பெறுவதே முரண்பாடு களைவதற்கான சாத்தியமான வழிமுறை என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். மாறாக, இன்றுள்ள இலங்கைத் தீவின் சிக்கலை வெறுமனே பெரும்பான்மை, சிறுபான்மை முரண்பாடு எனும் தளத்தில் புரிந்து கொண்டது போன்று நோர்வேயும் சர்வதேச தரப்பும் நடந்து கொண்டன. மேலும் புலிகளுக்கும் சிறீலங்காவிற்கும் இடையே நிலவிய படைச்சம நிலையை அதன் அரசியல் பின்தளத்திற்கு அப்பால் சென்று இந்த சர்வதேச சக்திகள் குறித்து வைத்துக் கொண்டன. இவ்வாறு தான் பிரச்சனையைப் பார்க்குமாறு நோர்வே புறச்சக்திகளால் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது.

* * * * *

தமிழீழம் என்பது வெறுமனே இராணுவ பரிமாணத்தின் வெளிப்பாடல்ல. அது தமிழீழ மக்களின் நீண்ட அரசியல் போரின் விளைபொருள். மென்முறையிலான தங்கள் எதிர்ப்பு நசுக்கப்பட்டதன் பின்னணியில் வன்முறை வடிவில் சிங்கள தேசியவாத ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடிய தமிழ்த் தேசியம் இந்த வரலாற்று யதார்த்தத்தை உருவாக்கியது. பல்லாயிரக்கணக்கான போரளிகளின் அர்ப்பணிப்பு மற்றும் மக்களின் துன்பங்களும் - துயரங்களும் தோய்ந்த கட்டுமானத்திலேயே தமிழீழம் எனும் யாதர்த்தம் எழுந்தது. எனவே தமிழீழம் என்பது தீர்வுக்கான வழி என்கின்ற மேசையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டால் அது வரலாற்றுச் சக்திகளை புறம்தள்ளும் நடவடிக்கையாகவே அமையும். அந்த வழி மூடப்படுவது தமிழர் தரப்பு பேச்சுக்களுக்குப் போவதற்கு முன்னரே பலவீனப்படுத்தப்படும். அந்த படிமுறையில் சிங்கள தேசியவாதம் பலப்படுத்தப்படும். எனவே புதிதாக எழுகின்ற வலுச்சமநிலையில் தமிழீழம் என்பதை முரண்பாடு களைவுக்கான ஒரு வழி என்பதை சர்வதேச மற்றும் பிராந்திய சக்திகள் ஏற்றுக் கொண்டதாக அமைய வேண்டும். தமிழீழம் இலங்கைத் தீவின் மற்றைய தேசமான சிறீலங்காவுடன் எத்தகைய ஒத்துழைப்புடன் வாழ வேண்டும் என்பதுவே தீர்வுக்கான திறவுகோல். எங்கள் வரலாற்று சூழலின் விளைபொருளான தமிழீழம் இந்தியாவுடனான தொடர்பாடலாகவும் இருப்பினும் சர்வதேச சமூகத்துடனான தொடர்பாடலாகவும் இருப்பினும் முன்னிறுத்தப்பட வேண்டிய மைய கோட்பாடாக இருக்கும். அதுவே தென்னாசிய பிராந்தியத்தின் முக்கிய கடற்பாதையில் தளம்பல் நிலை தணிப்புக்கும் வழிகோலும். ■

https://tamileelamarchive.com/

களயதார்த்ததிற்குப் புறம்பாக 'இறைமை' என்றும் 'தன்னாதிக்கம்' என்றும் 'பிர தேச ஒருமைப்பாடு' என்றும் பேசிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் ஒடுக்குமுறைக்கான பிரகடனங்களே

■ சாரணன்



# ராஜபக்ஷாவின் நிபுணர்குழுவும் வேண்டாம் சர்வகட்சி மகாநாடும் வேண்டாம் அவரது கொள்கைப் பிரகடனம் என்ன?

இலங்கை அரசியலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சம்பந்தமான பிரகடனங்கள், வட்டமேசை மகாநாடுகள், சர்வகட்சி மகாநாடுகள், ஆணைக்குழுக்கள், நிபுணர் குழுக்கள் அனைத்துக்கட்சிகளுக்குமிடையேயானபொது உடன்பாடுகள், ஒப்பந்தங்கள், தீர்வுத் திட்டங்கள் என்பன போன்ற அனைத்துப்பதங்களையும் விடயங்களையும் அர்த்தமற்றவை என்று வர்ணிப்பதுகூடத் தவறு, மாறாக இவை அனைத்துமே எதிர்மறையானவை என்று கூறுவதே சரியானது. இலங்கை ஜனாதிபதியாக உள்ள திரு.மகிந்த ராஜபக்ஷ தற்போது அனைத்துக்கட்சி மகாநாடு, நிபுணர் குழு புறஉருவ தீர்வுத்திட்ட வரைவை தயாரித்தல் போன்ற மூன்று அரசினது விகடகவிகளை தனது நாடக மேடைக்குக் கொண்டுவந்துள்ளார். தமிழ்மக்கள் சம்பந்தமான இத்தகைய விகடகவி நாடகக்காட்சிகள் சிங்கள அரசியலில் ஒன்றும் புதிதல்ல. ஒரு வேளை ஆட்சியாளர்களுக்கு நெருக்கடிகள் ஏற்படும்போது அரசாங்கத்திற்கு இறக்கப்படும் இத்தகைய விகடகவித்தனமான காட்சிகள் ஆட்சியாளர்களுக்கு ஏற்படும் உடனடி நெருக்கடிகளைத் தணிக்க முதலில் உதவுவதுடன் மறுவளமாக இத்தகைய நாடகக் காட்சிகள் பிரச்சினையை ஓர் எதிர்மறையான அந்தலைக்கு இட்டுச்சென்றும் விடுகின்றன.

கடந்த அரை நூற்றாண்டிற்கு மேலான சிங்கள அரசியல் வரலாற்றில் யாராவது ஒரு சிங்களத் தலைவர் இதய சுத்தியுடன் தானே முன்வந்து ஒரு தீர்வை மக்கள் முன்னிலையில் முன்வைத்துள்ளாரா? இல்லை என்ற பதிலை ஒரு சிறுபிள்ளைகூடப்பட்டெனச் சொல்லிவிடும். முழு உலகின் அரசியல் நடைமுறைப் போக்கின்படி பார்த்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சித் தலைவராயிருக்கும் ராஜபக்ஷ தனக்குரிய பொறுப்பின் படியும், தன் பதவிக்குரிய தற்துணிவு அதிகாரத்தின் படியும் தானேமுன்வந்து ஒரு தீர்வை மக்கள் மத்தியில் முன்வைத்து அதற்கு அவர் ஆதரவைத் திரட்ட வேண்டியதுதான் அவரது முதற்பணி. அல்லது அவர் தனது கட்சியின் தீர்வை முன்வைக்க வேண்டும், அல்லது அவர் தனது அரசாங்கத்தின் தீர்வை முன்வைக்க வேண்

https://tamileelamarchive.com/

டும். இந்த மூன்றையுமோ அல்லது இந்த மூன்றில் ஏதோ ஒன்றையேனும் முன் வைக் காத ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரி டமிருந்து எதைத்தான் எதிர்பார்க்க முடி யும்.

அண்மைக்காலச் சிறுஉதாரணம் ஒன் றை நோக்குவோம். தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி திரு.ஜோர்ச்புஷ் இந்தியாவுடன் அணுத்தொழிநுட்பப் பரிமாற்றம் சம்பந் தமான ஓர் ஒப்பந்தம் ஒன்றில் முதலில் கையெழுத்திட்டார். அமெரிக்கப் பேராயத் தில் அவ்வொப்பந்தத்திற்கு ஆதரவு கிடைப் பது கடினமென்று நம்பப்பட்ட பின்னணியில் புஷ் அதற்குக் கையெழுத்திட்டுவிட்டு அவ் வொப்பந்தத்தை முற்றிலும் நியாயப்படுத்தி ஆதரவு திரட்டத்தொடங்கினார். அதில் அவர் வெற்றிமுகம் கொண்டார். திரு.ராஜபக்ஷ அவ்வாறான ஒரு நடைமுறைப் போக்கைச் சிறிதும் கைக்கொள்ளாமல் சர்வகட்சிப் பொது உடன்பாடு என்றும், நிபுணர்குழு என்றும் நாடகமாடுகிறார்.

தமிழ்மக்களது இனப் பிரச்சினை இப் போது நிபுணர் விசாரணைக்குழு அமைப்பு விவகாரமல்ல. மாறாக கொள்கைத் தீர்மா னம் பற்றிய பிரச்சினையேயாகும்.

மாவீரர் தினமும், தமிழீழத் தேசியத் தலைவரது மாவீரர் தின உரையும் தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் உணர்ச் சிபூர்வ நிகழ்வாகவும், கொள்கைப் பிரகடன உரையாகவும் அமைகின்றன. அதே வேளை மாவீர்தின உரை யானது உள் நாட்டு, வெளிநாட்டு ரீதியான அரசியல் அரங்கிலும் ஊடக அரங்கிலும் அவ்வுரை விடுதலைப் புலிகளது உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடன உரையாக அவதானிக் கப்படுகின்றது. அதாவது பிரித்தானியாவில் மன்னரது சிம்மாசனப்பிரசங்க உரைபோல, இலங்கையில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரைபோல, தமிழீழத்தில் தேசியத் தலைவரது மாவீர்தின உரையானது கடந்த காலங்களிலும்சரி இனிமேல் வரப்போகும் காலங்களிலும் விடுதலைப்புலிகளின் முழு நீள உத்தியோகபூர்வ, அதிகாரபூர்வகொள் கைப் பிரகடன உரையாக வடிவம் பெற் றுள்ளது. இதன்படி பார்க்கையில் 2004 ஆம் ஆண்டு மாவீர்தினஉரையில் எழுப்பப்பட் டுள்ள முக்கியமான ஒரு கோரிக்கை இங்கு கவனத்திற்குரியது. அதாவது,

"ஜனாதிபதி சந்திரிகாவிடமும், அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியிட மும் எமதுவிடுதலை இயக்கம் ஒருவேண்டு கோளை முன்வைக்கவிரும்புகிறது. அதா வது தமிழ்மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து அவர்களது மூலா தாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து உங்களது கட்சிகளின்கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்" என்பதே.

இவ்வாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக் கைக்குதிருத்தமான, சரியான ஒருபதிலை அளிப்பதற்குப் பதிலாக 'சமாதானத் தீர்வு' என்றும் 'கௌரவமான தீர்வு' என்றும் 'நேர டிப் பேச்சு' என்றும் கூறி ஏமாற்றுகரமான மேற்படி நிலைப்பாட்டை எடுப்பதற்குப் பதி லாக தற்போது ஒரு கொள்கை வகைப்பட்ட பிரகடனத்தை ஜனாதிபதி தன் சார்பிலும், தனது கட்சியின் சார்பிலும், தனது கூட்ட ணிக்கட்சி அரசாங்கத்தின் சார்பிலும் இப் போது முன்வைப்பதற்குப் பதிலாக அனைத் துக்கட்சிமகாநாடென்றும், நிபுணர்குழு என் றும் பித்தலாட்டமாடுகிறார்.

எனவே சர்வகட்சி மகாநாடு, நிபுணர் குழு புறஉருவரைவு, உள்ளுருவ வரைவு என்றெல்லாம் ஏமாற்று வித்தைகளைப் புரி யாமல் மேற்படி 2004ஆம் ஆண்டு எழுப்பப் பட்ட மாவீர்தின உரையின் கோரிக்கைக் குப்பொருத்தமான ஒரு கொள்கைத்திட்ட பிரகடனப் பதிலைத்தான் ஜனாதிபதி ராஜ பக்ஷமுன்வைக்க வேண்டும்.

களயதார்த்ததிற்குப் புறம்பாக 'இறை மை' என்றும் 'தன்னாதிக்கம்' என்றும் 'பிர தேச ஒருமைப்பாடு' என்றும் பேசிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் ஒடுக்குமுறைக்கான பிரகடனங்களே தவிர அவை சமாதான முயற்சிகளோ தீர்வுகா ணும் எண்ணங்களோ அல்ல

ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்று ஒரு காலப்பொருத் தமற்ற யதார்த்தத்திற்கு முற்றிலும் முர ணான கொள்கையைக் கொண்டுள்ள ஜனா திபதியால் ஒரு பயன்பொருத்தமான, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வை முன் வைக்க முடியாது. ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வைக் காணல் என்பதன் பொருள் நிர்வாகப் பரவலாக்கலே தவிர, அரசியல் அதிகாரக் கைமாற்றல் அல்ல. அத்தகைய ஒரு தீர்வை, ஒற்றையாட்சி முறையின் கீழான தீர்வை, அத்தகையநிர்வாகப் பரவ லாக்கலை இலங்கை தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தமிழீழ மக்களது அளப்பரிய தியாகங்களின் பின்பும், அளப்பரிய இழப்புக்களின் பின்பும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் விகடகவி நாட கச் காட்சிகளை தமிழ்மக்கள் சினத்துட னேயே நோக்குகின்றனர். ■



**ஒற்றையாட்சி முறையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்று ஒரு காலப்பொருத்தமற்ற யதார்த்தத்திற்கு முற்றிலும் முரணான கொள்கையைக் கொண்டுள்ள ஜனாதிபதியால் ஒரு பயன்பொருத்தமான, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வை முன்வைக்க முடியாது. ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வைக் காணல் என்பதன் பொருள் நிர்வாகப் பரவலாக்கலே தவிர, அரசியல் அதிகாரக் கைமாற்றல் அல்ல. அத்தகைய ஒரு தீர்வை, ஒற்றையாட்சி முறையின் கீழான தீர்வை, அத்தகையநிர்வாகப் பரவலாக்கலை இலங்கை தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.**

● நன்றி: விடுதலைப்புலிகள்

https://tamileelamarchive.com/



# ப.அருந்ததியின் நான்கு கவிதைகள்

## பாதை

மந்தாரம்
கவிழ்ந்து கிடக்கிறது
மனசு முழுக்க
கலங்காத மௌனத்திரள்
கௌவிப் பிடித்த
பொழுதொன்று போகத்தெரியாமல்
நின்று தனிக்கிறது.

வைகறையில் நினைவுகள்
ஓடிக்கொண்டு இருக்கிறது
அந்தியின் சிவந்த வானம்
சித்திரமாய் பதிந்து மீள்கிறது
கிடைத்ததும்
கைநழுவிப் போனது
எட்டாததும்
எண்ண எண்ண
புகை முகில் கூடிக்
கருக் பொள்கிறது கண்ணீர்
வானம் அடைமழையில்
அழுது போக்கத் தெரியாது
மூடிக்கொண்டிருக்கிறது
வார்த்தைக்குள் வாழ்வு
நிழலிட
வாழ்வில் வாழ்வின் வார்த்தையின்
தாகத்தோடே....

## வாழ்வு

ஓ மனிதமே
அழிந்து போகும்
அற்புதத் தீவும் நீயே
ஆகும் புதுப் பிரபஞ்சமும் நீயே
ஒரு புறத்தில்
அழிவு நோக்கியும்
மறுபுறத்தில்
ஆரோக்கியமாய் வளர்வதுமாய்
இரு திசைகளில்
பயணிக்கும்
பகுத்தறிவுப் பிராணியே
மனிதா
'ஒரு நாள்
உன்னோடு சேர்த்து
உலகையே அழிக்கப்போகிறாய்'
என்ற அச்சுறுத்தலை
பூமி தன்
கால நிலைகளின் கோப மூச்சிரைப்பில்
அறிவித்துக் கொண்டிருக்கிறது
விஞ்ஞான மாயத்தில்
உலகே சுருங்கி
கைகளில் அடங்கிப் போனாலும்
வாழ்வோ
அச்சுறுத்தல்களால்
கை நழுவிக் கொண்டிருக்கிறது....

https://tamileelamarchive.com/

## மௌனம் கிழிந்த பொழுதுகள்

மூர்க்கம் பிடித்த பேய்கள்
முள்வேலிக்குள் பிதுங்குகின்றன
தீக்குள் தகிக்கும் கொடுமை
நாள் தோறும் விரிகின்றது
சாக்கடை விரித்த தூதன்
இரவுகளின் வலம் வருகின்றான்
மரணம்....
ஒரு பகலைப் போலவும்
ஓர் இரவைப் போலவும்
அன்றாடம் நிகழ்கின்றது
வெட்டுண்டவனின் குருதியில்
தெருவெல்லாம் குளிக்கிறது
இரவுகளால் திருடப்பட்ட பெண்ணொருத்தி
கிணற்றுள் மிதக்கிறாள்
வெளிச் சொல்லாத வலியைச் சுமந்து
ஊதி ஊதிப் பருத்திற்று அவளுடல்.
நாற்றம் பிடித்தவர்கள்
வெறிச் சிரிப்போடு திரிய
உக்கிப் போவதற்காய்
புதைக்கப்படுகிறது அவளது பூதவுடல்.
நெடு மௌனத்தோடு
கிடக்கிறது கடல்
சுனாமிக்குப் பின்னரும்....
கடற் படையின் வெடி தீர்ப்பில்
பல உடல்கள் மிதந்ததன் பின்னரும்....

நிலாவைப் பார்க்கவும்
மறுக்கின்றன குழந்தைகள்
இரவிலும் கூட
கிபிர்களின் இரைச்சல் பெருகுவதாய்
திடுக்குற்று விழிக்கின்றன.

சட்டங்கள் ஊரை அடக்கி
பேய்களை உசிப்பேற்றி விடுகின்றன
ஆலயக்கடவுளர்களின்
குரல்வளை திருகி
மௌனப்படுத்திய பின்
மனிதப்பலி நடக்கிறது.

போர்ச் சகதிக்குள்
சமாதான நிலவு
மெல்ல மெல்ல புதைக்கப்பட்டுவிட்டது
இனி.... அழகான இரவில்லை.
மகிழ்வான பயணமில்லை.
நோய் தீர்க்க மருந்தில்லை.
பசி தீர்க்க உணவில்லை.

## தீர்ப்பு

இதோ மனிதர்கள்
ஒவ்வொரு தடவையும்
கூண்டில் ஏறியும்
தீர்ப்பிடாமல் திரும்பி அனுப்பும்
ஆதார சக்தியாய் கடவுள்...

அதனால் மனிதர்களே தீர்ப்பிடுகிறார்கள்
மனிதர்களை
பூமி முழுக்க நிறைகின்ற
வெற்றுக் கூண்டுகளை விட்டு
விலகி நடக்கும் கால்கள்
சிறைகளில் அடைக்கப்படுகிறது
சுதந்திரக் காற்று மூச்சுத் திணறும்
குழந்தைகளைக் கூட
கண்டுகொள்ளாமல்.
இப்போதும் தீர்ப்பிடவேயில்லை கடவுள்
பொய்களில் முடியப்படும் உறவு
காலங்களில் காணாமல் போய்விடும்
அன்பு இவைகளுக்காய்.
இறுதியாக
பச்சாத்தாபத்திற்காய்
அபிசேபிக்கப்படும் ஆலயங்கள்.



https://tamileelamarchive.com/



சாவிலும் வாழ்வோம் - பிரித்தானியா

# தடைகளுக்கு நன்றி

■ சபேசன்

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் பலவிதமான தடைகளையும் அரசியல் அழுத்தங்களையும் சந்தித்து நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டம் மட்டுமல்ல இனவிடுதலைக்காகவும் தேசிய விடுதலக் காகவும் நடைபெறுகின்ற பல விடுதலைப் போராட்டங்கள் கூட இவ்வாறான பல தடை களையும் அழுத்தங்களையும் எதிர்நோக்கி யிருப்பதை நாம் காண முடிகின்றது. உலக வரலாற்றில் வெற்றி பெற்ற விடுதலைப் போராட்டங்களை ஒப்பு நோக்கும்போது அந்த போராட்டங்களும் இவ்வாறான பல தடைகளையும் அழுத்தங்களையும் எதிர் கொண்ட பின்தான் வெற்றி பெற்று விடு தலை அடைந்தமையையும் நாம் காணக் கூடியதாக உள்ளது. ஒரு விடுதலைப் போராட்டம் என்பதானது தனது இலக்கு குறித்த சரியான பாதையில் பயணிக்கும் போதுதான் இவ்வாறான எதிர்ப்புக்களைச் சந்திக்க நேர்ந்துள்ளதை போராட்ட வரலா றும் சுட்டிக் காட்டும். அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பதானது தனது இலக்கு குறித்த மிகச்சரியான பாதையில் பயணிக்கின்றது என்பதைத்தான் இத்தகைய தடைகளும் அழுத்தங்களும் சான்று பகரு கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தடைகளும் அழுத்தங்களும் போராட்டம் சரியான பாதையில் பயணிக் கின்றது என்பதைச் சுட்டிக் காட்டுவ[illegible] மட்டும் நின்று விடாது இந்த விடு[illegible] போராட்டம் மேலும் வீறு கொண்டு [illegible] மிகப் பெரும் வேகத்தில் முன்னேறுவ[illegible] அடிப்படையில் உதவப்போகின்றது [illegible] தையும் எதிர்காலம் சுட்டிக் காட்டும். [illegible] விடயம் குறித்துச் சில கருத்துக்களை [illegible] வைத்துத் தர்க்கிக்க விழைகின்றோம். [illegible] கள் எவ்வாறு விடுதலைப் போராட்ட[illegible] உதவுகின்றன என்பது குறித்து சிந்திப்[illegible]

தமிழீழ மக்களின் விடுதலைப் [illegible] டத்தை ஓர் உள்ளூர்ப் பிரச்சனை [illegible] அதில் உலக நாடுகள் தலையிட[illegible] என்றும் முன்னைய சிறீலங்கா அரசு[illegible]

https://tamileelamarchive.com/

வந்த காலமும் ஒன்றிருந்தது. ஆனால் சிறீலங்கா அரசுகள் எதிர்பார்த்ததற்கு எதிர் மாறாக தமிழீழ விடுதலைப் போராட்டம் வலுப்பெற்று தமிழர் தாயக மண்ணின் பெரும்பாலான பிரதேசங்களை மீட்டெடுத் ததோடு மட்டுமல்லாது வெளிநாடுகளிலே புலம்பெயர்ந்த மக்கள் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் சக்தியாகவும் உருவாகின் றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டம் இவ்வாறு புதிய பரிமாணங்களை எடுத்து வருவதை உணர்ந்த பின்புதான் சிங்கள பௌத்த இனவாத அரசுகள் வெளிநாடு களின் தலையீட்டை கோர ஆரம்பித்தன. தமிழர்களின் தரப்பு பலமாக இருந்த கார ணத்தினால் தான் சமாதானப் பேச்சு வார்த் தைகள் ஆரம்பமாகின.

இச்சந்தர்ப்பத்தில் நாம் எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ள கருத்தை மீண்டும் கூறுவது பொருத்தமானதாகும். அன்றிலி ருந்து இன்றுவரை நடைபெற்ற எந்த ஒரு சமாதானப் பேச்சுக்களும் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த நியாயமான நிரந்தரமான, கௌரவமான, நேர்மையான சமாதானத் தீர்வை பெற்றுத் தரவில்லை. போடப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. ஏற்றுக் கொள்ளப்பட்ட சரத்துகளும் அமலாக்கப் படாமல் பயன் அற்றவையாகப் போயின. ஒரு விடயம் மட்டும் வெளிப்படையாகியது . தமிழர்கள் தரப்பு பலவீனமாக இருந்த போதும் சரி பலமுள்ளதாக இருக்கின்ற போதும் சரி எந்தச் சமாதானப் பேச்சுக்களும் முழுமையாக நிறைவு பெறுவதற்கு எந்தச் சிங்கள அரசுகளும் உடன்படப்போவ தில்லை என்ற கருத்து மீண்டும் மீண்டும் நிருபணமாகியது. இந்தக்கருத்தை நாம் கடந்த நான்கு ஆண்டு காலத்திற்கும் மேலாக பல்வேறு கட்டங்களில் தர்க்கித்தே வந்துள்ளோம்.

தமிழீழ தேசியத் தலைமையானது மிகச் சரியான மிகத்தெளிவான கருத்தை முன் வைத்தது. சமாதான பேச்சுவார்த்தைகள் ஊடாக உரிய உகந்த சமாதானத் தீர்வை அடைய நாம் விரும்புவதாலும் அதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதாலும் நாம் நேசக்கரங்களை நீட்டி சிறீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம் பிக்க விழைகின்றோம். என்று தமிழீழ தேசியத்தலைமை தெளிவாக தெரிவித்தி ருந்தது. அதேவேளையில் சிறீலங்கா அரசின் இழுத்தடிப்புச் செயல்களின் போதும் முன் னுக்கு பின் முரணான கொள்கை விளக்கங் களின் போதும் தமிழீழ தேசியத் தலைமை தனது அதிருப்தியையும் கவலையையும் வருத்தத்தையும் கண்டனத்தையும் தெரி வித்தே வந்துள்ளது. சமாதானப் பேச்சுவார்த் தைகள் அடுத்த கட்டத்திற்கு சரியான முறையில் நகர்ந்து செல்லவேண்டும் என்ப தற்காக உரிய அழுத்தங்களை மட்டுமல் லாது நீண்ட நெகிழ்ச்சிப் போக்கினையும் தமிழர்களின் தேசியத்தலைமை கடைப்பிடித் தது.

மேற்கூறிய விடயங்களை நாம் பல கருத்துத் தளங்களில் வைத்துத் தர்க்கித்து வந்த போதும் புலம் பெயர்ந்த தமிழ் மக் களிடையே அவை சரியான தாக்கத்தை ஏற்படுத்த வில்லை என்பது வருந்தத்தக்க உண்மையேயாகும். சமாதானப்பேச்சு வார்த்தைக் காலங்களை நீடிப்பதன் மூலம் அதனூடே ஏராளமான எதிர்பார்ப்புக்களை யும், நம்பிக்கைகளையும், மகிழ்ச்சியையும் தமிழ் மக்களிடையே மிகக் குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி அவர்களுடைய விடுதலை வேட்கை உணர்வை நீர்த்துப் போக வைப்பதற்காக, சிறீலங்கா அரசுகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன. என்ற எமது தர்க்கமும் பெரி தாக எடுபடவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் சரியான முறையில் நகர்ந்து செல்கின்றன என்ற மாயக்கருத்தை சிங்கள அரசுகளும் அவற் றின் ஊடகங்களும் பரப்பி வந்தது ஒரு புறம் இருக்க இவற்றிற்கு தெரிந்தோ தெரியா மலோ தமிழ் ஊடகங்களும் துணை போனது ஒரு வருந்தத்தக்கது, ஆனால் உண்மை யான விடயமுமாகும். சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த பரபரப்பான செய்தி கள் வெளிவரும்போது அவற்றிற்கு தனி முக்கியத்துவம் தரும் வகையில் செய்தி களும், செவ்விகளும் கட்டுரைகளும் வெளி யாகின. சிறீலங்கா அரசுகளின் எதிர்பார்ப்பு களுக்கு இசைந்த வகையில் நற்செய்தி களை நாடி நின்ற நல்மனம் கொண்ட புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் இவற்றை விருப்பமுடன் உள்வாங்கினார்கள்.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் என் கின்ற காலத்தின் ஊடாக விடுதலைப் போராட்ட உணர்வுகளை மழுங்கடித்து நீர்த்துப் போகச் செய்கின்ற ஏகாதிபத்திய ஒடுக்கு முறையாளர்களின் எண்ணங்கள் செயலுருவாக்கம் பெற்றன. ஆயினும் தமிழீ ழத் தேசியத் தலைமை அடுத்த கட்ட நடவ டிக்கைகளை மிகச்சரியான முறையில் முன் னெடுத்தது அவற்றைத் தடுப்பதற்காக வெளி யரங்கில் தடைகளும், அழுத்தங்களும் மேற் கொள்ளப்பட்டன.

ஒரு புறத்தில் தமிழீழ மக்களைக் குறி வைத்து அதற்காகத் தமிழீழ விடுதலைப்புலி கள் மீது தேவையற்ற தடைகளும் அழுத் தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளையில் சிறீலங்கா அரசு தன்னை வழமையான தமிழின அழிப்பை உத்தி யோகபூர்வமற்ற முறையிலும் உத்தியோக பூர்வமான முறையிலும் ஆரம்பித்தது. இவை கள் காரணமாக உலகதமிழினம் மீண்டும் சிலிர்த்தெழுந்தது. மேற்குலகம் தமிழ்மக்க ளுக்கு நீதியையும் சமாதானத்தீர்வையும் நன்மையையும் பெற்றுத்தந்து உதவும் என்று புலம் பெயர்ந்த தமிழ்ஈழ மக்கள் நம்பினார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட உலக நாடுகளின் நடுநிலை பிறழ்ந்த ஒருபக்க சார்பான நடவடிக்கைகள் புலம் பெயர்ந்த தமிழீழ மக்களின் எதிர்பார்ப்பை முற்றாக குலைத்து விட்டன. சிறிலங்கா அரசுகளின் சம்பந்தப்பட்ட உலக நாடுகளின் தேவை யற்ற தடைகளும், அழுத்தங்களும் புலம் பெயர்ந்த தமிழீழத்தவர்களின் சமீபத்திய தேக்க உணர்வுகளை மறையச்செய்தன.

இதற்காக தடைகளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இன்று உலகளாவிய வகையில் புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசின் தமிழின அளிப்புகளுக்கு எதிராக மட்டுமல்ல உலக நாடுகள் தமிழீழ விடுலைப்புலிகள் மீது விதித்து வருகின்ற தேவையற்ற, அநாவ சியமான தடைகளுக்கும், அழுத்தங்களுக் கும் எதிராகவும் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

### தடைகளே உங்களுக்கு நன்றி

தமிழீழ மக்கள் இன்று புலம் பெயர்ந்து பல உலகநாடுகளில் செறிவாக வாழக்கின் றார்கள் தற்காலத் தொழில்நுட்பமும் தொலைத்தொடர்பு சாதனங்களும் தூர தேசப் பயணங்களுக்கான முன்னேற்றங் களும் எமது மக்களை உறவு ரீதியாக நட்பு ரீதியாக தொழில் ரீதியாக உதவி வருகின் றன. ஆனால் உலக நாடுகள் இன்று அநாவ சியமான ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக விதித்து வருகின்ற தடைகள் உலகெல்லாம் புலம் பெயர்ந்த எமது தமிழீழ மக்களை இன்று உணர்வு ரீதியாக முழுமையாக ஒருங்கிணைக்கின்ற பணியைச் செய்து வருகின்றன. இன்று இந்த உலக நாடுகள் தமிழீழ விடுதலைப் போராட் டத்தை நசுக்க வேண்டும் என்று நினைத்து போடுகின்ற தடைகள் ஈற்றில் போராட்டத்தை உசுப்பி விடுவதற்கான பணிகளைத்தான் செய்து வருகின்றன.

### அதற்காக தடைகளே உங்களுக்கு எமது நன்றி

அதேவேளையில் இன்னமொரு முக்கிய மான மிக முக்கியமான விடயத்தைப் புலம் பெயர்ந்த எமது இரத்த உறவுகளுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றோம். எந்த ஒரு உலக நாட்டின் ஆதரவையும் எதிர் பார்த்து தமிழீழ விடுதலைப் போராட்டம்

https://tamileelamarchive.com/



சாவிலும் வாழ்வோம் - பிரான்ஸ்

ஆரம்பமாகவில்லை. விடுதலைப் போராட்ட வரலாற்றை கூர்ந்து கவனித்தால் ஒரு முக்கிய விடயம் புலப்படும். பெரும்பாலான விடுதலைப் போராட்டங்களுக்கு மேற்குலகம் எதிர்ப்பு தெரிவித்தே வந்துள்ளது. அதற்காக விடுதலைப் போராட்டங்கள் ஆரம்பமாகாமல் இருந்ததில்லை. தங்களது போராட்டங்களில் வெற்றியை பெறாமல் இருந்ததுமில்லை. இப்படிப்பட்ட விடுதலைப் போராட்டங்களைத் தேவையற்றுத் தடை செய்யப் புகுந்ததன் காரணமாகவே இவ்விடுதலை இயக்கங்கள் வீறு கொண்டு எழுந்ததைப் போரியல் வரலாறும் சுட்டிக் காட்டும். நீதியை எதிர்பார்த்தது நிற்கின்ற ஓர் இனத்தின் மீது மீண்டும் மீண்டும் அநீதி இழைக்கப்படும் போது போராட்டம் வலுப்பெறுவதை தடுக்க முடியாது. முன்னர் சிறீலங்காவில் ஆயுதம் போராட்டத்தை தடை செய்யும் முகமாகப் பயங்கரவாதச் தடைச்சட்டம் (PTA) கொண்டு வரப்பட்ட பின்னர்தான் ஆயுதப் போராட்டம் புதிய பரிமாணங்களைக் கண்டது என்பதையும் ஓர் உதாரணமாக கொள்ளலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான வெளிநாடுகளின் தடைகளும் அதே விளைவுகளைத்தான் கொண்டுவந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் அதற்காக தடைகளுக்கு எமது நன்றி.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் வரக்கூடிய ஒரு மிக முக்கியமான பிரச்சனை குறித்து புலம் பெயர்ந்த தமிழீழத்தவர்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம். இது குறித்து நாம் முன்னரும் பலதடவைகள் தர்க்கத்து வந்துள்ள போதும் அதனை மீண்டும் ஞாபகப்படுத்துவதானது இக்கட்டுரையின் நோக்கத்தோடு ஒத்துப்போகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீது தேவையற்ற தடைகளையும் அழுத்தங்களையும் விதித்து வருகின்ற மேற்குலகம் இன்னும் சிறிது கடும் போக்கைக் காட்டி விட்டு சற்று நெகிழ்ச்சித்தன்மையை கடைப்பிடிக்க கூடும் என்று எதிர்பார்க்கின்றோம். அந்த நெகிழ்ச்சித்தன்மை மேலும் நீடித்து விடுதலைப் புலிகளின் மீதான தடைகளும், அழுத்தங்களும் மெதுவாக விலக்கிக் கொள்ளப்படுவதையும் நாம் எதிர்பார்க்கலாம்.

பொதுவாக நம்மவரையெல்லாம் மகிழ்ச்சி கொள்ள வைக்கக் கூடிய அந்த நேரத்தில்தான் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என்று நாம் இப்போதேயே கேட்டுக் கொள்கின்றோம். ஏனென்றால் அந்த வேளையில்தான் தமிழர் பிரச்சனையை தீர்க்காத ஒரு பொருத்தமற்ற தீர்வுத் திட்டம் ஒன்றை இந்த உலக நாடுகள் தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு முயற்சிக்க கூடும். என்று நாம் ஐயப்படுகின்றோம். இப்படிப் பொருத்தமற்ற தீர்வுத் திட்டம் ஒன்றைப் பின்னாளில் திணித்து விடுவதற்காகத்தான் தேவையற்ற தடைகளையும், அழுத்தங்களையும் இந்த உலகநாடுகள் முன்னதாகவே பிரயோகிக்கக் கூடும். என்றும் நாம் தொடர்ந்தும் தர்க்கித்து வந்துள்ளதை வாசகர்கள் அறிவீர்கள்.

ஆகவே தடைகள் விலக்கப்படும்போது புதிதாக ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் போதும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கடந்த நான்கு ஆண்டு காலம் உருவாக்கிய மயக்க நிலை எதிர் காலத்தில் தடைகள் நீக்கப்படும்போது மீண்டும் வரக் கூடும். அது குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் இது முன்னைய சமாதானத்திற்கான காலத்தையும் விட ஆபத்தானது.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான அர்ப்பணிப்பு என்பதானது மிக உயர்ந்தது என்பது மட்டுமல்ல தனித்துவமானதும் ஆகும். போராளிகளின் தியாகங்கள் எவ்வாறு ஒப்பிட முடியாத உயர்வானதோ, அதேபோல புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் அர்ப்பணிப்பும் இன்னொரு வகையில் ஒப்பிட முடியாத உயர்ந்ததாகும். போராளிகள் விலை மதிக்க முடியாத தமது உயிர்களை தமது மக்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்பார்கள். புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் போராட்டத்தின் வெற்றிக்காக தாம் வாழுகின்ற வாழ்க்கையை தொடர்ந்தும் அர்ப்பணித்து வருகின்றார்கள், வருவார்கள், வருங்காலம் புலம் பெயர்ந்த தமிழீழ மக்களின் மகத்துவத்தை பறை சாற்றும் காலமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

https://tamileelamarchive.com/





தமிழீழ விடுதலைப்புலிகளின் முதற் தாக்குதற் தளபதி லெப்.சீலன் அவர்களின் 23ம் ஆண்டு நினைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொள்கின்றார்.

15.07.2006

https://tamileelamarchive.com/

"உன்னையும் எதிரியையும் நீ அறிந்திருந்தால் நூறு சமர்களிலும் நீ பயமின்றி வெற்றியீட்டலாம்"

"உன்னை மட்டுமே நீ அறிந்திருந்தால் ஒவ்வொரு வெற்றிக்கும் நீ அதிகம் இழந்திருப்பாய்"

"உன்னையும் எதிரியையும் நீ அறியாவிட்டால் ஒவ்வொரு சமரையும் நீ இழந்துவிடுவாய்"

சன் சூ (Sun Tzu)

# அம்பலமாகிய அரசின் நிழல்போர்

சிங்கள அரசின் நிழல்போரின் உண்மை முகம் 14.07.2006 அன்று வாகனேரியில் மீண்டும் அம்பலமாகியுள்ளது. வாழைச்சேனை இராணுவமுகாமில் இருந்து இராணுவ கப்டன் தர அதிகாரியின் தலைமையில் ஏறத்தாள 150 விசேட பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் ஐந்து மைல் தூரத்திற்கு புலிகளின் பகுதிக்குள் ஊடுருவி இருந்தார்கள். புலிகள் மீது ஒரு பெரிய தாக்குதலை நிகழ்த்திவிட்டு கருணாகுழு மிகப்பலமாக கிழக்கில் இயங்குகிறார்கள் என பிரச்சாரத்தை முடுக்கி விடுவது தான் இதன் முக்கிய இலக்கு.

ஆனால் புலிகளின் வேவு அணிகள் மிக நுட்பமாக இராணுவத்தின் நகர்வுகளையும் அதன் உள்ளார்ந்த நோக்கத்தையும் அறிந்து கொண்டதுடன் கண்காணிப்பு குழுவிற்கும் இது தொடர்பாக தெரிவித்தும் இருந்தனர். இராணுவத்தினர் கண்ணில் தென்பட்ட போராளிகளையும் பொதுமக்களையும் தாக்கிவிட்டு இருபிரிவாக பிரிந்து அடுத்த நகர்வுக்காக தயாராகிய போது புலிகளின் சிறப்பு அதிரடிஅணிகள் இராணுவத்தின் 75 பேர் கொண்ட அணியை சுற்றிவளைத்து தாக்கத்தொடங்கின.

இராணுவம் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை தனது படைகளின் பலத்தை ஒன்றிணைக்க முன்னர் புலிகளின் படையணி இராணுவத்தின் வலுவை சிதைத்து விட்டது. இறந்தவர்களையும் கைவிட்டு விட்டு காயமடைந்தவர்களுடன் முகாம் நோக்கி தப்பியோட தெடங்கியது இராணுவம். இவர்களின் பின்வாங்குதலுக்கு உதவியாக மியாங்குளம், வாழைச்சேனை காகித ஆலை, கரடிக்குளம் ஆகிய முகாம்களில் இருந்து வாகனேரி நோக்கி எறிகணை தாக்குதலும் நிகழ்த்தப்பட்டது.

12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இவர்களின் சடலங்களும் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது. அத்துடன் இராணுவ கோப்ரல் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இந்த நடவடிக்கை புலிகளை பொறுத்தவரை பெரிய இராணுவ, அரசியல் வெற்றியாகவே ஆய்வாளர்களால் நோக்கப்படுகின்றது.

சண்டை நடைபெற்ற பிரதேசம் முழுக்க முழுக்க புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி. அதைவிட கைப்பற்றப்பட்ட சடலங்கள்,



https://tamileelamarchive.com/

கைது செய்யப்பட்ட அதிகாரி என்பன அரசின் இரட்டை வேடத்தை மிகவும் தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளது. வழமை போல இராணுவப்பேச்சாளர் அது இராணுவக் கட்டுப்பாட்டு பகுதி என கூறத்தயங்கவில்லை. இதே போலவே வெலிகந்தையில் நடந்த சித்திரை மாதம் நடத்தப்பட்ட ஒட்டுக் குழுக்களின் முகாம்கள் மீதான தாக்குதலின் போது அது அரச கட்டுப்பாட்டு பகுதி அல்ல என இராணுவப்பேச்சாளர் தெரிவித்திருந்தார். தங்களின் இலைமறை யுத்தம் அம்பலமாகிவிட்டதே என்ற பதற்றத்தின் வெளிப்பாடே இராணுவ பேச்சாளரின் இந்த கூற்றுக்கள்.

அன்று இராணுவம் புலிகளை தாக்கிவிட்டு தப்பிச்சென்றிருந்தால் கருணாகுழு தாக்கியதாகவே மறுநாள் செய்தி தென்பகுதி ஆங்கில, சிங்கள ஊடகங்களில் வெளிவந்திருக்கும். மறுபுறம் இறந்தவர்களில் ஒருவர் கூட ஒட்டுக்குழுவினர் இல்லை என்பது ஆச்சரியம் தரும் விடயம். இராணுவமே முழுக்க முழுக்க கருணா குழு என்ற போர்வையில் தாக்குதல்களில் ஈடுபடுகின்றது என்பது அம்பலமாகியுள்ளது. அதாவது சீருடையில் இருக்கும் போது இராணுவம் சீருடையை களைந்தால் கருணா குழு என்பது தான் உண்மை. இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளில் உந்துருளிகளில் சிவில் உடைகளில் வந்து தேசப்பற்றாளர்களையும் பொதுமக்களையும் இராணுவமே கொல்கின்றது என்பதும் இதன் மூலம் வெளிப்படை.

இராணுவத்தின் இந்த முயற்சிகளின் பின்புலம் என்ன? சிங்கள அரசை பொறுத்தவரை ஒரு முழு அளவிலான போருக்கு தற்போது தயாரில்லை என்னில் அதன் இன்றைய அரசியல், பொருளாதார, இராணுவ நிலமைகள் ஒரு முழுஅளவிலான போருக்கு உகந்தவை அல்ல. அதனால் தான் ஸ்ரீலங்காவில் ஒரு உக்கிரமற்ற போர் நிகழ்கிறது என கண்காணிப்புகுழு கூறியபோது அவசர அவசரமாக சிங்கள தேசம் அதை மறுத்திருந்தது. இன்னொருபுறம் உக்கிரமற்ற போர் நிகழ்வதை சிங்கள அரசு ஒப்புக் கொண்டால் அது தான் நேரடியாக புலிகளுடன் போர் புரிவதை ஒப்புக்கொண்டதாகி விடும் என்ற பயமும் அரசுக்கு உண்டு.

ஆனால் புலிகளின் மீது கருணா குழு என்ற போர்வையில் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை ஒரு நெருக்கடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற இராணுவ உத்தியும், புலிகள் பலவீனமாகி விட்டார்கள் என்ற தோற்றப்பாட்டை தெற்கில் ஏற்படுத்தும் அரசியல் தந்திரமும் அரசின் தற்போதைய தேவைகள். எனினும் 2003 களில் அரசு எதிர்பார்த்தது போன்றதொரு பலமான குழுவாக கருணாகுழுவால் புலிகளுக்கு எதிராக நின்றுபிடிக்க முடியவில்லை.

சிதறிப்போன கருணா குழு என்ற மாயயை சிங்கள தேசத்தினால் ஜீரணிக்க முடியவில்லை எனவே தான் தனது படைகளை கருணாகுழு என்ற போர்வையில் களமிறக்கியுள்ளது அரசு. போரை மிக இலகுவான முறையில் இரு பிரிவாக பிரிக்காலம், தற்பாதுகாப்பு போர் முறை (Defensive) தாக்குதல் போர் முறை (Offensive). சிங்கள அரசை பொறுத்தவரை தற்போது தற்பாதுகாப்பு போரையே முதன்மையாக கருதுகிறது. இதன் பிரதான காரணம் புலிகளின் பலமும், மக்கள்படை அணிகளின் அபரீத வளர்ச்சியுமாகும்.

ஆனால் வெறுமனவே ஆயுத தளபாடங்களின் கொள்வனவோ அல்லது படையினரின் எண்ணிக்கை அதிகரிப்போ தற்பாதுகாப்பை தேடித்தந்துவிடாது என்பதும் அரசுக்கு நன்கு தெரியும். அதாவது 'எதிரி எம்மை தேடி வருமுன் நாம் எதிரியை தேடி செல்ல வேண்டும்' என்ற போரியல் தந்திரத்திற்கு ஏற்ப மறைமுகமான வலிந்த தாக்குதல் மூலம் புலிகளின் பலத்தை சிதைப்பதே தனது பாதுகாப்புக்கு ஒரேவழி என்பதன் அடிப்படையில் தான் கருணாகுழு என்ற போர்வையில் இராணுவம் தற்போது தாக்குதல்களில் ஈடுபடுகின்றது. இதன் மூலம் பல நன்மைகளை எட்டமுனைகிறது சிங்கள அரசு.

கருணாகுழு பலமானவர்கள், புலிகளின் பலம் குறைந்துவிட்டது என்ற தோற்றப்பாட்டை தெற்கில் ஏற்படுத்துதல். தமிழ் மக்களின் மனோவலிமையை சிதைத்தல், சர்வதேசத்தில் ஏற்பட்டுள்ள புலிகளின் பலத்தின் மீதான கணிப்பை குறைத்தல், இதனால் பேச்சுக்களில் இருந்து புலிகளை வெளியேற செய்வதன் மூலம் சர்வதேச உதவிகளுடன் தன்னைப் பாதுகாக்கலாம் என்பதே சிங்கள அரசின் திட்டம்.

இதற்காக அரசு மேற்கொண்ட அரசியல் காய்நகர்த்தல்கள் தான் சர்வதேச தடைகள் ஆனால் புலிகளின் தந்திரோபயத்தால் அரசு மேற்கொண்ட தடை முயற்சிகளிலேயே சர்வதேச சமாதான முயற்சிகளும் கண்காணிப்பு பணியும் இன்று சிக்கிபோயுள்ளன. தற்போது அதை தீர்க்கவேண்டிய கடப்பாட்டில் சர்வதேச நாடுகளே விழிபிதுங்கி நிற்கின்றன. ஒவ்வொரு நாட்டு பிரதிநிதிகளும் இன்று தங்களின் தடைகள் வலுவற்றது என வாதாடுவதில் ஈடுபட்டுள்ளார்கள், ஆனால் தடைகளை நீக்கிவிட்டு இதயசுத்தியுடன் சமாதான முயற்சிகளை சர்வதேசம் அணுகினால் மட்டுமே உண்மையான சமாதானம் மலரும் என்பது தான் வெளிப்படை.

அரசு மேற்கொள்ளும் இராணுவ தந்திரோபாயம் தான் இராணுவத்துணைக்குழு என்ற பெயரில் இராணுவ கட்டுப்பாட்டு, புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள். வன்னி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தின் ஊடுருவித்தாக்குதல்கள் நெடுங்கேணிப் பகுதியில் புலிகளாலும் துணைப்படையினராலும் மேற்கொள்ளப்பட்ட முறியடிப்பு சமர் மூலம் ஓரளவு கட்டுபாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் இராணுவத்தின் தாக்குதல் முயற்சிகளும் அம்பலமாகி இருந்தது.

இப்போது வாகனேரியில் நிகழ்ந்த சமர் கிழக்குப்பகுதி நிலமைகளை கட்டுக்குள் கொண்டுவரும் என்பதுடன் அரசின் நிழல் போர் மீண்டும் அம்பலமாகி உள்ளது. மேலும் கிழக்கில் புலிகள் பலவீனமாக உள்ளார்கள் என்ற அரசின் பொய் பிரச்சாரம் பெரும் பின்னடைவை சந்தித்து உள்ளதுடன் புலிகள் அதிக பலத்துடன் உள்ளார்கள் என்பதையும் நிரூபித்துள்ளது.

இந்த சமர் மக்களிடம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. அதாவது அரசு ஒரு முழு அளவிலான போரை விரும்புகிறதா? சர்வதேசம் சிங்கள அரசின் இந்த நிழல்போருக்கு கூறப்போகும் பதில் என்ன? புலிகளும் தமிழ் மக்களும் மேலும் பொறுமைகாக்க வேண்டுமா? யார் நடத்தியது என்று தெரியாத தென்பகுதி தாக்குதல்களுக்கு எல்லாம் புலிகள் மீது ஐயம் தெரிவிக்கும் கண்காணிப்பு குழுவின் நடவடிக்கை என்ன? ஒருபுறம் சர்வகட்சி மாநாடும் மறுபுறம் நிழல்போரும் நடத்தும் அரசின் முயற்சி சமாதானத்தை கொண்டுவருமா? இவற்றிற்கான பதிலில் தான் அமைதிமுயற்சியின் எதிர்காலம் தங்கியுள்ளது.

சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் தமிழீழப்பகுதிகளில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். அதாவது இயல்புநிலையின் முடக்கம் தான் சமாதானத்தின் முடக்கம். ஆனால் வாகனேரி தாக்குதல் மூலம் அரசு தான் இயல்புநிலையை சீரழித்து பேச்சுக்களை முடக்கியது என்பது தெளிவாகியுள்ளது. எனவே தற்போது நடைபெறும் உக்கிரமற்ற போர் ஒரு முழுமையான நாலாம் கட்ட ஈழப்போராக மாற்றமடையின் அதன் முழுப் பொறுப்பும் அரசையே சாரும் என்பதை சர்வதேசமும் கண்காணிப்பு குழுவும் வரும் காலத்தில் மறுக்க இயலாது.

■

வேல்ஸ் இல் இருந்து அருஷ்


https://tamileelamarchive.com/

'வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெற்று வருகின்ற மக்கள் கட்டுமானப் பயிற்சிகளை சர்வதேசம் நிறுத்த வேண்டும்' இது சிறிலங்காவின் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹென்ன தெரிவித்த விடயம் சிறிலங்காப் படையின் மீது தாக்குதல் நடத்தவே மக்களுக்கு பயிற்சி வழங்கப் படுகிறது இது சிறிலங்காவின் இரண்டாம் நிலைத் இராணுவ தளபதி நந்த மல்லவராச்சி தெரிவித்தார். தாயகத்தில் நடைபெற்று வருகின்ற மக்கள் கட்டுமானப்பயிற்சிகள் குறித்து இப்பொழுது சிறிலங்காத் தரப்பு கருத்துக்களை வெளியிட ஆரம்பித்து விட்டது என்ற செய்தியே தற்காப்பு பயிற்சியின் வெற்றிதான்.

தாயகத்தில் கிராமங்கள் எங்கிலும் பரவலாக தற்போது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன நாளாந்தம் ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகளை பார்த்தால் 'பயிற்சி நிறைவு', புதிய பயிற்சிகள் ஆரம்பம் என்ற செய்திகளை அதிகம் நோக்கக்கூடியதாக இருக்கும். எந்த மக்கள் மீது தமது அராஜகத்தை சிறிலங்கா அரசு திணிக்கின்றதோ அந்த மக்கள் அராஜகத்தை எதிர்க்கும் போது எதிர் தரப்பிலிருந்து மேற்கூறப்பட்ட கருத்துக்கள் வெளிவரத்தான் செய்யும்.

# சாதிக்கும் மக்கள் படை

■ எஸ்.வி.ஆர்.கஜன்



https://tamileelamarchive.com/

ஏனென்றால் தமது தரப்பால் ஏற்படுத்தப்பட்ட மக்கள் பயிற்சியினை விட தாயகத்தில் மக்கள் தமது தற்காப்பு பயிற்சியில் ஆர்வமாக இணைவது மட்டுமல்லாது பெருமளவிலானோர் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளார்கள். குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மட்டும் முதல் கட்ட பயிற்சிகளை முடித்துக் கொண்டு வயது பால் வேறுபாடின்றி பத்தாயிரம் பேர் வரை வெளியேறியிருந்தமை சிறிலங்கா அரசுக்கு மிகப் பெரிய அதிர்வினை கொடுத்திருக்கலாம் இதனை விடவும் கட்டம் கட்டமாக பல மட்டங்களில் இந்த பயிற்சிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பயிற்சி வழங்கப்பட்ட மக்கள் படை என்ன செய்தது எதனை சாதித்தது என்ற கேள்வி கூட பல மட்டங்களில் எழலாம் இதனுடைய வெற்றியே இந்த கேள்வியில் தான் தங்கியிருக்கிறது. அண்மையில் வன்னிப் பகுதிகளில் பரவலாக இடம் பெற்று வந்த சிறிலங்கா படையினரின் ஆழஊடுருவும் அணியின் LRRP தாக்குதல்களை முறியடிப்பில் பெரும் பங்கு இவ்வாறு பயிற்சி பெற்ற மக்கள் படையினரின் செயற்பாட்டில் தங்கியிருந்தது. குறிப்பாக வவுனியா வடக்கு பகுதியிலும் மட்டக்களப்பு பகுதியிலும் இடம் பெற்ற இந்த ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல்களை இந்த மக்கள் படை முறியடித்தது என்பதற்கு அப்பால் இந்த அணியினருடைய சடலத்தை கூட மட்டு மீண்டும் சிறீலங்கா அரசின் இராணுவத்தினருக்கு ஒப்படைத்துள்ளமையானது ஒரு வரலாற்று சாதனையாகவே கருதப்படுகிறது.



இதனைத் தான் 'நந்தமல்லவராச்சியின்' கருத்து வெளிப்படுத்துகின்றது சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தவே இவ்வாறு மக்கள் பயிற்சி வழங்கப்படுகின்றது. என்ற கருத்து இதனை மறுபக்கமாக நாங்கள் பார்த்தால் இந்த ஆழஊடுருவும் அணி அண்மைக்காலமாக நடத்திய தாக்குதல்களின் எத்தனை பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் எந்த இலக்குகளும் இன்றி அப்பாவி பொதுமக்கள் மீது இந்த அணி கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியதுதான் இவ்வாறான முறியடிப்புகளுக்கு காரணமாக அமைந்தது ஏழை விறகு வெட்டிகள் சாதாரண கூலித்தொழிலாளர்கள் மணல் ஏற்றுச்செல்லும் தொழிலாளர்கள் என பலர் இந்த LRRP தாக்குதனூடாக மக்கள் தமது அனுபவத்தை முறியடிப்பதற்காகவே இந்த தற்காப்பு பயிற்சியில் இணைந்து முறியடிக்க வேண்டிய தேவையும் எழுந்தது.

ஆனால் சிறிலங்கா அரசு தனது இராணுவத்துடன் இணைந்து எல்லைக் கிராம மக்களுக்கு வழங்கிய பயிற்சிகள் கூட எந்த வகையிலும் சாத்தியப்படவில்லை என்ற சிறிலங்கா அரசினதும் அதன் படைகளிலும் எண்ணக் கிடக்கைகளின் வெளிப்பாடுகளால் பல்வேறு கருத்துக்கள இப்பொழுது கிளம்ப ஆரம்பித்து விட்டன. இப்பொழுது கருத்துக்களை வெளியிடுபவர்கள் அப்போது சிந்திக்க ஏன் தவறினார்கள் கொழும்பு ஒரு குண்டு வெடிப்போ அல்லது ஏதாவது தாக்கம் ஏற்படும் போதெல்லாம் சாதாரண தமிழ் மக்கள் மீது எறிகணை மற்றும் விமான குண்டு வீச்சுக்களை சிறிலங்கா இராணுவத்தரப்பு நடத்தப்படும் போது அதற்கு தங்களை தற்காத்துக் கொள்வதற்கு தயார் மக்கள் இவ்வாறு தற்காப்பு பயிற்சிகளை பெற சிறிலங்கா அரசினதும் இராணுவத்தாலும் தள்ளப்பட்டிருக்கின்றர்கள் என்ற உண்மையை இப்பொழுது அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இது மாத்திரமன்று இனியும் தமிழ் மக்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்படுமேயானால் அதனை பல வழிகளிலும் எதிர் கொள்ள வேண்டிய நிலைக்கு இன்று தாயக மக்கள் படை ஆக்கிரமிப்பாளர்களால் தூண்டப்பட்டிருக்கிறது. என்ற செய்தியை சர்வதேசமும் புரிந்து கொள்வது தான் பொருத்தம்.

https://tamileelamarchive.com/



# ஏன் அதைப் பெண்கள் வாசிக்கவில்லை இன்னமும்

மல்லிகைப் பிள்ளையார் உண்டியல்
பெண்கள் தான் அதிகமாய் காசு போடுகிறார்கள்
இப்போ கன இடங்களில் பஸ் நின்று போகிறது
அரோகரா ஆஸ்பத்திரிப் பிள்ளையார் கட்டிடநிதி
ஆஸ்பத்திரி அலுவலகப்பெண்கள் கூட அரோகரா சொல்லிக்கொண்டு
புதிது புதிதாய் மூலஸ்தானங்கள் முளைக்கின்றது பழையவை இடிக்கப்படலாம்
இப்போது பெண்கள் தான் அதிகம் பத்தியில் முத்திப்போனார்கள்
ஆனாலும் பெண் கடவுளுக்கும் பூசைசெய்பவர் ஆண்கள் தான்
பெண்கள் இலகுவில் ஏமாந்து விடுவார்களா
பாத்திமா பதியிலும் ஏகப்பட்ட பெண்கள்
நேற்றும் இன்றும் நாளையும் யேசு உனக்கு காவலாயிருக்கின்றார்
வட்டத்தரம் ஒன்று சொல்லுது
“அந்தக் கோவிலடியிலும் பம்பர் அடிச்சது ஆக்கள் செந்தவை
எல்லாம் கடவுள் தான் அருள் செய்கின்றார்
ஆனால் சமாதானம் பேசியது சமபலம்
கோவிலில் பெண்கள் இரவில் தங்கக்கூடாது
லாம் பெண்ணை பரல் அடித்தகரம் சொல்லுது
சயிக்கிளை பூட்டி வைக்கவும் இன்னொரு அடிவட்டத்தகரம்
பத்து கட்டளையிலும் சொல்லியிருக்கு
பஸ்களில் கூட இப்போது பெண்கள் தான் அதிகம்
“அம்மாமாரோ இரண்டு லட்சத்தி நாப்பதாயிரத்தி அறூாற்றி முப்பத்தைஞ்சு ரூபா
நீங்க தந்த காசு உங்கட காசிலதான் பிள்ளையாருக்க கட்டிடம் எழும்புது
ஆம்பிளையள் போடுறதில்லையோ”
இப்பெல்லாம் கோட்லீப் மென்டிஸ் தாராளமாய் வருது
கோயிலுக்குள் வருகிறவர்கள் சேட் வெனியன் பாதரட்சைகளுடன் உள்ளே
வரக்கூடாது
அது ஆம்பிளையளுக்கு
கோவில் கிணற்றில் பெண்கள் தண்ணிர் அள்ளக்கூடாது
பெரல் அடித் தகரம் தான் சொல்லுது
ஏன் இதைப்பெண்கள் வாசிக்கவில்லை இன்னும்
அந்தக் கோயிலை இடிக்கவில்லை இன்னமும்
என்னை உனக்கு தெரிந்திருக்காது தான்
உன்னை எனக்கு தெரியும்
உன்கற்பனை வரிகளுக்குள் சிக்கி மீண்டிருக்கிறவன்
உயர்ந்த கூட்டங்களில் செயற்கை சுவாசத்தில்
உன்னை உன்னுடைய சூழலை உன்னுடைய அனுபவங்களை
உன்னுடைய நிலை நீ நிலவென்று உருவித்த உனது - நிலைகளை
உன்னுடைய கற்பனைகளை மட்டும் தான் உன்னால் எழுதமுடியும்
ஒரு ரசியனின் வியட்னாமியனின் ஒரு தென்னாபிரிக்கனின் ஒரு கியூபனின்
ஒரு குர்திஸ் காரனின் வரிகளில் குளிந்திருக்க வேண்டும்.
என்னை என்னோடு சூழ்ந்ததை எங்கள் அழுகுரலை அனுபவங்களை
எம்மவர் தியாகத்தை என்னைத் தொட்டுப்பார்க்கும்படி எப்படி துாண்டினேன்
மாசி மாதத்தின் ஏனலில் விடியற் காலத்தில்
கடல் நீரில் நனையும் சிலிர்ப்பு அது
எந்தச் சோலியுமின்றி சும்மாயிருந்து வாயில் வந்த வார்த்தைகளை
கோர்த்து விட்டு போகவில்லை நாம்
ஆழ்ந்து அனுபவித்து பார்த்ததை கேட்டதை படித்தவை கூட எழுதினோம்

https://tamileelamarchive.com/

இங்கு சுட்டெரியப்போகும் சிங்களச்சிப்பாயின் சுடுகுழல் வாசலிலும் நின்றபடி
நட்ட நடுவெய்யிலில் நாவல் மரத்து நிழலில் இருந்த போது கூட நிஜங்களும் கூட
எங்களோடிருந்தது
புளுகித்தள்ளவில்லை நாங்கள்
எங்கள் கதைகள் எங்கள் சரித்திரங்களிலிருந்தே சொல்லப்படுகிறது மட்டுநகர்
பெருங்கிடங்களில் மூட்டப்பட்டுப்போனவரின் கடைசிநேரத்தை
மந்திவிலில் மடிந்தவரின் கடைசிக்குரலை
மடுத்தேவாலயத்தில் மாரடித்த  தாயின் ஒப்பாரியை
கடைசியில் விட்டுவிடுவார்கள் என்று காத்திருந்தவர் கடைசி நேரத்தை
இறக்கப்போகிறேன் என்று தெரிந்தும் எதிரியின் ராங்குக்கு இலக்கு வைத்தவனின்
இறுதிநேரத்தை
என்னில் ஏறி எல்லோரும் உள்ளே போங்கள் என்று
கம்பி வேலியில் படுத்தவனின் உறுதியுரைப்பை
கடைசி வரை நின்று கண்ணீராய் போனவரை
நாளை பாத்திரு வருகிறேன் என்று வராமலே போனவரை
எழுத எதை மறந்து போவது
வெறுமையாய் கொஞ்ச நேரம் மனம் மறந்திருக்க முடிவதில்லை
உனது நிலவும் நீ நிலவுகளாய் உருவித்த நினைவகளின் கனவுகளும்
நெஞ்சப் பொருமல்களும் உச்சல்களும்
நினைவுக்கும் வருவதிலிலை இப்போ எனக்கு.

முல்லை யேசுதாசன்



ஓவியம்: விஜிதன்

# காத்திருக்கத்தான் வேண்டுமாம்

இசை நிலா
பெயர்வைத்தவன் என்ன நினைத்து பெயர் வைத்தானோ
நிலவின் குளிர்மையில் இசையை ரசிக்கும் அனுபவம் அவள்
குயிலின் குரலில் தோய்ந்து வந்த நிலவா
குளிர் நிலவில் குழைந்து வந்த இசையை
குழம்பிநிற்கும் மனங்கள்
பாடசாலைகளுக்கு பாடம் சொன்னவள்
கல்லூரியை கலகலத்தவள்
அவன் காதலுக்காய் நடந்த கால்கள் கனதூரம்
அவள் கைபிடித்தவன் காகம் தோற்றுவிடும் நிறத்தில்
கல்லானாலும் கணவன்
ஒரு காலை கண் விழிக்குமுன்தான் அந்த நிலவில் கருமைபிடித்தது
கண்ணானவன் காணமல் போனான்
போனவன் போனவன் தான்
காத்திருக்கிறாள் இன்னமும் கனகாலமாய்
காத்திருக்கத்தான் வேண்டுமாம்.

புலம் பெயர்நாடுகளில் நடைபெற்ற கறுப்பு யூலை நினைவாக...



அவுஸ்திரேலியா


பின்லாந்து


பெல்ஜியம்


பிரான்ஸ்



கனடா



ஜேர்மனி


டென்மார்க்


இத்தாலி



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



பிரித்தானியா




தென் ஆபிரிக்கா



நெதர்லாந்து



சுவீடன்




நியூசிலாந்து




சுவிற்சலாந்து



நோர்வே




அமெரிக்கா

https://tamileelamarchive.com/

# தமிழீழ மக்கள் பிரச்சினையை சர்வதேச உலகால் தீர்க்க முடியாதிருப்பதேன்?

## அரசியல் விஞ்ஞான அடிப்படையில் காரணிகள் குறித்த சுருக்கப் பார்வை

ஆய்வாளர் - சூ.யோ. பற்றிமாகரன் - ஜனநாயகத்தின் அரசியலில் முதுகலைமாணி



## 1

### தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கட்டுப் படுத்துவது முதல் தவறு. இதுவே தமிழர்களின் சாவுக் கும் துன்பத்திற்கும் முதற் காரணி.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத் தின் கடந்த முப்பது ஆண்டு கால வர லாற்றை எடுத்து நோக்குகையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சிறீ லங்கா கட்டுப்படுத்துவதற்கு தொடுத்த - தொடுத்துள்ள ஆயுதப்படைபலப் பிரயோ கங்களும் படைபல ஆக்கிரமிப்புக்களுமே தமிழீழ மக்களின் வாழும் உரிமைக்கும் ஆளும் உரிமைக்கும் அழிவுகளை ஏற்படுத் தின - ஏற்படுத்தி வருகின்றன. இந்நேரத்தில் லிச்டன்ஸ்டைனின் இளவரசர் 2வது ஹான்ஸ் அடம் 2001ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி சர்வதேச தந்திரோபாயங்கள் ஆய்வு நிலையத்தில் ஆற்றிய உரை நினைவுக்கு வருகிறது. அதில் அவர் "சுயநிர்ணய உரிமை யைக் கட்டுப்படுத்துவது ஜனநாயகத்திற் கான அச்சுறுத்தலாக மட்டுமல்லாது அரசு ஒன்று ஜனநாயகத்தின் ஊடாக சட்டஉரிமை யைக் கோருவதையும் கட்டுப்படுத்துகிறது" (" Restrictions on self-determination threaten not only democracy itself but the state which seeks its legitimation in democracy" - Prince Hans-Adam II of Liechtenstein, speaking to the International Institute for Strategic Studies on 25 January 2001) எனக் கூறிய கருத்து முக்கியத்துவம் மிக்க தாக அமைகிறது.

### 1.1 முழுமையான அரசுக்குரிய அம்சங்கள் இருந்தும் சட்ட உரிமைகோர முடியாத நிலை


இக் கருத்து தமிழீழ மக்களின் சமகால வரலாற்றைப் பொறுத்த மட்டிலும் உண்மை யாகிறது. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கட்டுப்படுத்துவது அவர்கள் மக்கள் என்கிற உரிமையுடன் தமக்கான ஜனநாயக அரசு ஒன்றை உருவாக்கும் அவர் களின் அரசியல் உரிமையை தடைசெய் கிறது. இதனை மாற்றியமைப்பதற்கு தமிழீழ மக்கள் கடந்த 58 ஆண்டு கால இலங்கை அரசுடனான உறவுகள் ஊடாக பெற்ற துன்ப துயர அனுபவங்களின் அடிப்படையில் அந்த துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டு தமது நிர்வாகத்தில் உள்ள தமது தாயகத்தின் அரசுக்கான சட்ட உரிமையை ஜனநாயகத் தின் ஊடாக கோருவதும் சுயநிர்ணய உரி மையைக் கட்டுப்படுத்தும் பொழுது கட்டுப் படுத்தப்படுகிறது. இதனால் தமிழீழ மக்கள் தமது நிர்வாக அரசில் முழுமையான அர சுக்கான அனைத்து அம்சங்களையும் செயற்பட வைத்தும் அவர்களின் அரசுநோக் கிய அரசிற்கான சட்ட அங்கீகாரத்தை ஜன நாயகத்தின் ஊடாக கோர முடியாத நிலை தொடர்கிறது. தமிழர்களின் ஜனநாயகப் பங்குபற்றுதலை மறுத்து அவர்களின் அடிப் படை அரசியல் உரிமைகளை மனித உரி

https://tamileelamarchive.com/

மைகளை இல்லாமல் செய்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தினை தங்களுக்குச் சமமான அரசாக மதிக்கும் சர்வதேச அரசுக்கள் பாதிப்புற்ற தமிழர்கள் தங்களது உரிமைகளை நிலைநிறுத்த எடுக்கும் முயற்சிகளை பயங்கரவாதம் என்பது சர்வதேசத்தன்மையின் சார்புநிலைகளையும் சமத்துவமின்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

### 1.2 விருப்புத் தெரிவோ அரசியல் பணிவோ அற்ற அரசுக்கு உதவுவது வரலாற்றுத் தவறு

இந்நிலையில் தமிழீழ மக்களின் விருப்புத் தெரிவோ அல்லது அரசியல் பணிவோ இல்லாத சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ மக்களின் மேல் பாராளுமன்றப் பெரும்பான்மையின் கொடுங்கோன்மையை தொடர்வதற்கும் அதன் வழி தமிழீழ மக்களின் பிரதிநிதித்துவ சட்டவாக்க சட்ட அமுலாக்க உரிமைகளை குறைப்பதற்கும் மறுப்பதற்கும் சர்வதேச அனுமதியும் தொடர்வதற்கு தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்க மறுப்பது வழி வகுத்துக் கொண்டிருக்கிறது. இதன் வழி சிறீலங்காவின் இனஅழிப்புக்கு சர்வதேசம் துணைபோகும் வரலாற்றுத் தவறையும் புரிகிறது.



# 2

## பாதுகாப்பே முக்கியமானதும் முதன்மையானதுமான பிரச்சினை அதனைப் பயங்கரவாதம் என்பதை ஏற்பது இரண்டாவது தவறு.

சிங்களப் பெரும்பான்மையின் பாராளுமன்றக் கொடுங்கோன்மையிலிருந்து தமது உயிரை உடமைகளை நாளாந்த வாழ்வைப் பாதுகாக்கத் தமிழீழ மக்கள் போராடுவது சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவான வழியாகவே உள்ளது. இவர்கள் தோற்றுவித்த தமிழீழ விடுதலைப்புலிகள் என்னும் விடுதலை இயக்கமும் அவர்களின் அரசியல் தலைமையும் பாதுகாப்புக்கான காபந்து அரசாக பரிணாமம் அடைந்து நிற்கிறது. இது கடந்த முப்பது ஆண்டுகால வரலாற்று வளர்ச்சியினுடாக எய்தப்பட்ட இயல்பான அரசியல் வளர்ச்சியாக உள்ளது. இதனால் இந்த தமிழீழ மக்களின் தலைமையும் நிர்வாக மையமும் தமிழீழத்தின் அரசு நோக்கிய அரசாக உருப்பெற்று நிற்கிறது.

### 2.1 தடுக்க வேண்டியவர்களே துணைக்குப் போகும் வரலாற்றுத் தவறு

இந்த அரசு நோக்கிய அரசின் மிக முக்கிய பிரச்சினையாக இருப்பது தமிழீழ மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பு என்பதாகும். தமிழீழ மக்களதும் மண்ணினதும் பாதுகாப்பைப் பலவீனப்படுத்துதல் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தமிழீழ மண்ணோடு தமிழீழ மக்களுக்கு உள்ள தொடர்பைத் துண்டிப்பது என்பது சிறீலங்காவின் அரசியல் நோக்கமாகத் தொடர்கிறது. இவ்விதம் செய்வதன் மூலம் தமிழீழத் தாயகத்தின் இறைமை தமிழீழ மக்களிடம் தொடரும் நிலையை சிதைப்பதே சிறீலங்காவின் நோக்காக உள்ளது. இதற்காக தங்களின் இறைமைச் சிதைப்பினைத் தடுக்க தமிழர்கள் நடாத்தும் தற்பாதுகாப்பு யுத்தங்களையும் யுத்ததந்திரோ பாயங்களையும் பயங்கரவாதம் என உண்மைக்கு மாறான பரப்புரைகளை சிறீலங்கா முடுக்கி விடுவது அதனுடைய இராணுவ . தந்திரோ பயங்களுள் முக்கியமானதாக உள்ளது. இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்புள்ள சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் தங்கள் சொந்த நலன்களில் அக்கறை கொண்டு வளர அனுமதிக்கும் செயல்களைச் செய்வது நிலைமை மோசமடைய வழிவகுக்கிறது. இதன் வழி தமிழின அழிப்பு என்னும் சிறீலங்காவின் சர்வதேசக் குற்றச் செயலை அனுமதிக்கும் வரலாற்றுத் தவறையும் சர்வதேச உலகம் செய்கிறது.

https://tamileelamarchive.com/

# 3

## பிரிந்து செல்வதற்கு பேர்ச் கூறும் 4 நிபந்தனைகளும் நிறைவேறிய நிலையிலும் பிரிந்து செல்லும் உரிமையை மறுப்பது இன்னொரு தவறு

உலகின் அரசியல் சிந்தனை எழுத்தாளர்களில் பல பல்கலைகழகங்களினாலும் மதிக்கப்படுபவரான பேர்ச் எழுதிய தேசிய வாதமும் தேசிய ஒருங்கிணைதலும் [ Birch A (1989) Nationalism and National Integration) என்னும் நூலில் நான்கு நிலைகளில் சிறுபான்மையினம் ( தமிழீழ மக்கள் தேசிய இனமாக இருந்த போதிலும் காலனித்துவ பிரித்தானிய அரசு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கவென உருவாக்கிய 1948ம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பில் அவர்களைச் சிறுபான்மையினர் என்னும் சொற்றொடரில் அடக்கிச் சென்றனர்) தனியாட்சி அமைக்கத் தகுதியானவர்களாவார்கள் என்கிறார். அவையாவன : -

3.1.

சிறுபான்மை மக்களின் பிரதேசம் வலுக்கட்டாயமாக அரசில் இணைக்கப்பட்டு அந்த இணைப்புக்கு அம் மக்கள் முழுமையான விருப்பை கொடுக்காது தொடர்ச்சியான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வரல் வேண்டும். (தமிழீழ மக்கள் ஆறுமுகநாவலர் காலம் முதலாகவே பிறர் தம்மை ஆள்வதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். 1879 மே 22ம் நாள் யாழ் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சேர். பொன்னம்பலம் இராமநாதனை சட்டசபை தேர்தலுக்கு வேட்பாளராக அறிமுகம் செய்து நிகழ்த்திய உரையிலேயே ஆறுமுகநாவலர் சட்டசபையிலே எமது பிரதிநிதியாக அமர்பவர் தமிழராக இருத்தல் வேண்டும் என பேசியமை சான்றாதாரமாக உள்ளது. 1837 முதல் 1889 வரை சட்டவாக்க சபையில் ஒரு தமிழரும் ஒரு சிங்களவரும் இலங்கையின் பிரதிநிதிகளாக இருந்தனர். 1910 முதல் 1921 வரை இரண்டு சிங்களவர்களுக்கு ஒரு தமிழர் என்கிற பிரதிநிதித்துவம் அமைந்தது. 1921ல் சிங்களவர்களைப் பெரும்பான்மையாக கொண்ட அரசியலமைப்பினை பிரித்தானியா உருவாக்கிய பொழுது அது தமிழர்களின் எதிர்ப்பால் 1923ல் கைவிடப்பட்டது. 1923 முதல் 1931 வரை சட்டசபையில் 37 பிரதிநிதிகள் இருந்த பொழுது 18 சிங்களப் பிரதிநிதிகளும் 19 சிறுபான்மைப்பிரதிநிதிகளும் அனுமதிக்கப்பட்டு பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை தோன்றாது தடுக்கப்பட்டது. 1931ல் டொனமூர் அரசியல் அமைப்பை தமிழர்கள் தேர்தலில் பங்கேற்காது நிராகரித்தனர். தொடர்ந்து சோல்பரி ஆணைக்குழு தமிழர் கோரிக்கையை நிராகரித்ததின் பின்னர் பிரித்தானிய அரசாங்கத்தின் அன்றைய பிரதமர் அட்லி பிரபுவுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் எழுதிய 15.01.1946 ம் திகதிய CO 54/ 986/ 9/1 No. 9 இலக்கப்பதிவுள்ள கடிதத்தில் தமிழரின் சுயநிர்ணய உரிமை கவனத்தில் எடுக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. பின்னர் 13.02.1949ல் மாவிட்டபுரத்தில் தமிழரசுக்கட்சி உருவாகி 03.09.1949ல் நல்லூரில் சங்கிலியனின் கொடி தமிழர் இறைமையின் சின்னமாக ஏற்றப்பட்டு பின்னர் 1976 ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தால் தனியரசு பிரகடனம் விடுக்கப்பட்டு 1977 பொதுத் தேர்தல் குடியொப்பத்தால் அது மக்கள் ஆணையாக மாற்றப்பட்டு அது நடைமுறைக்கு வருவதை சிறீலங்கா படைபலம் கொண்டு தடுத்த பொழுது மக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளாகி இன்று வரை அதனை நடைமுறைப்படுத்திட முனைகின்றனர். எனவே தமிழீழ மக்கள் தங்களின் பிரதேசம் வலுக்கட்டாயமாக சிங்களப் பெரும்பான்மை அரசில் இணைக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை அந்த இணைப்புக்கு முழுமையான விருப்பைக் கொடுக்காது தொடர்ச்சியான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்).

3.2.

தேசிய அரசாங்கம் ஒரு பிரதேசத்தின் குடி மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் அக்கறையான முறையில் வழங்கத் தவறும் பொழுது அப்பிரதேச மக்கள் பிரிந்து செல்லலாம். ( தமிழீழ மக்களைப் பொறுத்தவரை அவர்களை அவசர காலச்சட்டத்தின் கீழும் படைப்பலபிரயோகத்தாலும் சிங்களப் பெரும்பான்மை ஆட்சி செய்து அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் கடந்த 50 ஆண்டுகளாக வழங்க மறுத்து வருகிறது)

3.3.

அரசியலமைப்பு முறை ஒரு பிரதேசத்தின் அரசியல் மற்றும் பொருளாதார அக்கறைகளை தகுந்த முறையில் பாதுகாக்கத் தவறி அதன் காரணமாக அந்தப் பிரதேசம் பின்னடைவுகளைப் பெறும் பொழுது பிரிந்து செல்லலாம். ( தமிழீழ மக்களைப் பொறுத்த மட்டில் 1972 ,1978 சிறீலங்கா அரசியலமைப்புக்கள் தமிழர் தாயகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார அக்கறைகளை தகுந்த முறையில் பாதுகாக்கத் தவறி அதன் காரணமாக அந்தப் பிரதேசம் மிகவும் பின்னடைவுகளைப் பெற்றுள்ளது என்பது வெளிப்படையான உண்மை)

3.4.

ஒரு அரசாங்கம் பெரும்பான்மையினரின் சார்பாக செயற்படும் பொழுது புறக்கணிக்கப்பட்ட மற்றைய மக்கள் தங்களுடைய பிரதேசத்தின் அக்கறைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடாத்த முற்படும் பொழுது அவர்களை அலட்சியம் செய்து தன்னுடைய நடத்தைக்குப் போதிய விளக்கம் அளிக்காது விடும் பொழுது அம் மக்கள் பிரிந்து செல்லும் தகுதியைப் பெறுகின்றனர். (தமிழீழ மக்கள் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களுடன் பல பேச்சுக்களை நடாத்தி இறுதியில் சர்வதேச அனுசரணையாளருடனும் நடாத்தி சிறீலங்கா அரசால் அலட்சியப்படுத்தப்பட்ட வரலாறுகள் உலகுக்கு நிறையவே தெரியும்.)

எனவே பேர்ச்சின் தனியரசாகப் பிரிந்து செல்வதற்கான இந் நான்கு நிபந்தனைகளையும் தமிழீழ மக்கள் கொண்டிருக்கின்ற நிலையிலும் சர்வதேச உலகு தமிழீழ மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமையை மறுப்பது தமிழர்களின் சாவுகள் துன்பங்கள் தொடர்வதற்கான சர்வதேசத்தின் அனுமதியாக அமைகிறது.

# 4

## இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டினையும் பேணிய நிலையில் தீர்வு என்னும் தவறு

4.1

### இறைமை என்பது விடுதலைக்கு தடைக்கல் அல்ல

தமிழீழ மக்கள் பிரச்சனைக்குத் தீர்வுகள் குறித்து அக்கறை காட்டும் நேரங்களில் எல்லாம் சர்வதேச பிராந்திய வல்லாண்மைகள் இலங்கையின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பாதிப்பு ஏற்படாத

https://tamileelamarchive.com/

வகையில் தீர்வு என்னும் தாரகமந்திரத்தை இலங்கை அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தும் தலையணை மந்திரமாகத் திருப்பித் திருப்பிக் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் அவர்களின் தன்னாட்சியை தனியரசு மூலம் பெறுதல் என்னும் வரலாற்றுப் பரிமாணத்தினை தடுக்கின்ற சொற்களாக சிறீலங்காவின் இறைமை ஒருமைப்பாடு என்பன முன்வைக்கப்படுவதைப் பார்க்கின்றோம். உண்மையில் இறைமையும் ஒருமைப்பாடும் பல்லினக் கலாச்சாரத் தன்மையும் மக்களின் விடுதலைக்கான படிக்கற்களாக அரசியல் உலகில் தோற்றுவிக்கப்பட்டவையே தவிர தடைக்கற்களாக அல்ல என்பதை இவ்வாறு இவை குறித்துப் பேசுபவர்கள் தெரிந்து கொள்வது புரிந்து கொள்வது நல்லது. அதாவது வரம்பற்ற அதிகாரம் முடியாட்சியாளனுக்கு அல்ல முடியாட்சிக்கு என்ற இறைமைக் கோட்பாட்டுக் கருத்து மன்னனின் நல்லாட்சியை வலுப்படுத்தவும் கொடிய ஆட்சியை கட்டுப்படுத்தவும் அரசியல் வரலாற்றில் பரிணமித்தது என்பது இன்றைய ஆய்வாளர்களின் கருத்து. எனவே ஆட்சியாளர்க்கு தட்டிக் கேட்க இயலாத அதிகாரம் என்பதை விட மக்களை தனியொருவர் ஆளாது சட்டங்கள் மூலம் ஆளவும் மண்ணை ஆக்கிரமிப்புக்களில் இருந்து பாதுகாக்கவும் அரசுக்கு உள்ள உச்ச அதிகாரமே இறைமை என்பது இன்றைய ஆய்வாளர்களின் விளக்கமாகவுள்ளது.

## 4.2
## ஜீன் போடினின் இறைமை விளக்கம் அவர் காலத்திற்கு உரியது

ஜீன் போடின் (Jean Bodin 1520-1596) 1576ல் எழுதிய பொதுநலம் குறித்த ஆறு புத்தகங்கள் ( The Six books of Common wealth) என்னும் நூலில் அவர் தந்த இறைமை என்பது யாராலும் தட்டிக் கேட்க முடியாத அரசனின் அதிகாரம் என்பதே இறைமைக்கான முதலாவது வரைவிலக்கணமாக கருதப்படுகிறது. இவர் ரோமச் சட்டத்தில் ஆசிரியராகவும் பாரிசில் சட்ட வல்லுனராகவும் இருந்தவர். இங்கிலாந்தின் முதலாவது எலிசபேத்தின் அரசஅவை விருந்தினராகச் சென்றும் வந்துள்ளார். இவரது முதலாவது நூல் பணத்தின் எண்ணளவு மதிப்பு கொள்கையாக (Quantitative Theory of Money) வெளிவந்தது. எனவே பொருளாதாரம் அரசமுறைமைகள் சட்டங்கள் என்னும் மூன்று துறைகளிலும் உள்ள தனது அனுபவத்தின் அடிப்படையிலே அவர் வாழ்ந்த காலத்திற்கு ஏற்றதாக போடினின் வரைவிலக்கணம் அமைகிறது.

ஆயினும் இன்றைய சிந்தனை வளர்ச்சி இறைமை குறித்த ஆழமான கருத்துக்களை தோற்றுவித்துள்ளது. அந்த இன்றைய சிந்தனை வளர்ச்சிகளின் பின்னணியில் இறைமை குறித்த கருத்துக்களை ஆராய்வது இலங்கையின் இறைமை குறித்த சர்வதேச நாடுகளின் கருத்துக் குறித்த தெளிவைத் தரும். .

## 4.3
## இறைமை மாற்றப்பட முடியாத ஒன்றல்ல

இறைமை என்பது அரசியல் வாழ்வுக்கான அரசியலமைப்பு முறைமை ஆகும். எனவே அது செயற்கையானது வரலாற்றுப் போக்குடையது. எனவே அதனை இயற்கையானது தவிர்க்கமுடியாதது. மாற்றமுடியாதது என்பதெல்லாம் அர்த்தமற்றனவே என்கிறார் உலகின் இறைமை குறித்த இன்றைய முக்கிய ஆய்வாளர்களில் ஒருவரான றொபேர்ட் ஜக்சன். (R. Jakson Sovereignty in World Politics : a Glance at the conceptual and historical landscape. Political Studies (1999) XLVII 432). எனவே இறைமை மாற்ற முடியாத ஒன்றல்ல. இறைமை மக்களது அரசியல் வாழ்வுக்கான அரசியல் முறைக்கான அதிகாரம் என்ற வகையில் மக்களிடமே இறைமை உள்ளது. மக்கள் அரசை உருவாக்கும் பொழுது மக்களின் இறைமை அரசிடம் பாரப்படுத்தப்படுகிறது. இந்த அடிப்படையில் இறைமையை மக்களின் நாட்டிற்கான குடிமை உலகிற்கான குடிமை என்கிற அடிப்படையில் உள்ளக இறைமை வெளியக இறைமை என இன்றைய ஆய்வாளர்கள் இரண்டாகப் பிரிக்கின்றனர்.

## 4.4
## உள்ளக இறைமையும் வெளியக இறைமையும்

உள்ளக இறைமை என்பது ஒருநாட்டில் அடிப்படையான அதிகார உறவு முறைகள் ஆளுவோர்க்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையில் எவ்வாறு உள்ளன என்பதைக் குறிக்கும். இந்த ஆளுவோர்க்கும் ஆளப்படுபவர்களுக்குமான அதிகார உறவுமுறைகள் அரசியலமைப்பின் மூலம் வரைவிலக்கணப் படுத்தப்பட்டிருக்கும். வெளியக இறைமை என்பது அரசுகளுக்கும் அரசுகளுக்கும் இடையில் உள்ள அடிப்படை அதிகார உறவுகளைக் குறிக்கும். இது சர்வதேச சட்டங்கள் மூலம் வரைவிலக்கணப் படுத்தப் பட்டிருக்கும்.

## 4.5
## இறைமை வரலாற்றுப் போக்குடையது

மேலும் இறைமை வரலாற்றுப் போக்குடையது என்ற வகையில் வரலாற்றின் மாற்றங்களுக்கு முகங்கொடுக்க கூடியதாகவும் அமைய வேண்டும். உதாரணமாக பனிப்போருக்கு பின்னர் ஏற்பட்ட வரலாற்று மாற்றத்திற்கு முகங்கொடுத்த செக்கோசிலவிக்கியாவின் இறைமை செக் என்றும் சிலாவியா என்றும் இரு தேசங்களின் இறைமைகளாக அமைதியான வழியில் பரிமாணம் அடைந்தது. அதே வேளை கிழக்குப் பாக்கிஸ்தானில் ஏற்பட்ட வரலாற்றுப் போக்கு பங்களாதேஸ் என்றும் பாக்கிஸ்தான் என்றும் இறைமை பகிர்வினை யுத்தத்தின் பின் ஏற்படுத்தியது. இவ்வாறு இறைமை வரலாற்றுப் போக்குக்கு முகங்கொடுத்தல் இயல்பு என்பது ஆய்வாளர்களின் கருத்து. இறைமை வரலாற்றுப் போக்குகளுக்கு முகங்கொடுக்கத் தவறுகின்ற பொழுது அங்கு சர்வதேச தலையீடுகள் ஏற்பட்டு சர்வதேச அரசியல் சிக்கல்களும் தோன்றுவது வழமை. குரோசியா பொஸ்னியா கொசோவா பிரச்சினைகள் இதற்குச் சமீப கால உதாரணங்கள்.

## 4.6
## இறைமையைப் பாதுகாக்கும்படி கோருவது போலவே வைத்திருக்கவும் கோரலாம்

இன்று இருக்கும் இறைமை பாதுகாக்கப்படல் வேண்டும் எனப் பலரால் கேட்கப்படுவது போலவே பலரால் இறைமையை வைத்திருக்கும் உரிமை தமக்கும் வழங்கப்படல் வேண்டுமெனக் கோரப்படுகின்றது. இவ் விடத்தில் ஏற்கனவே சுதந்திர நாடாக ஏற்கப்பெற்ற நாடுகளைப் பொறுத்த வரை அந்த நாடுகளின் அரசு பிறர் தலையீடு இல்லாது செயற்படும் இறைமையுள்ளதாக இருப்பதால் அவ்வரசே வெளியார் தலையீடு இல்லாது இறைமையைப் பகிர்வதா இல்லையா என்பதனை முடிவு செய்ய அனுமதிக்கிறது சர்வதேச சட்டங்கள். சர்வதேச மட்டத்தில் அரசுகளின் சமுதாயம் அல்லது சங்கம் என்பது இறைமையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதினால் இறைமை என்பது வெளிவிவகார சர்வதேச தொடர்பு கொள்கைகளில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. இந்த அரசுக்களின் சமுதாயம் ஒன்று மற்றையதன் இறைமையைச் சமமாக மதித்தல் - ஒன்று மற்றையதன் விடயங்களில் தலையிடாதிருத்தல் - ஒன்றையொன்று ஆதரித்தல் என்பன போன்ற இணக்கப்பாடுகளின் ஊடாகவே தங்களுக்கு இடையிலான நல்லுறவை பேணுகின்றன. ஜே எல் பிரையர்லி தனது தேசங்களின் சட்டம் (J.L. Brierly. The Law of Nations London Oxford University Press 1938 40.) என்னும் நூலில் இறைமையின் நியமங்களாக தனது அர

https://tamileelamarchive.com/

சைப் பேணுதல் - தனது அரசின் சுதந்தி ரத்தைப் பேணுதல் - சமத்துவத்தைப் பேணு தல் - மதித்து நடத்தல் - மற்றைய அரசுக் களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல்' என்பவற்றைக் குறிப்பிடுகின்றார்.

## 4.7 மக்கள் பொதுவிருப்பின் மூலமே அரசாங்கம் இறைமையைப் பெறுகிறது.

ஒரு நாட்டின் அரசியல் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட கூட்டாட்சியில் இவற்றில் சில மாநில அரசுக்களுக்கு இருந்தாலும் எல்லா அம்சங்களும் அவற்றுக்கு கொடு படாமல் இறைமையின் தலைமை முதன்மை யாளராக மத்திய அரசாங்கமே தொழிற்பட்டு சர்வதேசத்திற்கும் அந்த நாட்டின் இறைமை யாளராக விளங்கும். இது வெளியக இறை மையின் செயற்பாட்டு தன்மையாக அமைகி றது. ஆனால் ஒரு நாடு மற்றைய நாட்டை சமமான இறைமையுள்ளதாக மதித்தல் ஏற்றல் என்பதின் அடிப்படையிலே இது சுமுகமான முறையில் அமுலாகும் என்ப தையும் கவனத்தில் கொள்ளல் அவசியம்.. அவ்வாறே வெளியக இறைமையின் அடித் தளமாக உள்ள உள்ளக இறைமையிலும் தேசிய இனங்கள் சமுதாயங்கள் ஒருவரை ஒருவர் சமத்துவமாக மதித்து ஒருவர் மற்றவரின் வாழ்விட எல்லைகளை ஏற்று அந்தப் புரிந்துணர்வில் தங்களுக்கான பாது காப்பையும் அமைதியையும் அபிவிருத்தி களையும் உறுதி செய்யுமாறு பொது அர சாங்கம் ஒன்று தோன்றுவதற்கு மக்கள் தங்கள் விருப்பினை வெளிப்படுத்தும் பொழுதே அந்த அரசாங்கம் இறைமை யுள்ள அரசாக மாறுகிறது. இது மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் பிரயோக மாக அமைகிறது. இந்த உள்ளக சுயநிர்ணய உரிமையை அரசு தோன்றிதயன் பின்னர் அந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்தா விட் டால் எந்த விருப்பின் மூலம் அந்த அர சாங்கத்தை அரசாக ஏற்றார்களோ அதே விருப்பின் மூலம் அந்த அரசாங்கத்தி லிருந்து விலகவும் புதிய அரசை தோற்று விக்கவும் அதே மக்களுக்கு உரிமையுண்டு. எனவே அந்நேரத்தில் இறைமை மக்களி டமே திரும்பி புதிய அரசு ஒன்றினை அமைப் பதன் மூலம் மீளவும் அந்த அரசின் இறை மையாகப் பாரப்படுத்தப்படும்.

## 4.8 பிராந்திய அரசுக்களின் ஒன்றியமே இலங்கைத் தீவு

தமிழீழத் தேசியத்தினரைப் பொறுத்த வரை இலங்கை தீவின் வரலாறு முழுவதி லும் பிரித்தானியர்கள் காலம் வரை பிராந் தியங்களின் அரசையே காணக் கூடியதாக உள்ளது. இலங்கைத் தீவு தமிழர்களது அரசுக்களினதும் சிங்களவர்களது அரசுக் களினதும் பிராந்திய அரசுக்களை கொண்டி ருந்தன. அவை காலத்துக்கு காலம் நட்பு நிலைகளையும் பகைமை நிலைகளையும் வெளிப்படுத்தியுள்ளன. எனவே இலங்கைத் தீவு பிரித்தானியர் தமிழ் சிங்கள இணைப்புக் களை ஏற்படுத்தும் வரை ஒற்றையாட்சிக்குள் இருந்ததாக வரலாறு கிடையாது.

## 4.8 தமிழீழ மக்களின் மண்ணின் மேலான இறைமை பிரித்தானிய காலனித்துவத்தால் மதிக்கப்பட்டது

பிரித்தானியாவின் காலனித்துவ காலக் கொள்கையின் ஆரம்பத்தில் அவர்கள் எந்த சனத்தொகையை தனித்துவமான இறை மைக் கோரிக்கைக்கு உரிமையுள்ளவர்க ளெனக் கருதினார்கள் என்பது குறித்து பற்றிக்மக்கிலம் இறைமையின் பகிர்வு - இந்திய மக்கள் இனங்களும் மக்களின் சமத் துவமும் என்னும் நூலில் (1993) எடுத்து விளக்கியுள்ளார். எந்தச் சனத்தொகை தங் களுடைய பாரம்பரிய நிலத்தின் மேல் மேலாண்மை கொண்டவர்களாக இருந்தார் களோ அவர்களே பிரித்தானியர்களால் தனி யான இறைமை கோரிக்கைக்கு உரிமை யுள்ளவர்களென மதிக்கப்பட்டார்கள் என பற்றிக் மக்கலம் 1990களில் ஆர் வி ஸ்பரோ செய்த ஆய்வுகளின் அடிப்படையில் எடுத்து விளக்கியுள்ளார். இது இலங்கைத் தமிழர் களுக்கும் ஏற்புடைய ஒன்றாக அமைகிறது. இதன் அடிப்படையில்தான் சிங்கள தேசியத் தைச் சேர்ந்த ஒருவரையும் தமிழ்த்தேசியத் தைச் சார்ந்த ஒருவரையும் இலங்கையின் பிரதிநிதிகளாக பிரித்தானியர்கள் முதன் முதலில் இருதேசியங்களையும் இணைத்து உருவாக்கிய கோல்புறூக் அரசியலமைப் பின் கீழான சட்டசபைக்கு நியமித்தனர் எனலாம். இது இலங்கைத் தீவில் சிறு பான்மை பெரும்பான்மை இனத்துவ முறை கள் இயற்கையாக இருந்ததில்லை என்பதற் கான முக்கிய சான்றாதாரமாகவும் அமைகி றது. தேசியங்களின் ஒன்றிய ஆட்சி ஒன்றுக் கான அடித்தளமே கோல்புறூக் கமரோன் அரசியல் அமைப்பினால் உறுதி செய்யப் பட்டதெனலாம்.

## 4.9 மண்ணுடன் உள்ள தொடர்பைபறித்து இறைமையைப் பிரிக்கும் முயற்சி

மேலும் பழங்குடி மக்கள் மற்றைய இனங்களுடன் கலப்பினமாக மாறாது சுய நிர்ணய உரிமையும் நிலத்தின் மேல் உரிமையும் கொண்டவர்களாக வாழ அனு மதிக்கப்பட வேண்டுமென்பதற்கும் அவர் களுக்கு மண்ணின் மேல் உள்ள மேலாண் மையே தகுதி வழங்குகிறது என்று 1996ல் எல் ஸ்கொட் கௌட் மில்லேனியத்தில் பழங்குடியினரின் இறைமை என்ற நூலில் கூறுகிறார். இலங்கைத் தமிழர்களுக்கு அவர் கள் மண்ணின் மேல் உள்ள மேலாண் மையை பறிக்கும் சிங்களக் குடியேற்றங் களைச் சிங்கள அரசாங்கங்கள் 1950கள் முதல் வேகப்படுத்தியது தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் மண்ணின் மேலான தாயக உரிமையையும் அழித் தொழிப்பதற்கான அரசியல் செயற்திட்டமே அன்றி இலங்கையின் பொருளாதார அபிவி ருத்தி நோக்கம் அல்ல என்பதும் ஸ்கொட் கௌட்டின் கூற்றைப் படிக்கும் பொழுது நினைவுக்கு வருகிறது. இந்த தமிழீழ மக்களின் இறைமை அவர்களது மண் ணோடு என்றும் தொடர்வது அவர்கள் தங் களின் ஆட்சியுரிமையை கோருவதை சட்ட பூர்வமாக்கும் என்பதன் அடிப்படையில் தமி ழர் தாயகத்தை தமிழரிடம் இருந்து பிரித்தல் என்கிற அரசியல் செயல்முறை பாராளுமன் றப் பெரும்பான்மைக் கொடுங்கோன்மை யின் மூலமும் பின்னர் தமிழ் மக்களை அச்சப்படுத்தி அவர்களின் அரசியல் பணி வைப் பெறுதல் என்கிற சிங்கள பௌத்த இனவெறிக் கலவரங்கள் வன்முறைகள் மூல மும் தொடர்ந்து படைபல பிரயோகம் யுத்தத் திணிப்பு என்பன வழியாகவும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களின் அரசியல் செயற்திட்டமாகத் தொடர்கிறது.

## 4.10 யுத்தங்களையும் ஊடுருவல்களையும் தடுப்பது இறைமை மீட்சியாகிறது

இதனை நிறைவேற்ற சிறீலங்கா தமிழர் தாயகப் பகுதிகளில் திணிக்கும் யுத்தங் களையும் ஊடுருவல்களையும் தமிழீழ விடு தலைப்புலிகள் வலிந்து தடுக்கும் அரசியல் செயல்முறைகள் மூலம் தடுத்து நிறுத்து கையில் தமிழீழத் தாயகத்தின் பலபகுதிகள் மக்களின் நேரடி இறைமையின் கீழ் வரு கின்றன. இதனை நிர்வகிக்கும் இடைக்கால நிர்வாகம் தமிழீழத்தின் அரசு நோக்கிய அரசினை இயல்பாகவே தோற்றுவித்துள் ளது. இந்த விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சிறிலங்காவின் இறைமை என்பது செயலி ழந்து அங்கே தமிழீழ மக்களின் இறைமை செயல்படுகிறது என்பது வெளிப்படையான உண்மை. இந்நிலையில் இந்த தமிழ் பிராந் திய அரசினதும் சிங்கள பிராந்திய அரசின தும் இறைமைகள் எவ்வாறு பகைமை அற்ற நட்பு நிலையினூடாக இலங்கைத் தீவின் இறைமைக்கு வழிகாட்ட கூடும் என்பதே இலங்கை தீவில் அமைதிக்கும் பொருளா தார சுபீட்சத்திற்கும் உதவக் கூடியதாக அமையும்.

https://tamileelamarchive.com/

# 5 ஒருமைப்பாடு என்பது மண்ணின் மக்களால் உருவாக்கப்பட வேண்டியது

இனி ஒருமைப்பாடு என்பது ஐக்கிய நாடுகள் சபையினால் அதன் அங்கத்துவ நாடுகள் சிதைவுறாது இருப்பதற்கான சட்ட மாக உள்ள ஒன்று. ஆனால் லிச்டன்ஸ் டைனின் இளவரசர் 2வது ஹான்ஸ் அடம் 2001ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி சர்வதேச தந்திரோபாயங்கள் ஆய்வு நிலை யத்தில் ஆற்றிய உரை இவ் விடயத்தில் புதிய சிந்தனையைத் தருகிறது. அரசுக் களுக்கும் அவற்றை உருவாக்கிய மனிதர் களுக்கும் உள்ளது போல் வாழ்க்கை வட்டம் உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் எந்த அங்கத்துவ நாடாவது ஐந்து தலைமுறைக்கு இப்பொழுது உள்ள அதே எல்லையுடன் இருக்க முடியாது என்பது நாமறிந்த ஒன்றே. இதனை மறந்து இந்தப் பரிணாம மாற் றத்தை உறைய வைத்தால் அது வன்முறை களையே வளர்க்கும் என்று அவர் எச்சரித் தார். இதுதான் இலங்கைத் தீவைப் பொறுத்த மட்டிலும் யதார்த்தமாக உள்ளது. மேலும் ஒரு மண்ணின் ஒருமைப்பாடு என் பது அம் மண்ணின் மக்கள் தங்கள் விருப் பின் பேரில் ஒருவரை ஒருவர் அவரவர் எல் லைகளில் சமமாக மதிப்பதன் மூலம் பெறப்படல் வேண்டுமே தவிர இதனை எந்த ஒரு மண்ணிலிருந்து வேறுபட்ட சக்திகளா லும் உருவாக்க இயலாது என்பதையும் கவனத்தில் கொள்ளல் அவசியம். இதற் காகவே இலங்கையில் புதிய அரசியல் கலாச்சாரம் தோன்றுவதற்கு இடைக்காலத் தன்னாட்சி ஒன்றின் தேவை வலியுறுத்தப் பட்டது. இந்த கால அவகாசத்தின் பின்னரே மக்களிடை யுத்த நினைவுகளின் நெகிழ்ச்சிக் குப் பின் ஒருமைப்பாடு குறித்த சிந்தனை மலரமுடியும்.

## 5.1 சிங்கள ஆட்சியினதும் கலாச்சாரத்தினதும் உருவாக்கத்தில் தமிழர் பங்கேற்றனர்

அமரர் ஜி ஜி பொன்னம்பலம் இலங்கை யில் தமிழர்கள் சிங்கள அரசு உருவாக்கமும் சிங்கள கலாச்சாரமும் நிலை பெறுவதற்கு ஆற்றிய வரலாற்றுப் பணிகளை சோல்பரி ஆணைக்குழு தமிழரின் கோரிக்கையை நிராகரித்த வேளையில் பிரித்தானியாவுக்கு அனுப்பிய மனுவில் மிகத் தெளிவாக எடுத்து ரைத்திருந்தார்.

## 5.2 தமிழீழ மக்களின் பங்களிப்பாலேயே சிங்கள மக்களின் விடுதலை வாழ்வு சிறப்புறும்

அவ்வாறே தமிழீழ மக்கள் தங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் அடக்குமுறை ஒடுக்குமுறையற்ற சிங்கள ஆட்சிமுறைமை உருவாவதற்கு ஆற்றும் பணிகள் நாளைய வரலாற்று ஆய்வாளர் களால் வெளிக்கொண்டு வரப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை. சுருக்கமாகக் கூறு வதானால் இலங்கைத் தீவின் இறைமை களையும் ஒருமைப்பாட்டையும் தமிழீழ மக்களுக்கு கிடைக்கப்போகும் தார்மீக வெற்றிதான் நிர்ணயிக்கும். ஆதலால் தமிழீழ மக்களின் கோரிக்கை இலங்கைத் தீவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பாதிப்பு எனக் கூறி முழு இலங்கைத் தீவினதும் பாதுகாப்பை அமைதியை அபிவி ருத்தியை சிதைக்கிறார்கள் என்பதைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் சிந்தையில் கொள்தல் அவசியம்.

## 5.3 சிங்கள தமிழ் தேசியங்களின் உறவுநிலையே இலங்கையின் ஒருமைப்பாடாகும்

எனவே சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இலங்கைத் தீவில் தங்களது தாயகங்களின் ஆட்சி முறைகளில் தெளிவையும் நீதியை யும் சமத்துவத்தையும் உருவாக்கி தமக்கான இனத்துவ உறவை அச்சங்கள் ஐயங்கள் அற்ற சமத்துவ உறவாகப் பலப்படுத்தும் பொழுதே அங்கு வாழும் முஸ்லீம் மக்கள் மலையக தமிழ் மக்கள் ஆகியோரின் சமுக பொருளாதார அரசியல் உரிமைகளை அவர்களும் இயல்பான முறையில் பெற்று வாழ்வதற்கான இலங்கைத் தீவுக்கான ஒன்றிய ஆட்சி மீளவும் மலரும். அப்பொ முது தான் இலங்கைத் தீவின் ஒருமைப்பாடு என்பது உண்மையான அர்த்தமுள்ளதாக மாறும்

## முடிவுரை:

இலங்கைத் தீவின் தமிழீழ மக்கள் பிரச்சினை என்பதில் தமிழீழ மக்கள் தமது தாயகம் தேசியம் தன்னாட்சி என்பதனை கடந்த முப்பது ஆண்டு கால வரலாற்றுப் பரிணாமத்தில் நிறுவி நிற்கின்றனர். இந்த வரலாற்று யதார்த்தத்தை ஏற்கின்ற வகை யில் சர்வதேச சமுகமும் சிங்களத் தலைமை களும் செயற்படும் பொழுதே இலங்கைத் தீவில் அமைதியான பாதுகாப்பான அபிவி ருத்தி என்பது நடைமுறைச் சாத்தியமாகும். இன்றைய நிலையை நேற்றைய நிலையில் வைத்து தீர்மானிக்காது இன்றைய நிலை யின் யதார்த்தத்தில் நாளைய நல்லாக் கத்தை சிந்திப்பதே உண்மையான தேச பக்தி. இதனை இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் உணர்ந்து இன்றைய யதார்த்தத்தில் இணைந்து சிங்கள சிறீ லங்கா அரசும் தமிழீழ அரசும் இயங்கு கின்றன என்ற யதார்த்த உண்மையின் அடிப்படையில் சிங்கள மக்கள் தமிழீழ மக்கள் முஸ்லீம் மக்கள் மலையக மக்கள் அனைவருக்கும் ஏற்ற ஒன்றிய ஆட்சியினை உருவாக்க முடியும். எனவே தமிழீழ மக் களின் தேசிய தேச தன்னாட்சி அங்கீகாரம் என்பது. இலங்கைத் தீவின் பிரிவினைக் கான முயற்சி அல்ல. இலங்கையின் இயற்கை தன்மையை வரலாற்றுத் தன் மையை மக்கள் இனங்களின் இயல்புநிலை களை உறுதி செய்வதன் மூலம் இலங் கையில் வாழும் எல்லா மக்களுக்குமான உன்னதமான சமத்துவமான நடைமுறை ஆட்சி முறையை தோற்றுவித்து இலங்கைத் தீவின் இறைமையையும் ஒருமைப்பாட்டை யும் மீள்விப்பதற்கான செயல்முறை.

இதனால்தான் இதனை மண்மீட்புப் போர் என்றும் அழைக்கின்றனர். மண் மீட்கப் படுகையில் அந்த மண்ணில் வாழும் அனை வரும் வளமான விடுதலை வாழ்வு பெறுவர். இந்தச் செயல் முறையின் வெற்றியிலேயே பிறநாட்டுச் சக்திகளின் தலையீடுகள் அற்ற சிங்கள தமிழீழ முஸ்லீம் மலையக மக் களின் ஜனநாயக ஆட்சி இலங்கைத் தீவில் தோன்றும். இதனை தங்களின் உயிர்த்தியா கங்கள் நிறைந்த யுத்தத்தினால் நிறைவேற்ற வேண்டுமென சிங்கள பௌத்த மேலாண் மைகளும் சர்வதேச பிராந்திய மேலாண்மை களும் விரும்பின் இலங்கைத் தீவுக்கான அந்தப் புனித யுத்தத்தின் வெற்றியின் மூலம் அதனை நிறைவேற்றவும் விடுதலை வேட்கை கொண்ட தமிழீழ மக்கள் தயாராக வுள்ளனர். இந்த யதார்த்த உண்மைகளை யும் மனித விடுதலை நோக்கிய இலட்சியங் களையும் சர்வதேச உலகும் சிங்களத் தலைமைகளும் சரிவரப் புரிந்து கொள்ளாத வரை அல்லது புரிந்து கொண்டு சரிவரை வெளிப்படுத்தாத வரை தமிழீழ மக்கள் பிரச்சினைக்கு அவர்களால் தீர்வு காண முடியாது. எனவே அவர்களால் முடியாவிட் டால் தமிழீழ மக்கள் தாமாகவே தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள உருவாக் கியுள்ள அரசு நோக்கிய அரசின் (நடை முறை அரசு) அங்கீகாரத்தை தமிழீழ மக்கள் உலகின் மக்களாகவும் உள்ளனர் என்ற உண்மையின் அடிப்படையில் அளிப்பது ஒன்றே தீர்வுக்கான வழியாகும்.

https://tamileelamarchive.com/

# நானும் கைதியும்

■ நிலவுமகள்

நான் திகதியை மறந்துவிட்டேன் பெப்ரவரி10 தாக இருக்கலாம் இல்லை அதற்கும் ஒருவராத்திற்கு முன்பு காலைவேளையில் ஏதோ அலுவலக வேதாவிடம் சென்றேன் வேதா என் பெற்றார் வசிக்கின்ற ஊருக்கு கடமைக்காக புறப்பட்டுக்கொண்டிருந்தா. ஊருக்குப் போறன் என்று சிரித்த வேதாவிடம்
நல்லது வீட்டில எல்லாரையும் கேட்டதாக சொல்லுங்கோ என்றேன்
உங்கட அம்மா நல்லா புத்தகம் வாசிப்பா என்ன? என்ற வேதா என்சிரிப்பை பார்த்தபடியே இந்தப் புத்தகம் அம்மாவிற்குத்தான் கொண்டு போறன் நீவாசிச்சிட்டியா என்றா
கறுத்த அட்டையின் மேல் கலங்கல் சித்திரத்துடன் இருந்த புத்தகத்தின் தலைப்புச் சிறையில் பூத்த உணர்வின் ஒளி என்றிருந்தது
யார் எழுதியது என்றேன்
ச்சு என்னப்பா ! நீ என்னும் வாசிக்கல்லயோ
கல்லடி றொபேட் எழுதின கவிதைப் புத்தகம்
நான் வாசிக்காததற்கும் வேதா கவலைப்பட்டது புரிந்தது கல்லடி றொபேட் எங்கயோ காதில் விழுந்த பெயராகப்பட்டது அதுவரை என்கவனத்தில் பதியத்தவறிய பெயர்தான் விதையை என் இதயத்து நாற்றங்காலில் போட்டுக் கொண்டது.
சரியம்மா இப்ப வாசிக்கட்டும் பிறகு எனக்குத் தாங்கோ என்றுவிட்டு வேதாவிடம் விடை பெற்றுப் புறப்பட்டேன் பிறகு பார்ப்பம் என்று அதிக சிரத்தையற்று இருந்தேன்.
ஏனைய பரபரப்புக்களில் என்னைக் கலைத்துக்கொண்டு திரிந்த நாளொன்றின் இரவில் வேதாவிடம் கதைத்துக் கொண்டிருந்த போதுதான் கல்லடி றொபேட் எனக்குள் முளைதள்ளினான் வேதா அவனைப்பற்றியும் அவனது கவிதைகள் பற்றியும் நிறையவே சொன்னா.
சிறைக்கயே கிடந்து நாட்ட நேசிக்கிறாங்கள் என்று பெருமூச்சுவிட்ட வேதாவிடம்
போராளியா என்றேன்
இல்ல அவன் ஒரு சின்னப் பொடியன் கொலை வழக்கில சம்மந்தப்பட்டதால பிடிச்சவங்கள் கொண்டு போய் உள்ள தள்ளிட்டாங்கள் பாவம் இவன் உண்மையிலேயே இவனுக்கும் அதற்கும் சம்மந்தமேயில்லை 21வயசில சிறைக்குப் போனவன் இப்ப 25, 26வரும் வேதா வேதனையோடு சொல்லிக்கொண்டிருந்தா றொபேட் இந்தப் பெயரிற்குரியவன் நான்கைந்து இலைகளோடு வளரத் தொடங்கினான் எனக்குள் தண்ணீருற்றி பாதுகாப்பாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஆசை எனக்குள் தளைத்தது அதற்கு நீர் வார்ப்பது போன்று வேதா பேசிக்கொண்டிருந்தாள்.
றொபேட்டின்ர கவிதைகளை வைச்சு ஏதும் செய்யலாமா? அவன்ர கவிதைகளை வெளியே கொண்டுவர வேணும் அவனைப் போல இருக்கின்ற ஆட்களைப்பற்றி எல்லோரும் கதைக்க வேண்டும் ஏதாவது செய்.
வேதா தந்த ஊக்கம் என்னில் தொற்றிக் கொள்ள கவிதைகள் வேண்டுமே என்றேன்.
அவனோட கதையன் அறிமுகப்படுத்தி விடுறன் வேதாவை ஆச்சரியமாகப் பார்த்தேன் சிறைக்குள் இருப்பவனோடு கதைக்கலாமா? என்ற கேள்வி எனக்குள். கதைக்க கிடைத்தது வாய்ப்பு
அக்கா வணக்கமக்கா என்ற குரல் கேட்டு உண்மையாகவே வியந்து போனேன் கலகலப்பும் சிரிப்பும் பொங்கி வழிகின்ற அந்தக் குரலுக்குரியவன் சிறைக் கம்பிகளுக்குள்தான் இருக்கின்றானா நம்பவே முடியவில்லை சில வார்த்தைகளிலேயே விடயத்திற்கு வந்தான்.
வேதாக்கா சொன்னா ஊடகத்தில வேலை செய்யிறியளாம் கவிதை சொன்னா எழுதி ஊடகத்தில சேர்த்துக் கொள்ளுவிங்களாம் அவனுடைய



https://tamileelamarchive.com/

எண்ணத்தின் வேகம் புரிந்து குரலில்.
ஓமோம் ஆனா நான் செய்யக்கூடிய
கவிதைகளிற்கு காட்சிப்படுத்தல்கள்
இருக்க வேணும் என்ற என்னிடம்
அப்படியெண்டாக்கா என்றான்.
இப்ப உதாரணத்திற்கு சொல்லுறன்
சலசலத்து ஓடுகின்ற வாய்க்காலின்
கரையோரம் என்று சொல்லேக்க ஒரு
வாய்க்கால் அதில அப்படியே
கரையோரம் அப்பிடி மனசுக்க காட்சிகள்
ஓடும் என்ன! என்றேன்.
அ. என்றவன் அமைதியானான்
ஒவ்வொரு கவிதையும் முடிய ஒவ்வொரு
சிறுகதை வாசிச்ச மாதிரி ஒரு குறும்படம்
பாத்த மாதிரி இருக்கோணும் அப்ப
நீங்கள் ஒரு கதையை கருவா
வைச்சுத்தான் கவிதை எழுதவேண்டும்
என்றேன்.
சரியக்கா நான் எழுதினதில ஒன்றை இப்ப
வாசிச்சு காட்டுறன் என்றுவிட்டு தாள்கள்
புரட்டுவது புரிந்தது எனக்குப் புரியாத
குழப்பங்களில் அவன் குழம்பிக்
கொண்டிருந்தான் தன்
கண்முன்னாலேயே துடிக்கத்
சித்திரவதைப் படுத்துகின்ற இளம்
பெண்கள் பற்றி அந்தக் கவிதை எரிந்தது.

மகாபாரத இதிகாசத்தில்
துச்சாதனனினால்
திரௌபதையின் சேலை
உரியப்பட்ட போது
திரௌபதி எழுப்பிய
அவல ஓலம் கேட்டு
கண்ணன் கண்திறந்தான்
எங்கள் ஈழத்தில்
எத்தனை எத்தனை
கன்னிப் பெண்களின் ஓலங்கள்
எங்கள் குலக் கொடிகள்
எழுப்பிய ஓலங்கேட்டு
கண்ணன் வரவில்லை
கண்ணன் வரவில்லை
எங்கள் கன்னியரின்
ஓலங்கள்
இன்னும் ஓய்ந்தாக இல்லை
சித்திரவதையின் விசும்பல்கள்
இன்னும் நிறுத்தப்படவில்லை
இந்த ஓலங்களும்
விசும்பல்களும்
இனிமேலும் எமது
ஈழத்து மண்ணில்
கேட்கக் கூடாது
கேட்கவே கூடாது
என்று சொல்லி நிறுத்தினான்
கவிதைகளில் சிலதை எழுதிக்
கொண்டபின் விடைபெற்றேன்.
வேதாவும் நானும் கதைத்துக்
கொண்டிருந்தோம் நான் எழுதிய
கதையொன்றின் கதையை சொல்லிக்
கொண்டிருந்தேன் தொடர்ந்த கதையில்
எங்கள் ஊர்களின் கதைகளும்
உறவுகளின் கதைகளும் வந்து போயின
எப்படியோ றொபேட்டும் வந்து விட்டான்.
வேதா சொன்னா நீ சொன்னியாம் ஏதோ
சலசலத்து ஓடுகின்ற வாய்க்காலின் ஓரம்
எண்டு அப்பிடிதான் நினைச்சுக் கொண்டு
வெளியே நிண்டவனாம்.
அது எப்படிச் சலசலத்து ஓடும் என்று
நினைத்துக் கொண்டிருக்க சலசலப்புச்
சத்தம் கேக்குதாம் கவனிக்க சிறையின்ர
சாக்கடை சலசலவெண்டு பக்கத்தில
ஓடுதாம்.
மனசு சுவீரென்று வலித்தது என்ன வேதா
நான் கவலைப்படுத்திப் போட்டேனா?
என்றேன் அழாக்குறையாக
சே என்று தலையசைத்துவிட்டு
றொபேட்டின் சிறையில் பூத்த
உணர்வினொளி நூலை எடுத்துக்
கொண்டு வந்தா தனது மனதில் ஆழமாய்
தைத்த வரிகளை மீளவும் மீளவும்
வாசித்துக் காட்டினா அவனிற்காகவும்
அவனைப் போன்ற அரசியற்
கைதிகளுக்காகவும் உள்ளுக்குள் அழுது
கொண்டோம்.
எங்களின் பேச்சை திசைதிருப்பிய குரல்
றொபேட் என்றது வேதா அவனுடன்
பேசப் போக நான் எழுதினேன்.
நீ சாக்கடையிலோடும்
சலசலப்பையே கேட்பவன்
அருவிக் கரையின் சலசலப்பில்
உறங்கி விழிப்பவள் நான்
நீ நீயாகவும்
நான் நானகவும்
இருந்து கொண்டு தானே
பேச முடியும்
ஆனாலும்
நீ நேசிக்கும் என்னைவிட
சாக்கடை வாசியே
உன்னை
நான் நேசிக்கிறேன்
உனக்காகவும் என்னை
ஆயுதமாக மாற்றுவேன்

சிறைக்காற்றை மட்டுமே
சுவாசித்து சுவாசித்து
சிறுத்துவிட்ட
சுவாசப் பையிலிருந்து
திணறியபடியே
மூச்சும் வந்து போனது

என்று வேதா படித்துக் காட்டிய அவனது
வரிகள் நினைவில் புரள
இப்படியெழுதினேன்.

சிறைச் சுவாசத்திலிருந்து சுருங்கியவன்
சுவாசப் பையை நினைத்து
என்சுவாசப்பை
விரிந்து கொள்கின்றது
பெரும்மூச்சுக்களால்.

இதயம் மூழுக்க வேதனையாய் இருந்தது
அழவேண்டும் போல முகந் தெரியாத
அந்த தம்பியின் குரலை கேட்கும் போது
அவன் வரிகளை படித்துக்
காட்டவிரும்பினேன் எழுந்த
உணர்வோடே இதையும் எழுதினேன்.
எனக்கு நானே
கம்பிகளுக்கு என்ன தெரியும்
கவலைப்படாதே
தம்பிகளின் உலகம்
கம்பிகளுக்கு வெளியேதான்
இருக்கிறது.

பேசிக்கொள்ளக் கிடைத்தபோது
இவற்றைப் படித்துக் காட்டினேன்
வியந்தும் மகிழ்ந்தும் சொல்ல
வார்த்தையின்றித் தவித்தான் இருட்டுச்
சிறைக்குள் கேட்கின்ற எங்களின்
குரல்களே சூரியக்கதிர்கள் என்பதாய்
சொன்னான் அவனது இதயத்து
நாற்றங்காலில் நானும் வேரூன்றி
விட்டதைப் புரிந்து கொண்டேன்.

இரவிரவாக நித்திரையின்றித் தவித்தேன்
அவனுடைய பயங்கரமான இரவுகளைப்
பற்றி மீளவும் நினைத்துக் கொண்டேன்
இரவு என்னுந் தலைப்பில் இவனுடைய
அறிமுகத்திற்கு முன்னான ஒரு
இரவில்நானேஎழுதிய கவிதையை
நினைத்துக் கொண்டேன்

காலைகளின் முன்னுரை
நிலாவின் ஆட்சிக் காலம்
அமைதி சுரக்கும் ஊற்று
அம்மா மேல் கல் போட்டு
கதை கேட்கும் நேரம்.
இரவு என்பது
இருட்டு மட்டுமல்ல
அழகு
அமைதி
நாளின் பாதி
இரவின் நிறம்
வெறும் கறுப்பில்லை
கறுப்பு இரவும் இருக்கின்றது
இருட்டிலும்
மல்லிகை முகையவிழ்க்கும்
இருட்டிலும் ஆற்றிலே
சலசலக்கும்
இருட்டிலும்
அலைகள் கரைதழுவும்
இருட்டிலும் அமைதியிருக்கின்றது
நாளின் பாதி இருக்கின்றது
காலத்தை அளக்கும்
கால்களின் ஓசை
இரவின்பாசை
இரவை வரைவது
கடினம்

https://tamileelamarchive.com/

என்னுடைய அழகும் அமைதியும்
நிறைந்த நாளின் பாதியில் எவ்வளவு
சுகந்தமும் இனிமையும் ஆனால்
அவனுடைய இரவுகளில் பிணவாடை
வீசுகிறதாம் துண்டு வானத்தில்தான்
பார்க்கத்துடித்த நிலவைப்பற்றியும்
சிறுத்துவிட்ட சுவாசப் பைபற்றியும்
கவியொன்றில் சொல்லியிருந்தான்
நெஞ்சைக் கருக்குமடடையால் அறுத்த
அந்தக் கவிதை அதற்கு
தலைப்பிட்டிருந்தான் கழு(கு)த்தறுத்த
கவிதை என்று அவனுடைய இரவுகளைப்
பற்றிய பயம் என்னுந் தொற்றிக் கொள்ள
கவிதைக்குள் விழுந்தேன்

நேற்று
நானெழுதிய கவிதைக்கு
தலைப்புத்தேடி
தலையணைக்குள்
முகம் புதைத்தேன்
என் விழிகளுக்குக்
கொஞ்சம் சந்தேகம்
விரக்தியின் விழிம்பினில்
இதயமென்று
சிறைக்காற்றை மட்டுமே
சுவாசித்து சுவாசித்து
சிறுத்துவிட்ட
சுவாசப் பையிலிருந்து
திணறியபடியே
மூச்சும் வந்து போனது
என் விழிகளுக்கு
அதிகரித்திருக்க கூடும்
சந்தேகம்
உணர்வுகள்
செத்துவிட்ட என்னால்
உணரமுடியவில்லை
வாழ்வின் வசந்தங்களை
நுகரஆசை
இருளினாட்சி
என்வாழ்வில்
பிணவாடைவீசுகிறது
சமாதானக் காற்றில்
மின்னல் அங்குமிங்கும்
வெட்டியபடி
விரைவில் முழங்கலாம்
பகலில் தெரியாத
நிலவைப் பார்க்க
பயணம் நடக்கிறது
கழுத்தறுத்த
முண்டங்கள்சில
தலையணையினுள்
முகம் புதைத்த
என் விழிகளில்

றொபேட் போன்றோரின் இரவுகளைப்
பற்றியே நினைத்தபடி வெளியில்
நோக்கினேன் நிலவு இதமாய் ஒளி
பொழிந்தது இயற்கையின் சின்னச்
சின்னச் சத்தங்கள் இதமாய்
கேட்டது.மெல்லிய ஈரக்காற்று சூழலை
நிறைத்தது அழகும் அமைதியும் நிரம்பி
வழிந்த இரவை ரசிக்க முடியாமல் மனசு
தத்தளித்தது.

குளமும் நிலாவும்
கணவன் மனைவி
என்ன
நம்பமுடியவில்லையா
வாருங்கள் காட்டுகிறேன்
இரவில் குளத்தின் மடியில்
நிலவு மயங்கிக் கிடப்பதை
என்று வேதா சொன்ன விவேக்கின்
கவிதை நினைவிற்கு வந்தது குளத்தையும்
நிலவையும் நினைக்க நினைக்க
கவலையாய் இருந்தது இவற்றை
நேசிக்கின்ற எத்தனை இதயங்கள்
சிறைக்குள்ளே.
தெரிந்த வானத்தையும் வந்த நிலவையும்
மறைக்க விரும்பி சாளரத்தை சுற்றிக்
கொண்டேன் நித்திரைக்காய் முயன்றேன்
என் குறிப்பேட்டில்எழுதிய பழைய
கவிதைகளே நினைவுக்குள் வந்து வந்து
நித்திரையைக் கலைத்தது.

ஆயிரம் மக்கள் கூடி
இளைஞர்களை கொன்றனர்
பண்டாரவளை
இருபத்தொரு இளைஞர்களை
ஊர் மக்கள் கொன்றனர்
நிராயுத பாணிகள்

என் தம்பி சிறைவாசன் எனக்குள்ளே
வளர்ந்து விட்டான் வலிகளால் பிறந்தான்
வார்த்தைகளில்சிரித்தான் கனவுகளில்
வந்தான் கண்களில் வழிந்தான்.
அதிகாலை வேளைக்கே விழிப்பு வந்து
விட்டது பக்கத்து வாய்க்காலின்
கரையோரம் உயர வளர்ந்திருக்கும்
வெளவால்களின் மருதமர வீட்டில் ஒரே
பரபரப்பு இத்தனை நாட்களின்
காலைகளிலும் அச்சத்தங்களை ரசித்துக்
கேட்டாலும் தலைகீழாக தொங்கிக்
கொண்டே கிடக்கும் வெளவால்கள்
பற்றிய கவலையும் இருந்தது.

காலையிலும் மாலையிலும்
படையெடுத்துப் பறந்து வானம்
முழுவதையும் அலங்கரிக்கும் வெளவால்
சித்திரம் ஆசையோடு அண்ணார்ந்து
பார்த்து வருவோர் போவோரையும்
நிறுத்திப் பார்க்க வைத்து பரவசப்பட்டு
அட முட்டாள் வெளவால்கள் கிளம்பிய
கொஞ்ச நேரத்திற்குள்ளேயே திரும்பி
வந்து முடிச்சுக்களாக
தொங்கிக்கொள்கின்றனஎன்றும்
நினைத்து
அவைகள் இதோ இன்றைய
காலைப்பொழுதையும் கலகலத்துக்
கொண்டு
வரவேற்கின்றனவிழித்தவுடனேயே அந்த
கீச்சுக் கீச்சுச் சத்தங்கள் றொபேட்டின்
நினைவுகளையே அள்ளி நிறைத்தன.
வெளிச்சத்தை ஏற்றி அவனது
கவிதையைப் புரட்டினேன்.

சலசலக்கும் நதிக்கரையோசை
கீச்சிடும் பறவைகளின் இராகம்
தலையசைத்து சிரிக்கும்
மலர்களின் தலையாட்டல்
இயற்கை எழிலின்
உன்னத உலகை
பார்த்து ரசிக்க முடியாத
துர்ப்பாக்கிய சாலிகள்
நாங்கள்.
மனது வலித்தது அவனது கவிதை
நூலுடன் என் பல நாட்கள் கழிந்தன.
றொபேட் சிறைக்குள் இருந்து
சிந்திப்பவை எல்லாம் தாயகம் பற்றியே
என்கிறது கவிதைகள் நாட்டின் எதிர்காலம்
பற்றியே எண்ணிக்கொண்டிருக்கின்ற
அந்ததமிழ் கைதியின் கவிதைகளை
அடுத்தடுத்த இதழ்களிலும் நீங்கள் படிக்க
அனுப்பிக் கொண்டே இருப்பேன்
ஏனெனில் றொபேட்
எழுதிக்கொண்டேயிருக்கின்றான்
அவனுடைய சிறையில் பூத்த உணர்வின்
ஒளியை படித்துப் பாருங்கள்
றொபேட்டிற்கும் அவனைப் போன்ற
மனிதர்களுக்குமாக வேதா எழுதிய
கவிதையைத் தந்து இந்த உணர்வின்
ஒளியை நிறைக்கிறேன்.

சிறை
விரிந்த உலகின் தரிசனங்களோடு
விழிகளுக்குள்ளே பசிய கனவுகளோடு
நாற்றாக விட்டு வளர்த்த
நம்பிக்கைகளோடு
இதயத்தில் அன்பின்
ஈரத்தினோடு
எல்லோருக்குமேயான
விடியலுக்காய்
இரத்தம் சிந்தும் சூரியன்களாக
இருள் கிழித்துப் பாயும்
பேரொளிப்பிரவாகமாக
சிறைக் கம்பிகளுக்கு பின்னாலும்
சில சுதந்திர மனிதர்கள்
குறுகிய பார்வையும்
வரண்ட விழிகளும்
அவ நம்பிக்கையின்
அங்கலாய்ப்புக்களும்
ஈரமே இல்லாத இதயமுமாய்
மனத்தின் இருட்டில்
பார்வையைத் தொலைத்துவிட்டு
வெளியே அந்தரித்தபடி
அலைகிறார்கள்
வாழ்க்கையின் கைதிகள்.

https://tamileelamarchive.com/

# ஆடு + மாடு + கோழி + வீடு + வளவு = மனிதஉயிர்கள்

கதைக்கு கவிதை கல்லடி றொபேட் ● கதை - நிலவுமகள்

"என்ன ராசன், நீ இருக்கத்தான் போறியா" கேட்ட தமையனை ஏறெடுத்துப் பாத்தான் ராசன். பெட்டி படுக்கை, மனைவி, பிள்ளைகளோடு, வன்னிக்குப் புறப்பட்டபடி நின்றான் அண்ணா. "ஊருப்பட்ட கோழி குஞ்சுகள் நிக்கு பாத்துப் பாத்து ஊத்தி வளத்த பயிர்கொடிகளும் மரங்களும் வளவுமுழுக்க நிக்கு வேர்வையில குழைச்சுக்கட்டின வீடுவளவு என்னண்டண்ண இவ்வளவத்தையும் விட்டிட்டு..." மனசுக்குள் நியாயம்பேகிய வார்த்தைகளை அடக்கிக்கொண்டு நீங்க போங்க புறவுவாறம்' என்றான் ராசன். "புள்ளகுட்டிகள் கவனம் கெதியண்டு வரப்பாருங்கோ" என்று சொன்ன அண்ணிக்கு தலையாட்டி வழியனுப்பினான் பெட்டி படுக்கைகளோடு போய்க் கொண்டிருக்கும் அண்ணன் குடும்பத்தைப் பார்க்க ராசனுக்குப் பாவமாய் இருந்தது.



"சொந்தமாய் இருக்கும் வீடு வளவை விட்டு இடம்பெயந்து போகும் அவர்கள் வன்னியில் எங்கேபோய் இருக்கப் போகிறார்கள் பிள்ளைகளை எப்படி படிப்பிக்கப் போகிறார்கள் எப்படிச் சம்பாதித்து எப்படி வாழ்க்கையை ஓட்டி" ராசனுக்கு வேதனையாய் இருந்தது தன் வளவை விடவும் பயன் தருவது அண்ணனுடையது பெருமூச் செறிவதைத் தவிர ராசனால் எது செய்யமுடியும்.



விரிந்து பரந்த வன்னிப் பெருநிலப் பரப்பில் ஏதாவதொரு காட்டுத்துண்டையோ வாய்க்காலோரத்தையோ துப்பரவாக்கி வாழ்வார்கள் என்ற நம்பிக்கை ஏனோ ராசனுக்குப் பிறக்கவில்லை.

அண்ணன் குடும்பம் பற்றி கவலைளோடு மாடுகளைக்கட்டி கோழிக்குஞ்சுகளைத் திறந்துவிட்டு தோட்டத்துள் இறங்கினான். பொழுது முச்சூடும் மனைவியின் உதவியோடு வளவைச் செழுமைப்படுத்தி நிம்மதியாய் இரவு உறங்கப் போனான். காலைப் பத்திரிகையின் முதற் பக்கத்தில் மூன்றுகுழந்தைகளோடும் ராசனும் மனைவியும் இரத்த வெள்ளத்தில் கிடந்த கோரக்காட்சி சன்னங்களின் வெற்றுக்கோதுகளும் கம்பிகளும் அங்கே சிதறிக்கிடந்தன.

நேற்று தம்பி
இன்று அக்கா
நாளை நானாகவும்
இருக்கலாம்
பின்னே துரத்துகிறது
அநியாயச் சாவு

https://tamileelamarchive.com/



# வெறுங்கூட்டுக்குள்

செ.யோகநாதன்

திடீரென்று விளக்குகள் யாவும் அணைந்ததுபோல எங்கும் கும்மிருள் சூழ்ந்துகொண்டது. குளிர்காற்று ‘உய்’ என்ற இரைச்சலுடன் சுற்றுப்புறம் எங்கும் பரவி, கணப் பொழுதில் மழை சடசடவெனப் பெய்யத்தொடங்கியது. வெறிகொண்டு முழுவேகத்துடன் மழை அடித்து ஊற்றத் தொடங்கியதும், எங்கும் இரைச்சல் மூர்க்கமான அலையாய்ப் பரந்தது. வெளிவாசலில் உட்கார்ந்திருந்த முருகானந்தம் முகத்தில் பரவசமும் அவசரமும் பொங்க, சட்டென்று எழுந்துபோய் இடதுபுறத்திலுள்ள அந்த அறைக்கதவை மெள்ளத் திறந்தார்.

எத்தனையோ நாட்களுக்குப் பின் அந்த அறைக் கதவைத் திறந்ததால், மெள்ள அனுங்குவதுபோல அது ஓசை எழுப்பியது. கதவு ஓரத்தில் இருந்த கொழுத்த பல்லியொன்று சட்டென்று சுவரில் எட்டிப் பாய்ந்து களைப்போடு ஓடியது. கதவைத் திறந்ததும் அறையினுள் ஒருவிதமான வாசனை கமழ்ந்தது. மெல்லிய தூசிமணம் சட்டென்று எங்கும் பரவியது.

அறையின் மேல் மூலைப்புறமாகத்தான் அவரது பார்வை முதலில் சென்றது. கண்களைத் துடைத்துக்கொண்டு, சட்டைப்பைக்குள் இருந்த மூக்குக்கண்ணாடியை எடுத்துக் கண்களில் அணிந்துகொண்டார். நிமிர்ந்து அந்த இடத்தைப் பார்த்தபோது வரிசையாகக் கட்டப்பட்டு இருந்த குருவிக்கூடுகள் பார்வையில் இடம்பிடித்தன. விதவிதமான அந்தக் கூடுகளுக்குள், பல நிறங்களில் சிறகுகளை அடித்தவாறு சின்னச் சின்னக் குருவிகள் வந்து அடைக்கலம் தேடிக்கொண்டு, பரவசமாக ஒலியெழுப்பிக்கொண்டு இருப்பதை புன்னகையோடு அவர் பார்த்தார். அவர் முகத்தில் இனம்தெரியாத பிரகாசம். ஆனால், கணப்பொழுதில் சொல்லமுடியாத துயரமும் அவர் முகத்தில் மெள்ள மெள்ளப் பரவிற்று. அவரை அறியாத பெருமூச்சும் சட்டென்று உதிர்ந்துபோயிற்று.

அந்த விசாலமான அறையில் இடதுபுறத்திலிருந்த மேசை, பெரிய புத்தக அலுமாரி, மூன்று கதிரைகள், வலது புறத்தில் இருந்த மெத்தை விரித்த கட்டில் என்பவற்றை இப்போதுதான் புதிதாகப் பார்ப்பதுபோல அவர் ஏறிட்டார். அந்த அறையை எப்போதுமே கூட்டிப் பெருக்கி வைத்திருக்கும் அனுசுயா, சில நாட்களாக அங்கு வரவில்லை என்பதை அங்கு வீசிய வாசனை சத்தமிட்டுக் கூவிற்று. அனுசுயா இப்போது ஆஸ்துமாவால் அடிக்கடி அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறாள்.

https://tamileelamarchive.com/

மேசைக்கு நேர் மேலாக பாரதியாரின் பெரிய படம் மாட்டப்பட்டு இருந்தது. அந்த அறையின் சுவர்களிலே பாரதியாரின் படத்தைத் தவிர, இன்னும் ஒரே பிரேமுக்குள் அடங்கிய வாசகம் மட்டுமே தொங்கவிடப்பட்டு இருந்தது. அவர் கண்களுக்குள் அந்த வாசகங்கள் மங்கலாகத் தெரிந்தன. ஞாபகத்தில் அந்த வார்த்தைகள், 'விட்டு விடுதலை ஆகி நிற்போம் அந்தச் சிட்டுக்குருவியைப் போல' என்று அபயனின் கம்பீரமான குரலில் ஒலித்தன.

திடீரென்று மனம் களைத்தவராக அந்த நாற்காலியில் அவர் அமர்ந்துகொண்டார். அபயன் இந்த அறையை விட்டுப்போய் பதினொரு ஆண்டுகள் ஓடிப்போய்விட்டன. அவனுடைய நினைவு வரும்போதெல்லாம் அவர் இந்த அறைக்குள் வருவதும், சொல்லமுடியாத மனவேதனை அவரைச் சுற்றிவந்து நின்று சித்திரவதை செய்வதும், பின்பு அவரே சுதாகரித்து தன்னைத்தானே ஆறுதல்படுத்திக் கொள்வதும் பலவருடங்களாக நடைபெற்றுவரும் சம்பவம். இப்போது குருவிகள் மேலும் சத்தத்துடன் 'கிக்கிஜிச்' சென்று கூடுகளுக்கு வெளியேயும் பறக்கத்தொடங்கின விநோதமான வண்ணக்குருவிகள். இவை அபயனைத்தான் தேடி வந்திருக் கின்றனவா என்று அவர் அடிக்கடி தன்னைத்தானே கேட்டுக் கொள்வார்.

அபயனுக்கு குருவிகள் என்றால் மிகவும் விருப்பம். குருவிகளோடு பேசுவான். கேள்விகள் கேட்பான். அவற்றின் ஒலிகளுக்கு எல்லாம் விரிவான அர்த்தம் சொல்லிக்கொண்டிருப்பான். அப்போது அவனது வார்த்தைகள், கவிதைகள்போல ஒலிக்கும். முகத்தில் பரவசமான புன்னகை பிரவகிக்கும். கண்களில் சொல்லுக்கு அடங்காத கனவுகள் தோற்றம்கொள்ளும். இதை அவரும், அனுசுயாவும் தம்மையறியாத பரவசத்தோடும், அக்கறையோடும் பார்த்துக்கொண்டு இருப்பார்கள்.

"அறைக்குள்ளே என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள் வெளியில் அடைமழை பெய்கிறது!"

முருகானந்தம் மெதுவாக அனுசுயா நின்ற வாசற்புற மாகத் திரும்பினார். முதுமையைத் தொட்டுநிற்கும் அனுசுயாவின் முகபாவம் அவரை எதையும் பேசவிடவில்லை. களைத்த குரலில் லேசாகத் தும்மியவாறே அனுசுயா மெள்ள முன்னே வந்தாள்.

"அபயனைப் பற்றியா யோசித்துக்கொண்டு இருக்கிறியள்?" என்று அன்பான குரலில் அனுசுயா கேட்டபோது, மஞ்சள் குருவியொன்று அவள் தோளை உரசிக்கொண்டு சட்டென்று மேலே பறந்துபோய், விநோதமான குரலில் சத்தமிட்டது. புன்னகையோடு அனுசுயா நிமிர்ந்து கூட்டிலிருந்த குருவிகளைப் பார்த்தாள்.

முருகானந்தம் எதுவுமே பேசாமல் அங்கிருந்து எழுந்தபோது, வெளியே ஏதோ சத்தம் சன்னமாகக் கேட்டது. அனுசுயா சட்டென்று வெளியே போனாள். அவளைத் தொடர்ந்து முகத்திலே வியப்புத் தோன்ற அவரும் சென்றார். வெளியே இன்னமும் மழை கொட்டிக்கொண்டு இருந்தது. வெளிக்கதவை யாரோ தட்டும் சத்தம் மழைச் சத்தத்துக்கிடையில் நசுங்கிக் கேட்டது. அந்தச் சத்தத்தை உற்றுக் கவனித்தபின் நடுநடுங்கும் விரல்களால் அனுசுயா கதவை மெள்ளத் திறந்தாள். தாவிப்பாய்ந்த சிறுவனைப்போல குளிர்க்காற்று கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தது.

மங்கலான வெளிச்சத்தில் அந்த உருவம் அவளுக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனாலும், இரக்கம் சட்டென மனதில் கசிந்தது. வெளியே நின்ற ஆளை உள்ளே வரும்படி கூறிவிட்டு, கதவை மூடிக்கொண்டாள். பளீரென்று மின்னலொன்று வெளிச்சத்தை விசிறியடித்து அணைந்துபோயிற்று. அந்த உருவத்தை அந்த வெளிச்சம் ஒரு படம்போல தனக்குக் காட்டியதாக அனுசுயா உணர்ந்துகொண்டாள். மனதின் மூலையில் சட்டென்று கேள்வியொன்று சின்னஞ்சிறிய குருவி யைப்போல சிறகடித்து எழுந்தது. தன்னையறியாத களிப்போடு "நீங்கள் அபயன்தானே" என்று அனுசுயா பரபரத்தாள்.

"மழைக்குள்ள நனைந்துபோனீர்களா?" பரிவான குரலில் அவள் கேட்டபோது இன்னொரு மின்னல் சடசடத்தது.

அனுசுயாவின் பின்னே வந்த முருகானந்தம் எல்லையற்ற வியப்போடு குரலில் அவசரம் தொனிக்க, "யாரது... அபயனா?" என்றவாறு முன்னேவந்து, அந்த இளைஞனைப் பார்த்தார். அவர் பார்வை அந்த இளைஞனை ஆவலோடு விசாரித்தது.

மங்கிய வெளிச்சத்தில் அந்த இளைஞன் கையில் சூட்கேஸுடன் நின்றான். அவனுக்கு முப்பத்தைந்து வயது தான் இருக்கும். உருண்டையான, மீசையில்லாத முகம். சுருள் சுருளான முடி. அபயனையே அச்சில் வார்த்திருந்தான்.

மிகுந்த நேசத்துடன் முருகானந்தம் அவனது கைகளைப் பற்றிக்கொண்டார். அதற்குள் அனுசுயா அவன் தலையைத் துடைத்துக்கொள்வதற்கு ஒரு டவலைக் கொண்டுவந்து, "ஈரத்தைத் துடையுங்கோ" என்று அவன் கையில் கொடுத்தாள்.

"நான் லேசாகத்தான் நனைந்துவிட்டேன். மழை பெய்யத் தொடங்கியதும் ஒரு பக்கமாக, பத்திரமாக ஒதுங்கி விட்டேன்!" அவனது குரல் நன்றியுணர்ச்சியோடு ஒலித்தது.

மிகுந்த நேசத்துடன் முருகானந்தம் ஈரத்தால் குளிர்ந்த அவனது கைகளைப் பற்றிக்கொண்டார். கண்ணாடிக்குள்ளாக அவனது முகத்தை உற்றுப்பார்த்தபடியே, "நீங்கள் அபயன் தானே?" என்றார்.

அந்த இளைஞன் நேயமாக அவரை ஏறிட்டான். ஒரே வார்த்தையில், "இல்லை" என்று கூறிவிட்டுத் தலையை லேசாகத் துடைத்தான்.

"நான் சுப்பிரமணியம் என்பவரைத் தேடிவந்தேன். வழியில் மழைக்குள் அகப்பட்டுக்கொண்டு, உங்கள் வீட்டு வாசலில் ஒதுங்கிநின்றேன். மழை விடுகிறபாடாய் இல்லை." என்று அலுத்த குரலில் கூறினான்.

அனுசுயா மௌனமாக அவனையே பார்த்தபடி நின்றாள். நினைவுகள் எங்கோ சென்றன. நெஞ்சினுள் எதையோ பறிகொடுத்த வேதனை இப்போது அவள் கண்களில் துயரமாய்க் கோடு இழுத்திருந்தது.

முருகானந்தத்தை ஏறிட்டாள். மெல்லியகுரலில், "நீங்கள் உட்கார்ந்துகொள்ளுங்கள் தேநீர் கொண்டுவரு கிறேன்." என்றவாறு அவரது பதிலுக்குக் காத்திராமல் உள்ளே சென்றாள். நடையில் அவளையறியாத சோர்வு தெரிந்ததை உணர்ந்தபோது, தன்னையறியாது பெருமூச்சு சூடாய் உதிர்ந்தது.

https://tamileelamarchive.com/

முருகானந்தம் அவரை நாற்காலியில் உட்கார வைத்தார். "தம்பி, நீங்கள் இங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்?" என்று பரிவோடு கேட்டார்.

"நான் இங்கிலாந்தில் நான்கு வருடங்கள் இன்ஜினீயரிங் படித்துவிட்டு, இப்போதுதான் இங்கே வந்திருக்கிறேன். இதே வீதியிலுள்ள கம்பெனியொன்றில் என்னை வேலைக்குக் கேட்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியிலேயே வாடகைக்கு ஒரு வீடும் பார்த்திருக்கிறேன். இனி ஒருபோதும் வெளிநாட்டுக்குப் போகமாட்டேன்"

அவனது குரலில் கசப்புணர்வு மேலோங்கியிருந்தது. பெருவிரலால் நெற்றியை வருடிக்கொண்டே பார்வையை சுவர்ப்பக்கமாக விட்டான். முருகானந்தம் முகத்தில் திருப்தியோடு அவனை உற்றுப்பார்தார்.

"நீங்கள் சொல்வதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாகவும், மனத்திருப்தியாகவும் உள்ளது. நமது அறிவாளிகள் வெளிநாட்டுக்குப் போகாமல் இங்கேயே இருக்கவேண்டும். ஆனால், என்மகன் அபயன் வெளிநாடு போய் பதினொரு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் திரும்பிவரவில்லை. நாங்கள் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். அவன் சரியாக உங்களைப் போலத்தான் இருப்பான். பேசுவதுகூட உம்மைப் போலத்தான். ஏழு, எட்டு வருடங்களாக எங்களோடு எந்தக் கடிதத்தொடர்பும் இல்லை".

அழுத்தமாக, பெருமூச்சு அவரை அறியாமல் உதிர்ந்தது. கவலையோடு உள்ளங்கைகளைப் பார்த்தவாறு மௌனத்துள் ஆழ்ந்தார்.

"அபயன் போனதற்கு நீங்கள்தானேகாரணம்" அதிருப்தியான குரலில் அவரிடம் கூறியவாறே, தேநீர்க் கோப்பையை அந்த இளைஞனின் முன் நீட்டினாள் அனுசுயா. விரல்களில் லேசாக வெளிப்பட்ட நடுக்கத்தைக் காண்பிக்காமல் இருப்பதற்கு அவள் பட்ட பிரயத்தனம் அவன் மட்டும் உணரக்கூடியதாக இருந்தது.

"தம்பிக்கு என்ன பெயர்?"

தேநீர்க் கோப்பையை வாங்கியவாறே "அசோகன்" என்றான். தேநீரை உறிஞ்சியவாறே, "எந்த நாட்டுக்கு அவர் போனார்?" என்று கேட்டான்.

"அமெரிக்காவுக்கு!"

"என்ன படிக்கப்போனார்?"

"அவன் இங்கிருந்தால் ஏதாவது சிக் கலில் மாட்டிக்கொள்வான் என்று நினைத்துத் தான், அவனை இவர் இங்கிருந்து அனுப்பினார்" என்றாள் அனுசுயா. பெருமூச்சோடு குரல் சட்டென்று கலங்கித் தத்தளித்தது.

வெளியே பெய்த மழைச் சத்தத்தையும் மீறிக்கொண்டு அறைக்குள்ளிருந்து குருவிகளின் சத்தம் பலமாகக் கேட்டது. சத்தம்போட்டு ஓடிப்பிடித்து விளையாடும் சிறுவர்களைப்போல அவை இரைச்சலிட்டன. மஞ்சள் குருவி ஒன்று வேகமாக அங்கே பறந்துவந்து சட்டென்று திரும்பிப்போனது.

"அவனுக்குப் பறவைகள் என்றால் மிகவும் விருப்பம்!" தனக்குத்தானே சொல்லிக்கொள்வதுபோல அசோகனைப் பார்த்தார் அவர்.

"அவன் இந்த வீட்டைவிட்டுப் போனதிலிருந்து எல்லா மகிழ்ச்சியும் போய்விட்டது" என்று தளுதளுக்கிற குரலில் சொன்னாள் அனுசுயா. மெள்ள இருமினாள். பிறகு எதையோ நினைத்துக்கொண்டவள்போல சட்டென்று எழுந்து உள்ளே போனாள். அவர் அபயனைப் பற்றிய நினைவுகளுள் தன்னை அறியாது அழுந்திப்போய் இருந்தார்.

அனுசுயா திரும்பி வருகையில் இன்னொரு தட் டோடு வந்தாள். தட்டுநிறைய சூடான வடைகள்! வாசனை கமகமத்தது. அசோகனின் எதிரே தட்டை நீட்டினாள். கண்களில் நேயம் கனிந்திருந்தது.

"நீங்கள் இந்த வீட்டிலேயே தங்கியிருக்கலாமே! அதுவும் அபயனுடைய அறையில்" என்றார் முருகானந்தம்.

அனுசுயாவின் முகம் பளீர் என்று மலர்ந்தது. மங்கிய கண்களில் மெல்லிய பிரகாசம் ஒளிர, "நானும் அதையே தான் யோசித்தேன்" என்றாள்.

"உங்களுக்கு இது நல்ல இடம்தானே! நாங்களே சாப்பாட்டு வசதி எல்லாம் செய்து தருவோம்" என்ற அவளின் குரலில் கெஞ்சுதலும், வேண்டுகோளும் கலந்து ஒலித்தன.

"அபயனைப்போல நீங்கள் இருப்பது மட்டும் காரணமல்ல எங்களுக்கு உம்மை மிகவும் பிடித்திருக்கிறது. தவிர, இன்னும் ஒரு காரணமும் இருக்கிறது".

முருகானந்தத்தின் முகத்தில் இனம்தெரியாத கேள்விகள் முளைத்தன. அவர் மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"வடை மிகவும் ருசியாக இருக்கிறது" என்று கூறிக்கொண்டே வெளியே பார்த்தான் அசோகன். வெளிப்பக்கக் கதவில் இப்போது குருவிகள் வரிசையாக உட்கார்ந்து இருந்தன. தங்களுக்குள் ஏதோ ரகசியம் பேசிக்கொள்வதுபோல மெல்லிய குரலில் சத்தமிட்டன. மழை ஓய்ந்து இருந்தது. பளிச்சென்று வானம் வெளுத்துப்போய் இருந்தது.

தட்டை ஸ்டூலில் வைத்துவிட்டுத் தன்னுடைய சூட்கேஸ் இருந்த பக்கமாகத் திரும்பிப் பார்த்தான் அசோகன். "சரி, நான் கிளம்பட்டுமா?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டான். அவர்களின் முகங்களில் சட்டென்று வேதனை படர்ந்தது.

அனுசுயா ஏக்கமான குரலில் அவனிடம் கேட்டாள்..."நாங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே?"

அவன் நெற்றியை வருடிக்கொண்டே, எந்த உணர்வுமின்றி அனுசுயாவை வெறுமையாகப் பார்த்தான். பின், எதையும் பேசாமலே பார்வையை வெளிப் பக்கமாகத் திருப் பினான்.

"எங்கள் வீட்டில் நீங்கள் தாராளமாகத் தங்கலாம். அபயனைப் போலவே இருக்கலாம். ஒரு சதம்கூட எங்களுக்குத் தரவேண்டியது இல்லை!" அனுசுயாவின் குரல் கெஞ்சியது. அவனையே உற்றுப் பார்த்தாள். பரிவும், ஏக்கமும் அவளது சோர்ந்த கண்களில் கலந்து தெரிந்தன. கலங்கிய கண்களை நடுங்கும் விரல்களால் மெதுவாகத் துடைத்துக் கொண்டாள்.

"நான் பிறகு ஒருநாள் வருகிறேனே!" எந்தப் பற்றுதலும் இன்றிக் கூறியவாறே, அவன் மீண்டும் வெளியே பார்த்தான்.

அனுசுயா வேதனை பொங்க

https://tamileelamarchive.com/

அவனை நேருக்கு நேராகப் பார்த்தாள். அவனுக்கும் அபயனைப்போலவே பிரகாசமான கண்கள். எனினும், அவன் பார்வையில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

"உங்களை எங்களோடு இருக்கும்படி சொன்னதற்கு என்ன காரணம் தெரியுமா?" அவள் கேட்டாள்.

கண்களில் வியப்புத் தொனிக்க, அவளை ஏறிட்டான் அசோகன்.

"இப்போது நாங்கள் இரண்டுபேரும்தான் இங்கே இருக்கிறோம். மரணம் எந்தநேரத்திலும் எங்களுக்கு நேரலாம். அப்படி யாராவது ஒருவர் போய்விட்டால், எமக்கு ஒரு உதவி வேண்டும் அல்லவா?"

அனுசுயாவின் குரல் தழுதழுத்தது. பொங்கிவரும் அழுகையைத் தடுப்பதற்குப் பிரயத்தனப்பட்டாள். முரு கானந்தம் திகைத்துப் போனவராக, "அனு, இனி ஒன்றும் பேசவேண்டாம்" என்று கலக்கமான குரலில் கூறினார்.

"நான் வருகிறேன்" என்று சொன்னவாறு, தன் சூட்கேசைத் தூக்கிக்கொண்டு கிளம்பிச்சென்றான் அசோகன்.

பரிவோடு அனுசுயாவின் தோளில் கைவைத்தார் முருகானந்தம். அவள் நிமிர்ந்து அவரை ஏக்கத்தோடு பார்த்தாள். அவள் முகத்தில் துயரம் இறுகிப்போய் இருந்தது.

அவருக்கு அபயனின் நினைவு வந்தது. அறை யினுள் சத்தமிடும் குருவிகளோடு ஓயாமல் பேசிக்கொண்டிருக்கும் அவனது கனிவான குரல் அருகே கேட்டதுபோல் உணர்ந்து, மெள்ள எழுந்தார்.

"அந்தக் காகங்களைக் கலையுங்கள். இனிமேல் இங்கே யாருமே வரவேண்டாம்!" அனுசுயா தலையில் அடித்துக்கொண்டபடியே அவரைப் பார்த்துக் கூச்சலிட்டாள்.

மௌனம் நிரம்பிவழியும் வாசற்புறத்துக்கு அவர் விரைந்து சென்றார். சூ.....சூ.... என்று காகங்களைக் கலைப் பதுபோல் சத்தமிட்டபடி வெளிப்புறமாக அவர் நடந்தார்.

நன்றி: வெளிச்சம்




# கறுப்பு யுலை 83

வெந்தணல் கொட்டி உயிர் வேக வைத்த நாட்களவை
கண்களைத் தோண்டி கால் மிதித்த நாட்களவை
பெண்களை வன்புணர்ந்த வாழ்ந்த நாட்களவை
தென்னிலங்கை தமிழரை சீரழித்த நாட்களவை

ஊர்விட்டு ஊர் நகர்ந்து உழைத்த திரவியத்தை
உட்கார்ந்து சிங்கள ஊர் தின்ற நாட்களவை
வேரோடு பிடுங்கி வீதியிலே வீசியெறிந்து-தமிழரை
வேட்டையாட அலைந்த மானிட விந்தைமிகு நாட்களவை

மார்பினிலே பால் சுவைத்த மழலைகள்
மடியினிலே சிசு சுமந்த மாதர்களை
போர்முகங்கொண்ட புல்லர் - பெண்மையை
சீர் குலைத்து தெரு எறிந்த நாட்களவை

எதைத் தொடுவது எதை விடுப்பது
கதைக்கொரு கவிக்கொரு கரு சேர்க்கவே
வதைத்த வன்முறைகளை வாசித்துவிடவே
வரியுண்டா மொழியுண்டா வார்த்தைதான் வருமா

கறுப்பு யூலைக்கொரு கரிய வரலாறு- உரிமை
மறுப்பு வெடிப்புணர்வின் மண் கவர் ஆளர்
எதிர்ப்பு விளைவாக கொடுமை, கொள்ளை, கொலை
தடுப்பு முகாமென வதைக் கூடமான நாட்களவை


ஆடியிலே ஆன்மீக விழாக் கோலம் அது வேறு
அன்றாடம் தமிழருக்கு அவதிக் கோலம் - ஆம்
தேடி வரும் தீர்வற்ற பேச்சு வார்த்தை
பாடுவது வாடிக்கை பாவலர் நாட்களிவை

அடிசேர்க்கும் கவிக்கும் அழகிருக்கும் - அது
மடிகின்ற தமிழரின் குருதி மணம் உரைக்கும்
அடிக்கொரு அநியாயம் ஆடியாகும் தினமெல்லாம் - ஆகவே
விடிவின் விதைப்பிலே விரைகின்றார் - ஆம்
மண் வீரரோடு, மக்கள் படையுமாகவே !

கவியழகு - கோசல்யா சொர்ணலிங்கம்
முல்கைம் - ஜேர்மனி

https://tamileelamarchive.com/






# ஒரு இன அடையாளத்தின் பரிணாம வளர்ச்சி

## சிறீலங்காவின் தமிழர்கள் கி.மு 300-கி.பி 1200 வரை

ஆக்கியோன்:- பேராசிரியர் கே.இந்திரபால

# THE EVOLUTION OF AN ETHNC IDENTITY

THE TAMILS IN SRILANKA 300 .BCE TO C.1200 CE — PROF K.INDIRA PALA

விமர்சகர் முன்னுரை: தமிழர்கள் என்ற இனம் இலங்கைத் தீவில் உருவாகிய வரலாற்றை எடுத்துக் கூறும் பேராசிரியர் இந்திரபாலாவின் மேற்கூறிய நூல் இருவகை கருத்து நிலைகளை உருவாக்கியுள்ளது. ஒன்று இத்தீவின் மூத்த குடிகள் யார் என்பது பற்றிய முரண்பாடு இரண்டு இலங்கை பல்லின நாடா அல்லது ஒரு இனத்திற்கு மாத்திரம் சொந்தமானதா என்ற இனவாதம் இவற்றிற்கு இயன்றளவு முடிவு கட்டும் நோக்கில் பேராசிரியர் இந்திரபாலா இந்நூலை கடும் பிரயத்தனம் எடுத்து உருவாக்கியுள்ளார்.

நன்கு அறியப்பட்ட வரலாற்று ஆசிரியர்களும் தொல்பொருள் ஆராச்சியாளர்களுமாகிய சிரான் தெரனியாகல, லெஸ்லிகுணவர்த்தனா, சுதர்ஷன், செனவிரத்தன, போன்றவர்கள் வரலாற்றுப் பதிவுகளுக்கு முந்திய காலந்தொட்டு இலங்கை பல்லின, பல் பண்பாட்டு நாடாக நிலவுகிறது என்கிறார்கள். இவர்களுடைய சமகாலத்தவரான பேராசிரியர் இந்திரபாலா அதை ஏற்றுக் கொண்டுள்ளார். புதைபடிவ ஆய்வுகளின் அடிப்படையில் இத்தீவின் வரலாற்றுக்கு முந்திய காலம் என்பது (THE PRE HISTORIC AGE OF SRILANKA ) இயற்கைக்கு 250,000 வருடங்களுக்கு முன் தொடங்கி கி.மு 100 வரையிலான காலப்பகுதியாகும் மனித

https://tamileelamarchive.com/

இனம் தோன்றிப் பரிணாம வளர்ச்சி அடைந்து வேட்டையாடி உயிர் வாழ்ந்த காலம் வரையிலான பகுதி பொதுவாக வர லாற்றுக்கு முந்திய காலம் எனப்படுகின்றது. மனிதனுடைய 80 வீதமான பரிணாம வளர்ச்சி இக்காலப்பகுதியில் நடை பெற்றது. வர லாற்றுக்கு முந்திய காலத்தில் காணப்பட்ட முக்கிய அடையாளங்களாக கல்லாயுதம், என்பு ஆயுதம், ஆகியவற்றின் பாவனையும் தானாக வளர்ந்த தாவர உணவை பொறுக் கிச் சேகரித்தலும் விலங்கினத்தை உணவுக் காக வேட்டையாடுதலும், குகைகளில் வாழ் தலுமாகியன இடம் பெறுகின்றன.

வரலாற்றுக்கு முந்திய காலப்பகுதியில் பல கட்டங்கள் இடம் பெறுகின்றன இவற்றில் பழைய கற்காலம் (PALAEOLITHIC OR OLDSTONE AGE) முதலிடம் வகிக்கிறது. பழைய கற்காலம் என்ற பெரும் பிரிவு மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. கடை, இடை, முதல் பழைய கற்காலத்திற்கு அடுத்த படியாக மத்திய கற்காலம் (MESOLITHIC OR MIDDLE STONE AGE) என்ற பெரும் பிரிவு காணப்படுகின்றது. மத்திய கற்காலம் பல நூற்றாண்டுகளை உள்ளடக்கியவாறு மிக நீண்டகாலம் நிலவியது.

1,000,000 வருடங்களிற்கும் 500,000 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி யில் சிறீலங்காவும் இந்தியாவும் ஒரே தொடர்ச்சியான தரைப்பரப்பாக இருந்தன. இக்காலப்பகுதியில் இந்தியாவிலும் ஸ்ரீலங் காவிலும் வாழ்ந்த பழங்குடி மக்கள் சம காலத்தில் கல்லாயுதங்களை பயன்படுத் தினர். இரு தரைப்பரப்புக்களும் 7000 வருடங் களிற்கு முன்னர் கடல் நீரினால் பிரிக்கப் பட்டன. என்பது ஆய்வாளர் முடிவு.

பேராசிரியர் இந்திரபாலா இந்த நூலில் தெரிவிக்கும் அடிப்படைக் கருத்து யாதெ னில் கடலால் பிரிக்கப்பட்ட பின்பும் இரு பக்கத்தினரும் ஒரு பொதுப் பண்பாட்டைக் கொண்ட மக்களாக வாழ்ந்தனர் என்பதாகும் அவர் தனது ஆய்வுக்குப் பொருத்தமாகச் சிறீலங்கா தென் இந்தியா என்றொரு பிராந் தியத்தை உருவாக்கியுள்ளார். இதற்கு அவர் SISL என்று பெயரிடப்பட்டுள்ளார்.- SOUTH INDIA SRILANKA இதன் எல்லைகளாக இப்போதைய கர்நாடகாவும் ஆந்திராவும் முறையே மேற்கிலும் வடக்கிலும் இடம் பெறுகின்றன. மாலை தீவுகளை அவர் SISL பிராந்தியத்திற்கு தெற்கு எல்லையாக நிறுத் தியுள்ளார். 'கடல் ஒன்றிணைக்கும் ஊடகம்' என்பது பேராசிரியரின் நிலைப்பாடு. ஸ்ரீலங் காவின் வரலாற்றிற்கு முந்திய காலம் பற்றிய பயனுள்ள தகவல்களை தந்தையும் மகனு மாகிய பீ.ஈ.பீ தெரனியகல, சிரான் தெரனி யகல ஆகியோர் தமது சிறப்பான ஆய்வுகள் மூலம் நல்கியுள்ளனர். 1930க்கு முன்பான காலத்தில் நடத்தப்பட்டன. 1930இல் பீ.ஈ.பீ தெரனியகல தொல்பொருள் இயக்குநர் நாயகமாகப் பதவியேற்ற பின் ஆய்வுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டன. இவர் உயிரியல் கற்கையில் பட்டம் பெற்றிருந் தாலும் தொல்பொருள் ஆய்வில் கடும் ஈடு பாடு காட்டினார். மகாவம்சத்தில் கூறப்பட்ட பல கருத்துக்களை நிராகரித்த சிறப்பு இவ ருக்கு உண்டு. இலங்கையின் தொல் பொருள் ஆய்வுத் திணைக்களம் ஜூலை 07,1890 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங் கையின் முதலாவது வெள்ளையர் அல்லா தவராக தொல்பொருள் திணைக்களத்தின் துணைத் தலைவராக பேராசிரியர் செனரத் பறணவிதான நியமிக்கப்பட்டார்.

ஆதி மனிதனின் இரத்தினபுரி, பலாங் கொடைக் குடியிருப்புக்களை கண்டு பிடித்த தோடு அடையாளம் கண்டதுமான சிறப்பு பீ.ஈ.பீ தெரனியகலவுக்கு உண்டு. மகன் சிரான் 1992 இல் ஸ்ரீலங்காவின் வரலாற்றிற்கு முந்திய காலம் (THE PREHISTORY OF SRILANKA) என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார். ஸ்ரீலங்காவின் வரலாற்றிற்கு முந்திய காலம் பற்றிய முழுமையான நூலாக இது கருதப்படுகிறது தந்தையின் வழியில் இவர் முப்பது வருட காலம் உழைத்து இந்நூலை வெளியிட்டார். இவ ரும் தொல் பொருள் திணைக்களத்தின் ஆணையாளராக பதவி வகித்தார்.

பல நூற்றாண்டு காலமாக இத்தீவில் மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான் றாகப் பல தடயங்கள் உள்ளன. என்று சிரான் தெரனியகல நிரூபித்துள்ளார். அவர்கள் இத்தீவின் எல்லாப் பாகங்களிலும் வாழ்ந் தார்கள். என்று சிரான் தெரனியாகல தனது நூல் மூலம் தெரிவிக்கின்றார். '130,000 வருடங்களுக்கு முன் ஸ்ரீலங்காவில் மனிதக் குடியிருப்புக்கள் இருந்ததற்கான உறுதி யான சான்றுகள் உள்ளன' என்கிறார். சிரான் தெரனியாகல இவர்கள் ஸ்ரீலங்காவுக்கு தென் இந்தியா ஊடாக வந்தார்கள் என்றும் அவர் கள் கூறுகிறார். சமகாலத்தில் வாழ்ந்த இந்த மக்களுக்கு ஸ்ரீலங்காவும் தென் இந்தியாவும் ஒரே தரைப்பரப்புத்தான் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

சிறீலங்காவிலும் இந்தியாவிலும் சம காலத்தில் மனிதக் குடியிருப்புக்கள் (AHUAM SETTLEMENTS) அரம்பித்திருக் கலாம் என்று சிரான் தெரனியகல நம்புகிறார். பழைய கற்காலத்திற்கு அடுத்ததாக வரும் மத்திய பெருங் கற்காலம் எனப்படும் மெசோ லிதிக் காலத்தில் ஸ்ரீலங்காவிலும் தென் இந்தியாவிலும் வாழ்ந்த ஆதிமக்கள் ஒரே வகையான கல்லாயுதங்களைப் பாவித்தனர் என்பதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன. கர் நாடகப் பகுதிகளில் வாழ்ந்த ஆதி குடி களும் இவ்வகை கல்லாயுதங்களையே பாவித்தனர். கல்லாயுதங்கள் தமது பணியை இலகுவாக்கும் ஒரே ஒரு தேவைக்காகப் ஆதி மனிதர்களால் பயன்படுத்தப்பட்டன. என்பது இது தொடர்பான ஆய்வாளர் முடிவு மெசோ லிதிக் ஆதி குடிகள் இலங்கைத் தீவின் எல் லாப்பகுதிகளிலும் பரந்து வாழ்ந்தனர் என் றும் அவர்கள் யாழ் தீபகற்பத்தில் குடி புகுவதைத் தவிர்த்தனர் என்றும் சொல்லப் படுகிறது. கல்லாயுதங்கள் செய்வதற்கான கற்கள் இல்லாமை, நிலத்தின் மேற்பரப்பில் நீர் நிலைகள் இல்லாமை என்பன யாழ் தீபகற்பத்தை அவர்கள் தவிர்த்ததற்கு கார ணங்களாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் கற்கள் கிடைக்கக்கூடிய யாழ் மாவட்டத்தில்



ஆனைவிழுந்தான் முதுபெண்

அவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

மிக நெடிய காலம் நிலவிய மத்திய பெருங்கற்காலம் எனப்படும் மெசோலிக் காலப்பகுதிக்குப் பின் நியோலிதிக் எனப் படும் புதிய கற்காலம் என்றொரு காலப் பகுதி உண்டு இந்தியாவின் சில பகுதிகளில் காணப்படும் கல்லாயுதங்களின் அடிப்படை யில் நியோதிலிதிக் காலப்பகுதி கணிப்பிடுகி றது (NEOLITHIC) ஸ்ரீலங்காவில் நியோலி திக் அல்லது புதிய கற்காலம் தோன்ற வில்லை ஸ்ரீலங்கா மெசோலிதிக் காலப்பகுதி

https://tamileelamarchive.com/



ஒளிப்படங்கள்: த.திரு

மூதாதையரின் பாத்திரங்கள்

கிளிநொச்சி அக்கராயனில் அணைக்கட்டு வீதியில் ஆற்றின் கரையோரத்தில் எடுக்கப்பட்ட மட்கலங்கள்



யில் இருந்து இரும்புப் பாவனை தோன்றிய காலப்பகுதிக்கு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று விட்டது. இரும்புப் பாவனை தொடங்கிய தொடக்க காலத்தை ஆய்வாளர்கள் EARLY IRON AGE அல்லது EIA என்று அழைக்கிறார்கள். மனித வரலாற்றின் மைல் கற்களாக மனிதர்கள் பெருமளவில் பயன்படுத்திய கற்களும் உலோகங்களும் பயன்படுகின்றன கற்கள் பயன்படுத்தப்பட்ட காலம் என்றும் அழைக்கப்படுவதை நோக்குக.

உலகின் பல பாகங்களில் ஆதி மனிதன் PALAEOLITHIC MESOLITHIC NEOLITHIC என்றழைக்கப்படும் பழைய, மத்திய நவீன கற்காலங்களைப் படிப்படியாக கடந்து இருப்பின் காலத்திற்கு வந்துள்ளான். ஸ்ரீலங்காவில் மத்திய கற்காலத்தில் இருந்து நேரடியாக இரும்பின் காலத்திற்கு வந்த வரலாற்றைக் காண்கிறோம். கி.மு 1000வரை ஸ்ரீலங்காவில் மத்திய பெருங் காலம் (MESOLITHTHIC) நிலவியது. ஆனால் 100 வருடத்தில் அதாவது கி.மு 900இல் இரும்பின் காலம் தொடங்கியுள்ளதை தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். வழமையாக இப்படியானதொரு மாற்றம் ஆயிரம் வருடம் எடுக்கும் கி.மு 1200 இல் இரும்பின் காலம் தொடங்கியுள்ளதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றார். ஸ்ரீலங்காவில் இரும்பின் காலம் கி.மு 1000த்திற்கும் கி.மு 800 க்கும் இடையில் தோன்றியிருக்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக இரும்பின் பாவனை தென் இந்தியா ஊடாகச் ஸ்ரீலங்காவுக்கு ஆரியர் வருகையைக் குறிப்புணர்த்தும் விஜயனின் வருகைக்கு முன்பே தொடங்கி விட்டது எனலாம்.

மனித வரலாற்றுக் காலம் முழுவதையும் இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம் ஒன்று கற்காலம்; இரண்டு உலோகத்தின் காலம். உலோகப் பாவனையோடு மனித நாகரிகம் தொடங்குவதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது முழுமையான உண்மையல்ல இன்னும்மொரு விதமாகவும் மனித வரலாற்றை வகைப்படுத்துகிறார்கள். வரலாற்றுக்கு முந்திய காலம், வரலாற்றுக் காலம் என்பன அவ்வகை வகைப்படுத்தலாகும். எழுத்துக்களை மனிதன் உருவாக்க முன்னைய காலத்தை வரலாற்றிற்கு முந்திய காலம் என்கிறார்கள் எழுத்து உருவாக்கப்பட்ட பின்னைய காலத்தை வரலாற்றுக் காலம் என்கிறார்கள். வரலாற்றிற்கு முந்திய காலத்தை எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாது ஒரு எழுத்துக் கூட உருவாக்காத காலத்தில் மனிதன் பாரிய கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளான். தனது நாளாந்திரப் பாவனைக்குத் தேவையான கல்லாயுதங்களின் கண்டு பிடிப்பு மனிதன் ஆரம்ப வளர்ச்சிக் குறியீடாகக் கருதப்படுகிறது.

1930 வருடத்திற்கு முந்திய காலப்பகுதியில் ஆதி மனிதனின் கல்லாயுதச் சேகரிப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இலங்கைத் தீவில் நடத்தப்பட்டது. பீ.ஈ.பீ தெரனியகல 1930 தொடக்கம் தீவிரமான ஆராச்சிகளை மேற்கொண்டார். இது தொடர்பான ஆய்வுகளைக் கண்டு பிடித்தார். இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இப்போதைய பலாங்கொடைக்கு அண்மித்ததாகவுள்ள பெல்லன்படி பலாசாவில் (BELLANBADIPALASSA) ஒரு மனித எலும்புக் கூட்டை அவர் எடுத்தார் கி.மு 6500 வருடமளவில் மெசோலிதிக் மத்திய பெருங் கற்காலத்தில் இந்த மனிதன் உயிர்வாழ்ந்தான் என்று பீ.ஈபீ தெரனியகல நிர்ணயம் செய்துள்ளார்.

1970களில் அமெரிக்க பென்சிலவேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் விமலா பேக்லி (VIMALA BEGLEY) புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பறிப்பு பிரதேசத்தில் ஆய்வு மேற்கொண்டார். பலாங்கொடை மனிதனுக்கும் பொன்பறிப்பில் புதைக்கப்பட்ட மனிதர்களும் ஒரே வகையினர் என்பதை அவர் நிரூபித்தார் இலங்கையில் நிலவிய செசோலிதிக் காலத்துக் மனிதக்கலாச்சாரம் பலாங்கொடைக்கலாச்சாரம் என்பதில் தவறில்லை பலாங்கொடை மனிதனுக்கும் தென் இந்தியாவில் வாழ்ந்த ஆதி மக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இல்லை; இலங்கையின் மெசோலிதிக் மக்களும் அதாவது மத்திய பெருங் கற்கால மக்களும் கர்நாடகம் உள்ளடங்கலான தென் இந்தியா மக்களும் ஒரே வகைக் கல்லாயுதங்களையே பயன்படுத்தினர் இதை பல்வேறு ஆய்வுகள் அறுதியிட்டுக் கூறுகின்றன. யாழ் குடா தவிர்ந்த இலங்கைத் தீவின் பிறபாகங்கள் யாவற்றிலும் இவர்கள் வாழ்ந்தார்கள். எதையும் யாழ் குடாவைத் தவிர்த்ததற்கான காரணங்களையும் இக்கட்டுரையில் பிறிதோர் இடத்தில் கூறியுள்ளோம்.

இலங்கையின் வரலாற்றிற்கு முந்திய காலத்தில் ஆதி மனிதன் வாழ்ந்த சிலகண்டு பிடிக்கப்பட்ட இடங்களும், வாழ்ந்த காலப் பகுதியும்

மினிக்கல்கந்த - அம்பாந்தோட்டை- கி.மு 250,000
பாகியன்லேனா - புலத்சிங்கள, களுத்துறை கி.மு 35,000
பட்டொபலேனா - இரத்தினபுரி கி.மு 28,000
புந்தல -அம்பாந்தோட்டை கி.மு 25,000
அலுலோனா - கேகாலை கி.மு 10,000
பெலிலேனா - கேகாலை கி.மு 8,000
பெல்லன்படிபாலசா இரத்தினபுரி, பலாங்கொடை கி.மு 6,50
மாந்தை - மன்னார் கி.மு 28,00

https://tamileelamarchive.com/

ஏற்கனவே பழைய கற்காலம் (PALAEO-LITHIC) மத்திய கற்காலம் (MESO LITHIC) நவீன கற்காலம் (NEOLITHIC) என்பன பற்றிக் குறிப்பிட்டதோடு பழைய கற்காலத்தில் காணப்படும் கடை, இடை, முதல் என்ற உட்பிரிவுகளையும் இக்கட்டுரையின் முதற் பகுதியில் பார்த்தோம் கொழும்பு நூதன சாலையில் இலங்கைவாழ் ஆதி மனிதர்கள் பழைய கற்காலத்தில் பயன்படுத்திய கல்லாயுதங்கள் சில பாவனைக்கு வைக்கப்பட்டுள்ளன. பழைய கற்காலத்தின் இடைக்கால உட்பிரிவுக்குரிய கல்லாயுதங்கள் இரணைமடுப்பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாக கொழும்பு நூதனசாலை தெரிவிக்கின்றது. இக்கல்லாயுதந்தான் நல்ல நிலையில் உள்ளன. கடைக்கால உட்பிரிவுக்குரிய கல்லாயுதந்தான் இரத்தினபுரி மாவட்டங்களில் இரத்தினக்கல் தோண்டும்போது கிடைத்ததாக கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள மும்மொழிப் பாதைகள் தெரிவிக்கின்றன. முதல் பகுதிக்குரிய கல்லாயுதங்கள் கிடைக்கவில்லை என்பதால் அவற்றை நூதனசாலையில் பார்க்க முடியவில்லை.

இப்போது கிடைத்துள்ள தரவுகளின்படி மகாவம்சத்தில் கூறப்படும் கி.மு 560 இல் விஜயனும் அவனுடைய தோழர்களும் இலங்கைத்தீவில் கால்பதித்ததாக கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சம் கூறுகிறது. அதாவது விஜயன் வந்தபின் சென்ற ஆயிரம் வருடங்களுக்குப்பின் மகாவம்சம் எழுதப்பட்டது. விஜயனின் வருகைக்கு முன்பே உறுதியான இரும்புக் கலாச்சாரம் இலங்கையில் நிலவியதை இப்போது ஆய்வுகள் ஐயம்திரிபற ஏற்றுக் கொண்டுள்ளன. கொழும்பு- திருகோணமலை வீதியில் தம்புல்லையில் இருந்து 3.கி.மீற்றர் தூரத்தில் இருக்கு இபான்கட்டுவா உட்பட 31 இடங்களில் இரும்புக் கலாச்சாரம் நிலவியதற்கான தடயங்கள் தென் இலங்கையிலும் யாழ் தீபகற்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கார்பன் 14 பரிசோதனையில் சில இடங்கள் கி.மு 900 வரையிலான பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன. ஈமத்தாழி புதையல்முறை இரும்புக் கலாச்சார காலத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. இது இலங்கைத் தீவின் வடமேற்குக் கரையோரத்திலும் தென் இந்தியாவின் தென் கிழக்குக் கரையோரத்திலும் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கமாகும் மேற்கூறிய இபான் கட்டுவாவில் சடலங்களை எரித்தபின் சாம்பரையும் என்புகளையும். பானைகளில் இட்டுப் புதைக்கும் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவரை 150 வரையிலான பாதைகள் இபான் கட்டுவாவில் கிடைத்துள்ளன.

அனுராதபுர இராஜதானியை கி.மு ஐந்தில் விஜயன் உண்டாக்கியதாக மகாவம்சம் கூறுகிறது. ஆனால் அங்கு செய்யப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் கி.மு ஒன்பதாம் நூற்றாண்டிற்குரிய எச்சங்கள் வெளிவந்துள்ளன. விஜயனின் வருகைக்கு முன்பே அனுராதபுர நகரம் இருந்ததற்கான சான்றுகளாக இந்த எச்சங்கள் அமைகின்றன முடிக்குரிய ஆசியக் கழகத்தின் (ROYALA-SIATIC SOCIETY) முன்னாள் தலைவர் டெனிஸ் பனர்ந்தோ தான் காட்டும் இடங்களைத் தோண்டிப் பார்ப்பதற்கு தொல்லியல் ஆய்வுத்திணைக்களத்தினர் பின்னடிப்பதாகத் கூறுகிறார். தான் காட்டும் விஜயனுக்கு முந்திய தொல்லியல் இடங்களைத் தோண்டிப் பார்த்ததால் போலி வரலாற்றாசிரியர்கள் தொல்லியல் ஆய்வாளர்கள் புத்த பிக்குகள் போன்றோரின் மூட நம்பிக்கைகள் தகர்த்து விடும் என்கிறார் டெனிஸ்பர்னாந்தோ...

மகாவம்சம் கூறும் துட்டகாமினி எல்லாளன் போரின் கண்ணோட்டத்தில் இலங்கைகளின் பரஸ்பர வரலாற்றை நோக்குவது தவறு இத்தீவின் சாபக்கேடாக அமைந்துள்ளது என்கிறார் பேராசிரியர் இந்திரபால, வரலாற்றுத் தவறு திருத்த முடியாதளவு வளர்ச்சி கண்டுள்ளது. மனித வரலாற்றையும் நாட்டு வரலாற்றையும் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் போக்கு உலகின் பல பகுதிகளில் காணப்படுகிறது என்றும் அவர் இடித்துரைக்கிறார். வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டே இத்தீவுக்கும் தென் இந்தியாவுக்கும் பொதுவானதொரு மனித இனம் இரு தரைப்பரப்புக்களிலும் சமகாலத்தில் வாழ்ந்துள்ளது இந்த மண் எனக்கே சொந்தம் என்று உரிமை இல்லை. ஆனால் படிப்படியாக இன அடையாளங்களான மொழி மத, வாழ்விட அடையாளங்கள் தோன்றிய காரணத்தால் வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன என்பது பேராசிரியரின் கூற்று.

இலங்கைத் தீவுக்கும் தென் இந்தியாவுக்கும் இடையில் குடிபெயர்ந்தவர்கள் இரு திசைகளிலும் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு நடந்துள்ளன. இங்கிருந்த மக்கள் அங்கு, அங்கிருந்த மக்கள் இங்குமாகக் குடிபெயர்வுக்கு படையெடுப்புக்கள் முக்கிய காரணமல்ல வர்த்தகம், பண்பாடு, அரசியல், மதம், சொந்த விருப்பு போன்ற பல காரணிகளை குடிபெயர்வுக்கு முன்வைக்க முடியும் நேர்மை நோக்குடன் ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய ஸ்ரீலங்கா ஆய்வாளர்கள் ஒரு முக்கிய விடயத்தை வலியுறுத்திக் கூறுகின்றனர். “வெளி நாடுகளில் இருந்து இத்தீவுக்குப் பெரும் எண்ணிக்கையிலான இனக் குழுவொன்றாவது திடீரென்று வந்து குடியேறவில்லை. அப்படியானதொரு குடியேற்றம் நடக்கவில்லை என்பது மாத்திரமல்ல, உள்நாட்டில் வாழ்ந்த மக்கள் ஒரு போதாவது பிற இனங்களால் அழிக்கப்படவுமில்லை பலாத்காரமாக வெளியேற்றப்படவுமில்லை”.

இதன் பொருள் யாதெனில் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு குடிபெயர்வுகள் இலங்கைக்கும் தென் இந்தியாவுக்கும் இடையில் இயல்பாக நடை பெற்றன இரு தரைப்பரப்புக்களிலும் குடிபெயர்ந்தோர் போக மிகுதியானோர் அப்படியே வாழ்ந்தனர். இவர்களுடைய பிற்சந்ததியினர் தான் இன்றைய தமிழர்களும் சிங்களவர்களும் என்கிறார் இந்திரபாலா. தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே இலங்கைத் தீவிலும் தென் இந்தியாவிலும் வாழ்ந்து வருகின்றனர்.


இலங்கைத் தீவின் மிகப் பழமைவாய்ந்த கல்வெட்டுக்களுக்கும் பாளி மொழி இலக்கியங்களும் இலங்கையில் இரும்பின் பாவனை தொடங்கிய காலந்தொட்டுத் தமிழர்கள் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன பாளி இலக்கியங்களில் தமேதா அல்லது தமேலா என்று தமிழர்கள் குறிப்பிடப்படுகின்றனர். கி.மு.நூற்றாண்டுகளின் கடைசிப் பகுதியிலும் இலங்கைத்தீவில் வாழ்ந்த தாமேதாசுகளை எப்படி அந்நியர்கள் என்று கூற முடியும் என்கிறார் இந்திரபாலா ஆதி கால இலங்கைத் தீவின் ஒரு பகுதியினர் ஈழ (ILA) அல்லது ஹெல(HELA) அல்லது சீல (SILA) என்று அழைக்கப்பட்டது போல் தமிழர்களும் தமேதாஸ் (DEMEDAS) அல்லது தமேலாஸ் (DAMELAS) என்று அழைக்கப்பட்டனர். இரு பகுதியினருமே இலங்கைத்தீவிலும் தென் இந்தியாவிலும் தமது சுயதேவைக்கு ஏற்ப காலத்திற்குக் காலம் இடம்மாறி வாழ்ந்தனர். இலங்கை வரலாறு தொடங்கிய காலத்தில் தமேதாசுகளை அந்நியர்களாக நோக்கும் வழமை அறவே இருக்கவில்லை.

இலங்கைத்தீவின் ஆதி பழமை வாய்ந்த தீபவம்சம் (இது மகாவம்சம் சத்திலும் பார்க்கப் பழமை வாய்ந்தது.) அனுராதபுரத்தை ஆட்சி செய்த தமிழர்களான சேன, குடகா ஆகியோரை அந்நியர்களாகவே வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களாகவே குறிப்பிடவில்லை. மகாவம்சமும் அப்படியான கருத்தைத் தெரிவிக்கவில்லை. மாறாக அவர்கள் ஆட்சி செய்த 22 வருடங்களையும் நீதி நியாயம் நிறைந்ததாகக் மகாவம்சம் குறிப்பிடுகின்றது, எல்லாளன் பற்றியும் மகாவம்சம் மிக உயர்வாகப் பேசுகிறது. இந்த அரசன் தமிழன் என்றும் புத்தமதத்தைப் பாதுகாத்தானென்றும் நண்பனையும் எதிரியையும் சமனாக நோக்கியவனென்றும் மகாவம்சம் கூறுகிறது “எல்லாளன் ஒரு தமேலா ஆக்கிரமிப்பாளன், துட்டகாமினி தனது ஹெல இனத்தை விடுவிக்கப் போரிட்டவன் என்று கூறுவது அர்த்தமற்றது” என்கிறார் இந்திரபாலா.

(தொடரும்)

அனைத்துலகத் தொடர்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.

https://tamileelamarchive.com/



# சவால்

குய்யோ முய்யோ எண்டு வீட்டுல ஒரே சத்தம் கேட்டு எரிச்சல்பட்டுக்கொண்டு எழும்பினன் சே இந்த வீட்டுல ராமுழுக்க வேலயில முறிஞ்சிட்டு களைச்சு விழுந்து போய்ப் படுத்தா ஒருநித்திர கொள்ள முடியாது. அறைக்கதவ நான் சாத்திட்டு படுக்கிறதே இல்ல. அதனால் கதவத்திறந்துகொண்டு வெளியவரவேணுமெண்ட அவசியமுமில்ல.நேர விறாந்தைக்கு வந்தன் .காய்மூய் எண்டு கத்திக்கொண்டிருந்தார் அப்பா. அமைதியா ஒரு ஓரத்தில நிண்டு காலங்காத்தால ஏன் அப்பா இப்படி கத்துறார் எண்டு காதுகுடுத்துக் கேட்டன். வழமையான புராணந்தான் .

ஏண்டி உண்ட மகனை அடக்கி வைக்க மாட்டியா? எத்தினமுறை சொல்லிட்டன் இரவுவேலயொண்டும் வேணாம். நேரத்துக்கே வேலையை முடிச்சுப்போட்டு வீட்டவரச்சொல்லெண்டு. நீசொல்ல மாட்டங்கிறியா இல்லாட்டி அவன் கேக்க மாட்டேங்கிறானா எண்டது எனக்குப் புரியல .

ஏன் அப்பா நான் நல்லாத்தானே இருக்கன்

இஞ்சபார் நீவேலைக்குப் போய் உழைக்கிறதப்பத்தி எனக்கும் சந்தோசந்தான். ஆனா வீட்டுக்கு சம்பளப்பணம் வருதில்லையே வீட்டு வாடகையும் ஏறிக்கிட்டே போகிது. இண்டைக்குப் பதினைஞ்சாந் தேதி வீட்டுக்காரர் வந்தாலும் வருவார். அந்த டென்சன்லதான் கத்திக்கொண்டிருக்கிறன் .

என்று அப்பா கூட்டியும் குறைத்தும் சொல்லிக்கொண்டிருந்தார் .

அப்பா அவன் வேலைக்குப் போறதில்ல வேலைக்குப்போறதா உங்கள ஏமாத்திக்கொண்டு திரியிறான். வெளிலபோய் மேல்மாடி பாத்ரூமுக்கும் பக்கத்தில இருக்கிற பால்கனிக்குப் போகும் தண்ணிப் பைப்பில நிண்டு ஏறி நடந்து சர்க்கசுகாட்டி வகுப்புக்குப் போறவாற பொம்பளப் புள்ளங்களை வம்புக்கு இழுக்கிறானப்பா எண்டுசொல்ல தங்கையின் வாய் பறபறத்தது. ஆனா அப்பிடிச்சொன்னா அப்பா வெளில போன உடன தன்னை அடிச்சே கொண்டிடுவானோ எண்டு தங்கை பயந்தாள். பாவம் அப்பா. பொறுப்பில்லாத அண்ணாவை நம்பி ஏமாந்து போறார் எண்டு கவலைப்பட்டாள் தங்கை . நான் மீண்டும் அறைக்குள் போய் முகம் கழுவிவிட்டு சுட்ட கருவாட்டுடன் காலை உணவை ஒரு வெட்டு வெட்டிவிட்டு வெளில போகலாமெண்டு கிளம்பிக்கொண்டிருக்க என் அப்பா யாரோடோ காரசாரமா கதைச்சுக்கொண்டிருந்ததுகேட்டது. அது பழக்கப்பட்ட ஒருகுரலா இருந்தது. நானும் பெரியவன்தான் என்று நினைச்சுக்கொண்டன். நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு உள்ள போனன். அப்பாவும் வீட்டின் சொந்தக்காரரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். நாலு மாதமா வாடகையே தரயில்ல. ஒண்டு வாடகை தரணும் . இல்லேண்ணா வீட்டத்தரணும். இவ்வளவு வசதியான ஒருவீட்ட உங்க வாழ்க்கையில கண்டிருக்க மாட்டிங்க அவர் சொல்றதும் உண்மைதான் என்ர அப்பர் அம்மாவச் சந்திச்சது ஒரு ஓலைக்குடிசையிலதான். அப்படியே கலியாணங்கட்டிக்கிட்டு வீட்டோட மாப்பிள்ளையாப் போயிட்டார். அந்த வீட்டுலதான் நானும் தங்கச்சியும் பிறந்தம். அந்த வீட்ட ஒரே ஒருகிழவி மட்டுந்தான். அன்றாடம் சாப்பாட்டுக்கே திண்டாட்டமாக் கிடந்திது. எனக்கும் தங்கச்சிக்கும் பல் முழைக்கும் போதும் கூட வெட்டுறதுக்கு அந்த வீட்டுல ஒண்டுமே இருக்கயில்ல. ஏற்கனவே அம்மாவும் அப்பாவும் சேந்து கடிச்சு வைச்ச. கிழவி திட்டித்திட்டி பத்துத் தடவ ஒட்டுப்போட்ட வொய்ல் சீலையத்தவிர வேற ஒண்டும் இருக்கேல்ல. அதக்கடிச்சுக் கடிச்சு எங்கட பல்லுக்கு உரமேற்றிக்கொண்டம்.

பிறகு நாங்களும் கொஞ்சம் வளந்திட்டம். நாலு பேருக்கு சாப்பாடு தேடுறதென்றது பெரும்பாடாப் போட்டுது. பிறகு நாங்க ஒருடெய்லர் வீட்டுல குடியேறினம். இங்க முதலப்போல ஒரே சீலையை கடிக்கவேண்டிய நிலமை

https://tamileelamarchive.com/

இல்ல நிறைய உடைகள் இருந்தன. ஆசைதீர கடித்துத் தள்ளினோம். அப்பா சொல்வார் கவனம். உடுப்புக் கடிக்கேக்க வலுஅவதானமா கடிக்கோணும். உங்கள் வீட்டுக்காரங்க கண்டா கொட்டானால அடச்சுச் சாக்கொல்லிப் போடுவினம் எண்டு. நாங்கள் அதப் பெரிசா அலட்டிக் கொள்ளேல்ல. ஆனா அப்பா சொன்னமாதிரியே ஒருநாள் நடந்திருச்சு. அந்த டெய்லர் ராட்சகன் மாதிரி பெரிய கொட்டானோட என்ன அடிக்க வந்தான். அப்பாடியோ அவனிட்ட இருந்து தப்பிறது பெரும்பாடாப் போயிட்டு. நல்ல வேளை அண்டைக்கு என்னோட தங்கச்சி வரயில்ல. வந்திருந்தா என்ன நடந்திருக்கும். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு டெய்லரைக் கண்டா என்ர உடம்பு வெடவெட வெண்டு ஆடும். இப்ப நான் பெரிய ஆள். இப்ப அவருக்குப் பயப்பிடமாட்டன். கொஞ்சக் காலத்துக்குப் பிறகு எனக்கு எதிரி அந்த டெய்லர் இல்ல. அவன் புதுசாக் கூட்டிக்கொண்டு வந்த பூனைதான் அதுக்கு தான் பெரிய ஆளெண்ட நினைப்பு தலைக்கேறிப்போய் நிண்டுது. ராஜா மாதிரி வீர நடைபோட்டு வருவான். அவனப் பாத்தாலே பத்திக்கிட்டு வரும். அவண்ட குரல் உங்களுக்குத் தெரியாது. கேக்கவே சகிக்க முடியாது. அவனுக்கென்னமோ தான் பாலசுப்ரமணியம் எண்ட நினைப்பு. மியா மியா னு பாடேக்க அந்த வீட்லயே இருக்க ஏலா. உண்மையா சொல்லுறன் கழுதை மாமாட குரல் கூட கேக்கலாம் இவண்ட பாட்டு கேக்கவே ஏலாது.

எனக்கும் அவனுக்கும் ஒட்டப்பந்தயம் வைச்சால் அவன் தோத்துடுவான் தெரியுமா. அவனுக்கு என்னக் கண்டாலே பிடிக்காது. தொரத்திக்கிட்டே வருவான் தெரியுமா? நானொண்டும் அவனுக்குப் பயமில்ல. ஆனா அவனக் கண்ட உடனே எனக்குத் தெரியாமலேயே நான் ஒட ஆரம்பிச்சிடுவன் . அதான் ஏனெண்டு தெரியேல்ல. ஆது இப்ப பழக்க தோசமாயும் போயிடுச்சு. ஒரு நாள் மச்சான் வசமா மாட்டிக்கிட்டாரு. நான் பழகி வைச்சிருந்த கராத்தேயால அவண்ட கால உடைக்கணும். குங்கும்ல மோப்பம் புடிக்கிற மூக்கக் குத்தி ரத்தம் வரவைக்கணும் எண்டு நெனைச்சுக்கொண்டே எண்ட கைய புஸ்டியா மடக்கிக் கொண்டன்.

யாகூ எண்டு கத்திக்கொண்டே பறந்து பறந்து அடிச்சன். பாவம் பூனப்பிள்ளைக்கு நல்ல அடி. ரத்தமும் வந்திட்டுது. எனக்கும் கை காலெல்லாம் நொந்துகொண்டது என்ர உடம்பிலயும் ரத்தம். மெதுவாக கண்ணத்திறந்து பாத்தன். அட கனவுலதான் சண்டபுடிச்சு எனக்கு அடிபட்டிருந்தச்சு. இரண்டு நாளா என்னால எழும்பேலாம கிடந்திச்சு. வீட்டுக்கயே இருந்தால எண்ட எதிரிய நான் பாக்கேல்ல. அவனப் பாக்காம இருக்கும் போது எனக்கு கோவம் வாறது குறைவா இருந்திச்சு. அப்பா எனக்குச் சொன்னார் அவன் முரடன். அவனோட மோதப் போகாத. அநியாயமா நீதான் சாகப்போறாய் எண்டு. அப்பாக்குத் தெரியாது. நான் முரடன் எண்டு.

ஒருநாள் அந்த வில்லன் என் முன்னால் வந்துநிண்டான். அவன் வந்தான் என்று சொல்றதவிட அவன் வாறபாதையில அவன ஒண்டிக்கு ஒண்டி சந்திக்க வேணும் என்றதுக்காக நான் தான் காத்திருந்தன் என்றதுதான் பொருத்தமா இருக்கும். இப்ப அவன் என் முன்னால் வந்து நிக்கிறான். இப்ப அவன் என்னால நல்லா பாக்க முடியிது. கனவில்ல ஓம் ஓம் இது கனவில்ல. நான் எண்ட கண்ண நல்லா திறந்திருக்கிறன்.

என்ர நினைப்பெல்லாம் செத்தால் ஒருவீரனாய்ச் சாகோணும் கோழையாய் சாசக்கூடாது. எங்கட இனம் அவனக்கண்டு பயந்து ஓடஓடத்தான் அவன் விரட்டக்கொண்டிருப்பான். என்னால அவன எதிர்க்க முடியும். இந்த வீரப்போர்ல நான் செத்தாலும் என்னய மாதிரி இளம் இளந்தாரி எலிகள் அணி திரளும். பூனயாரை ஒழிச்சுக்கட்ட நான் இப்ப ஒத்த மனுசனா அவன் முன்னால் நிக்கிறன்.

அவன் சத்தம் போடாமல் பதுங்கிக்கொண்டே பாயலாம் எண்ட நிலையில நிக்கிறான் வீட்டு வாசல்ல அம்மா அழுறசத்தம் கேக்கிது. அதுக்காக யுத்த களத்தில இருந்து திரும்பியா போகமுடியும் . அவன் மெல்ல மெல்ல முன்னால் கால்கள எடுத்துவைச்சான். நான் பின்னோக்கி ஓடுவதுபோல் பாசாங்கு காட்டினேன். திடீரென்று பின்னோக்கி ஓடி வந்து என் வீட்டுக்குள் புகுந்துவிட்டேன். என்னை பிடிக்கிற வேகத்தில் வந்த அவன் சுவரிலமோதி தலையை உடைத்துக்கொண்டான்.

மீண்டும் ஒருபாய்ச்சல் அதிரடியாய் வீட்டுக்குள் இருந்து அவனின் நான்கு கால்களுக்கிடையால் புகுந்து சமையல்கட்டுக்கு ஓடினேன். சமையலறைப் பொருட்கள் எல்லாத்துக்கும் மேலாகப் பாய்ந்து ஓடினேன் அவனும் ஏறி ஓடி வருவான் என்பதுதான் என்னுடைய எதிர்பார்ப்பு. அதே மாதிரி அவனும் ஏறி ஓடிவந்து சமையலறையை உருட்டிப் பிரட்டி தலைகீழாய் மாற்றினான். ஆத எனக்குக் கிடைத்த முதலாவது வெற்றி.

வாயு அடுப்பில் ரொட்டித் தகரம் சூடாய் இருந்தது. நான் தகரத்தின் மீதுபடாமல் பாய்ந்து அடுப்பின் பின்புறம் போனேன். என்னைப் பிடிக்கும் ஆசையில் கல்லை கவனிக்காமல் அதன் மீதுஏறி காலைச் சுட்டுக்கொண்டது. தன்னுடைய நாலு கால்களையும் நிலத்திலே வைக்க முடியாமல் உருண்டு புரண்டது அது எனக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி. எனை வெற்றிகொண்ட மகிழ்வில் வீட்டுக்கு வந்தால் அயல்வீட்டுக்காரர்கள் எல்லாரும் என்னை வாழ்த்தினார்கள் தங்கச்சி என்னைய உச்சத்தலையில தூக்கிவைச்சு கொண்டாடினா. அம்மாவுக்கும் மனசுக்குள்ள பெருமைதான் அதை வெளிக்காட்டாமல் அழுதுகொண்டு நின்றாள். அப்பா மட்டுந்தான் பொரிஞ்சு தள்ளினார்.

நீ அநியாயமா சாகப்போறியா. எங்கட பரம்பரையில யாருமே இப்படி இல்ல. நீ மட்டும் தப்பிப் பிறந்திட்ட இனி உன்ன இஞ்ச வைக்கக் கூடாது. என்று கோபப்பட்டவர்தான். இப்ப இந்த வீட்டுல இருக்கிறம். மீண்டும் வீட்டுக்காரரே கதைத்துக்கொண்டிருக்க பொறுமை இல்லாமல் நான் குறுக்க பாய்ந்து சடாரென்று அவர்களின் பேச்சை நிறுத்தினேன்.

நேற்று வீட்டில் உள்ள வக்கீல் பெடியன் கதைச்சதுகேட்டிச்சு. அஞ்சுவருசமா ஒருவீட்டுல மொத்தமா குடியிருந்தா அங்கு இருக்கிறவங்களுக்குச் சொந்தமாம். ஆனா நாங்க இப்ப இந்த வீட்டுக்கு வந்து ஏழு வருசமாகுது. சட்டப்படி இந்த வீடு எங்களுக்குச் சொந்தம். நீங்க இனி இதில உரிமை கொண்டாட ஏலாது.

என்ர வீட்ட ஏமாத்தி எடுத்துக்கொண்டு சட்டமா கதைக்கிறிங்க சட்டம். நா உன்ன கோட்ல சந்திக்கிறன். என்று கத்திவிட்டுப் போனார் வீட்டுக்காரர். சந்திப்பம் இது எனக்கு சவால். அந்தளவு பெரியனையையே சந்திச்ச எனக்கு அட இதென்ன சுண்டக்காய் எலி. சந்திக்கிறன். சட்டப்படி சந்திக்கிறன்.

போராளி. தேனா




இலங்கையின் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப்பகுதியில் (வன்னியில்) இருக்கிறது செஞ்சோலை என்கிற பேரில் தாய், தகப்பன் உட்பட்ட உறவுகள் அனைத்தையும் இழந்த குழந்தைகளின் இல்லம். அதற்குச்சென்ற போது ஏற்பட்ட மனப்பதிவுகள் இவை.

# தாயாய், சகோதரியாய், தோழியாய்...





ஒளிப்படங்கள்: பகீ, த.அகிலன்



"குழந்தைகள் நாம் குழந்தைகள் நாம், அண்ணனின் அன்பு குழந்தைகள் நாம்"

என்று ஆடிப்பாடுகிற சிறுவர்கள் எல்லோரும் 3 - 12 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் மழலைமுகம் மாறாது இன்னமும் இருக்கின்ற தமிழ்மண்ணின் புன்னகைகள். ஆனாலும் அவர்கள் வயது களையும் முகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற புன்னகைகளையும் மீறி துருத்திக்கொண்டிருக்கிற ஏக்கமும் துயரமும் மனசின் ஆழங்களை ஊடுருவி நெருடாமலில்லை.

ஏதோ ஒரு விதத்தில் போர் இவர்களைப் பாதித்திருக்கிறது. இவர்கள் கடந்து வந்து வாழ்வின் சிறிய தூரத்துக்கிடையில் துயரம் அவர்களைத் தடுத்துத் திசைமாற்றியிருக்கிறது. அந்தக் கசப்பான அனுபவங்களின் வலி அவர்களின் புன்னகைகளின் வழி எம் முகத்தில் அறைகிறது.

எல்லாரும் போரின் பிரசவிப்புக்கள் போர் அவர்கள் பெற்றோரைத்தின்றுவிட இப்போது செஞ்சோலை என்கிற அவர்களின் வீட்டில் ம்.. அப்படிதான் அழைக்கிறார்கள்.

https://tamileelamarchive.com/

250 பேர் இருக்கும் வீடு ஆச்சரியமான 250 பேர்கொண்ட குடும்பம். எனக்கு ஆச்சரியம் நிறைந்து போன வார்த்தையாயிருந்தது வீடு என்பது.

செஞ்சோலை ஏதோ ஆச்சிரமமோ, அனாதை இல்லமோ என்ற நினைப்புடன் நுழைகிற எமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவர்களின் நிறைவும் அன்பும் மகிழ்ச்சியும். அனாதை இல்லம், ஒரு ஆச்சிரமம், ஆதர வற்றோர் இல்லம், இப்படியான இடங்களில் இருக்கிற குழந்தைகள் யாராவது தாங்கள் இப்போது இருக்கும் இடத்தை வீடு என்று சொல்கிறதா? ஆனால் இவர்கள் அழுத்தம் திருத்தமாக உச்சரிக்கிறார்கள் வீடு.

அந்தக் குழந்தைகளைப்படம் பிடிப்பதற் கான முன்னனுமதியுடன் நானும் நண்பர்



பகியும் போயிருந்தோம். 'வாங்கோ' கணீராய் கரிசனையாய் ஒலிக்கிற செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனியின் குரல். கட்டாயம் எங்களுக்கு ஒரு பிரதி தந்திரவேணும் என் கிறார். செஞ்சோலையின் பெரியம்மா குழந் தைகள் ஜனனி அக்காவை பெரியம்மா என்றே அழைக்கிறார்கள். எப்போதும் அவ ரின் கைகளையும் கால்களையும் பிடித்துத் தொங்குகின்றன குழந்தைகள்.

உள்ளே நுழைந்ததும் இருக்கிற பூங்கா குழந்தைகளாலும் மகிழ்ச்சியாலும் நிறைந் திருக்கிறது. அங்கே யாரும் துயரமாயில்லை யாரும் தனித்தில்லை எல்லோரும் வித்தி யாசமின்றி இருந்தார்கள். கோபம், சின்ன தாய் பொறாமை, செல்லப்போட்டி என்று குறும்பும் கும்மாளமும் தலைவிரித்தாடின. அவர்களின் உலகம் இயல்பாயிருந்தது. போரின் துயர் களைந்த அவர்களின் அந்தக் கணங்களை படமாக்கத் தொடங்கினோம் நானும் பகியும்.

குழந்தைகள் எங்களைச் சூழ்ந்து கொண்டு 'மாமா என்னை எடுங்கோ மாமா என்னை எடுங்கோ' என்று கத்தின. எல்லாக் குழந்தைகளும் சேர்ந்தாற்போல கேட்க திணறிப்போனோம் நானும் பகியும். ஏதோ ஒரு குழந்தையைப் படமெடுத்துத் திரும்பு வதற்கிடையில் அடுத்தது கோபித்துக் கொண்டு விழிகளை உருட்டும் அந்த விழி உருட்டலைப் படமெடுத்து திரும்ப அடுத்தது என்னை 'மாமா' என்று வெகுளியாய் சிரிக்கும்.

மாமா மாமா என்ற அவர்களின் அழைப் பில் துளியும் களவில்லை வேசமில்லை தாய்மையான அவர்களின் அந்த அழைப்பு அதுதான் எனக்குள் அவர்களை நிறைத்தது. எனக்குள் என் சின்னவயசு ஞாபகங்கள் நிறைத்தன. என்னைப் படமெடுத்தவர் களையும் நான் மாமா என்றுதான் அழைத்தி ருக்கிறேன். ஆனால் அது அம்மா எனக்குச் சொல்லித்தந்தது. அதில் அன்பில்லை உற வில்லை எந்த உரிமையும் கிடையாது. ஆனால் இவர்கள் நெருக்கமாக சூழ்ந்து கொண்டு சொல்கிறார்கள். மாமா மனசை பிசைகிற குரல் அதில் ஏதோ இருக்கிறது. எப்படி எப்படியெல்லாம் அந்தக் குழந்தை களைப் படமெடுக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ அப்படியெல்லாம் எடுக்க என்னால் முடியவில்லை. குழந்தைகள் என் னைக் கொமாண்ட் பண்ணின. தங்களை நான் எப்படிப்படமெடுக்க வேண்டு மென்று அவர்கள்தான் தீர்மானித்தார்கள். மாமா இந்தக் குட்டியை ஒருக்கா படமெடுங்கொ ஒரு ஒன்றரைவயதுப் பாப்பாவை இடுப்பில் செருகியபடி கேட்டாள் 7 வயது அக்கா சீ 7 வயது தாய். மாமா படமெடுக்கப்போறார் சிரியுங்கோ நான் திணறிப்போனேன் அவள் தாயா சகோதரியா அந்தக்குழந்தையின் தோழியா?.. ஏனோ தொண்டை வற்றியது.

'மாமா நான் இந்த ரோசாப் பூவுக்குப் பக்கத்தில் நிக்கட்டா சீ இது சரியில்லை' திருப்தியில்லாது சிலபேர் ஓடிக்கொண்டிருந் தார்கள். அவர்கள் இழுத்த இழுப்புக்கெல் லாம் ஓடினேன்.

மாமா எங்கட வீட்டுக்கு வாங்கோ அவர் கள் அழைப்புக்குப் பணிந்தபோது பூங் காவை விட்டு கொஞ்சம் தள்ளியிருந்தது வீடு. ஒரே அளவான கட்டடங்கள் கொண்ட பல தொகுதிகள் 14 பேர் வசிக்கும் பல வீடுகள் அவர்களது வேலையை அவர்களே செய்தார்கள் வீடு கூட்டினார்கள், முற்றம் கூட்டினார்கள். பூஞ்செடிக்குத் தண்ணீர் ஊற்றினார்கள். செஞ்சோலையின் ஒவ் வொரு துளியும் அந்தக் குழந்தைகளின் அன்பையும் திருப்தியையும் சேர்த்துக் கொண்டு செழித்திருந்தது.

மாலை தேனீர் குடித்து வெளியேறு கையில் எதையோ விட்டு விட்டு வருவது மாதிரியிருந்தது. திரும்பிப்பார்த்தேன் எம் மைப்பார்த்து கையசைத்த குழந்தைகளின் புன்னகைகளைப் பத்திரப்படுத்திக்கொண் டேன். வரும் போதுதான் கவனித்தேன் பூங் காவின் ஒரு கரையோரமாக பங்கர் புதிதாக வெட்டப்பட்டிருக்கிறது. மறுபடியும் யுத்தம் விழுங்கப்போகிறதா?

திரும்புகின்ற வழிமுழுதும் நெடுநேர மாய் காதுகளில் வழிந்து மனசை.நிறைத்தது துளியும் கலப்படமில்லாத "மாமா மாமா" என்கிற அன்பின் குரல்.

த.அகிலன்

# மௌனத்திரை விலக

அலையிசை

தலையில் கனக்கும் சுமையால் கழுத்த நொந்தது சறோவிற்கு, மெதுவாகத் தடவினாள். வியர்வையில் மீன் வாசனை வீசியது.

சுமை பெருமூச்சாய் எழுந்து, அடங்கியது. எத்தனை வருடங்கள் கணக்கிட்டுப் பார்த்தாள் மனதுக்குள் பன்னிரெண்டு. சின்னவனின் வயது. சின்னவனின் நினைவுத் தூறலில் கணவன் கந்தையா வாந்தான்.

கந்தையா இப்போதும் அவனைப்பற்றிய எந்தச் சலனமும் அவளினுள் எழவில்லை. எப்படியோ வாழ்ந்தாயிற்று.

நினைக்கையில் வெப்பியாரமாய் இருந்தது. கந்தையாவை சறோ விரும்பினாளோ? இல்லை. வினா உணரும் அதே கணம் விடையும் அதுவே. பதினாறு வயதின் ஆரம்ப வாசலில் அவளின் கனவுகள் ஏராளம். அதை பங்கிட உரிய உறவுகள் எதுவுமின்றி அவை மனக்கிடங்கினுள்ளே ஆழமாகப் பதிந்துவிடும்.

அவளது ஐயாவோடு தொழிலுக்குப்போகும் சின்னராசுவில் அவளுக்கு விருப்பம். சின்னராசுவிற்கும் அப்படியிருந்திருக்குமோ?

சறோ இப்பொழுதும் சின்னராசுவின் பார்வையை எண்ணிப்பார்ப்பதுண்டு. அன்று எப்படி மயிர்க்கால்கள் சிலிர்த்து உடல் கூசியதோ! அதே போன்றுதான் இப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது அவளிற்கு.

சொல்லாமல் புதையுண்டுபோன சறோவினுடைய முதல் காதல் அது.

ஐயா, நல்ல உழைப்பாளி சிறந்த கடலோடி என்று கந்தையாவை கட்டிவைக்க முடிவெடுத்தார். அவரது குடும்ப அரசாட்சியில் பிழை, சரி கதைக்க எந்த உறவுக்கும் உரிமை இருந்ததில்லை.

இன்று உடலை எரிக்கும் வெயிலைப் போலதான் ஐயா கலியாணக்கதை கதைக்க அன்றும் இருந்தது.

சறோ அடுப்படியில் அம்மாவோடு வெங்காயம் உரித்துக்கொண்டிருந்தாள் கடலால் வந்த ஐயா வலி பலகையை வைத்தவாறு சொன்னார்.

"வாற வெள்ளிக்கிழமை முருகன் கோயிலை பெரியவளிற்கும் கந்தையவிற்கும் சோறு கொடுக்கிறது."

அம்மா மௌனமாகத் தலையசைத்தாள். அம்மாவின் பதில் எப்போதும் இப்படித்தான் எந்த உணர்வுகளையும் வெளிக்காட்ட மாட்டாள்.

சறோ அழுதாள்.

வெங்காயம் உரித்ததால் அழுதாளா? அல்லது கலியாணம் என்பதால் அழுகிறாளா? அம்மா அவளைப் பார்த்தாளே ஒழிய கேட்கவில்லை.

சறோவின் விருப்பமின்றி நடந்து முடிந்துவிட்டது.

கந்தையா! அவனது உதடுகள் எப்போதும் மூடியே இருக்கும். தேவையென்றால் அதிகாரத்தோடு ஒலித்தடங்கும் குரல். அவ்வளவுதான்.

கந்தையாவினால் அவளின் உணர்வுகளைப் புரியாமல் அதற்கு மதிப்பு கொடுக்காமல் ஓரிரவில் அவலமாய் சறோவின் கனவுகள் சிதைக்கப்பட்டது.

அன்று தொடங்கிய பயணம்

சறோவின் உணர்வுகள் அவளோடு மௌனப்போர் தொடுக்க கந்தையாவின் செயல்களோ முரட்டுத்தனமாய் இருந்தது.

பெரியவன் பிறந்தான். அவள் விரும்பி பெற்ற வித்து அல்ல அந்தக் குழந்தை. அவளிற்குள் திணிக்கப்பட்டதில் உருவான உயிரை அவள் வெறுக்கவில்லை. அவ்வளவுதான்.

மனதினுள் மண்டிய துயரக் கோடுகளை அழிப்பதற்காய் பிறந்தவனாய் கருதினாள். வளர்த்தாள்.

காலம் தான் எப்படி மாறிவிடுகிறது?


எப்பவாவது அருமையாய் சின்னராசுவைச் சந்திப்பதுண்டு. விழிகள் விரிய அவன் பார்க்கும் பார்வையின் கனதியை நொடிப்பொழுதே உணர்ந்து அதன் வெப்பத்தால் சூழப்பட்டு தலை



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

ஓவியம்: விஜிதன்




தானாய் கவிழ நடப்பாள். பின்னால் அலைகள் குமுறும் அவளது உணர்வுகளைப் போல.

சின்னராசு கட்டிவிட்டான். காற்றோடு அவளை அடைந்த செய்தி அது. மனதுள் ஏதோ ஒன்று சறோவை விறாண்டியது.

எப்பவும் போல மௌனமே அவளுக்குத் துணையாய் இருந்தது. பெரியவன் எடுத்து ஒரு அடி வைக்குமுன்பே பெரியவள். அவள் பால் மறக்க முன்னமே சின்னவன்.

மூன்று வாரிசுகள் வருமட்டும் அவள் முட்படுக்கையில்தான் படுத்திருந்தாள்

குடித்துவிட்டு நடை தளர, குரல் தளுதளுக்க வீடு வரும் கந்தையா கையில் அகப்பட்டவைகளால் சறோவைத் தாக்குவான். அது அவன் வெறிப்பசியாய் இருக்கும்.

உடல் வீங்கி வலி எடுக்கும் கந்தையா கசக்கிப் பிழிவான் அவளை.

எல்லாம் முடிய அணையின்றி ஓடும் கண்ணீரை துடைத்தபடி முற்றத்துக் குளிரில் படுத்திருக்கும் குழந்தைகளிடம் ஓடுவாள்.

பசியாலும் பயத்தாலும் சுருண்டு படுத்திருக்கும் பிள்ளைகளை வாரி அணைப்பாள்.

அப்போதும் அவள் உணர்வுகள் மௌனமாகியிருக்கும்

கடல் பிளந்து அதிர்ந்து அடுத்தடுத்து கந்தையா, சின்னராசு என்று சறோவின் உறவுகள் சிதைந்து கரையேறிய போதும் அவள் மௌனமாகவே இருந்தாள்.

கந்தையா போனது அவளை பாதிக்காது விட்டாலும் சின்னராசு வாழ்வின் வசந்த வாசலில் வண்ணத்திப்பூச்சிக் கனவுகளை வரைந்த அவனின் மரணம் அவளை அவளினுள் உலுப்பியது.

அப்பவும் மௌனம்

எதிர்காலம்? வீட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவது எல்லாமே அவளின் முன் வந்த நின்ற போது? முடிவெடுத்தாள்.

மீன் கனத்த கடகத்தை தலையில் சுமந்து அவளது பொருளாதாரப் பயணம் தொடங்கியது.

இளமை விரிய அவளின் நடையின் லாவகத்தை மீன் வாங்கும் சாக்கில் விழி விரிக்கும் பண்பற்ற பார்வைகளை நிறையவே சந்திப்பதுண்டு.

காசு தரும் போர்வையில் கையைத்தொட்டு மீன் வாங்க பேக் நீட்டும் பாணியில் நெஞ்சில் முட்டியென எத்தனையோ வக்கிரங்களை நாளாந்தம் சந்தித்துக்கொண்டிருக்கிறாள்.

'சீ' என்று, 'எடு கையை' என்று 'என்னடா'.... என்று கன்னத்தில் கைகளால் அறையவோ என மனதினுள் எழும் உணர்வுகள் மீளவும் அவளோடு ஒன்றிப்போகும்.

வெப்பமேறிய மணலினுள் நடப்பதால் காய்ந்து உரமேறிப்போன பாதங்களோடும் நாளாந்த வாழ்வினுள் மௌனப் போர் தொடுக்கும் உணர்வுளோடும் சறோ நடந்துக்கொண்டிருக்கிறாள்.

https://tamileelamarchive.com/



# வண்ணத்துப் பூச்சியின் கனாக்கால கவிதை



உனது பெயருக்கு
வண்ணத்துப் பூச்சி என்றொரு அர்த்தமிருப்பது
எவ்வளவு பொருத்தம்

இல்லாவிட்டால்
என் கூந்தலிலும் தோள்களிலும்
உதடுகளிலும் அமர்ந்து பறந்து திரிய
உன்னால் முடிந்திருக்குமா என்ன

உணர்வெங்கிலும் குந்தி சிறகடித்துத் திரியும் சாகசத்தை
வண்ணத்துப் பூச்சியாய் இல்லாது போனால்
எப்படி நிகழ்த்திக் காட்டுவாயெனக்கு

உன் தந்திரத்தின் மாயம் அளவற்றது

உள்ளே பாடல் போல மிதக்கின்ற வண்ணத்துப் பூச்சி
வெளியே பிடித்து வைக்க முடியாத கனா


பைத்தியம் பிடித்திருக்கும் இந்நாட்களிலெல்லாம்
வண்ணத்துப் பூச்சியை மொய்க்கின்ற மலராக
பறந்து கொண்டே இருக்கிறேன்

வாழ்வின் கனாக் காலம் முழுவதும்
பருவங்கள் மாறி மாறிப் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகள்
தம் வண்ணங்களால் உயிரூட்டுகின்றன
நம் அந்தரங்க வெளிகளில்

வானவில் படிந்து உருகிக் கிடக்கும்
மலைகளின் தொன்மப் புதையல்களில்
மௌனம் குருதி சொட்ட ஒளிந்திருக்கிறேன்

இன்னொரு முறை
மகரந்தச் சொற்களினால் சிலிர்ப்பூட்டு


பூங்கொத்துகளில் துளிர்த்து தேனூறிடும்
வண்ணத்துப் பூச்சியின் பிரம்மாண்டமான
கனாக் கால கவிதை நான் என்பதில்
உனக்கு சந்தேகமிருக்கிறதா
இனியும்



https://tamileelamarchive.com/

# கோமாளியின் கேலிப்பாத்திரம்

அர்த்தமற்ற விளையாட்டுக்களிற்கு
அர்த்தம் கற்பித்தபடி
அற்பப் பொருள்களால் விசித்திரங்களை உருவாக்கியபடி
நிகழத் தொடங்கிற்று கலைஞனின் விழா



வர்ணங்களின் ஜாலம் தெறிக்க
அரங்கில் கோமாளியின் கூத்து

வேடிக்கை விரும்பிகளின் ஆசன வரிசை
ஆசுவாசமற்ற முகங்களால் சோர்ந்திருக்கிறது

வேடிக்கை காட்டியின் விநோதங்களிலிருந்து
முடிவற்று வழிகிறது .....
மறைவிலே பெருகும் துயரம்

வலுமிக்க கம்பங்கள் அவன் கைகளில்
வளைந்தும் ..... சுழன்றும் .....
வித்தைகளைச் சிதறுகின்றன

மூன்று பந்துகளை
பார்வைகளுக்கும்.... கரங்களுக்கும்.... நடுவே
உறுட்டி மேலெறிந்து
வெளியைச் சுழற்றுகிறான் மாய வித்தகன்

ஒன்றுமற்றிருந்த கண்களுடன் வந்திருந்தனர்
பசி நிரம்பிய குழந்தைகள்

கோமாளியின் சாகசங்களிலிருந்து
ஆய்ந்தனர் ருசி மிகுந்த அனுபவங்களை

கால்களின் ஒழுங்கற்ற நடனத்திலிருந்து
ஆச்சரியங்களை.....
பொத்திப் பிடித்துக் கொண்டனர்

சிவந்த செர்ரிப் பழம் காய்த்த மூக்கினைப் பிடிக்க
அளவற்ற வியப்பிற்கு சிறகுகளைப் பூட்டினர்

எல்லாம் பூர்த்தியாகி.... மட்டற்று....
வெண்ணிற நுரையும்.... நீலப் புகையுமாய்....
கனவுகள் ஒழுகக் குதித்தனர்

திரும்பத் திரும்ப
மாறுபட்ட விநோதங்கள்....

அவன் புரிகின்ற வித்தைகளே
முடிவில்....
அவனை விழுங்கி விடுகின்றன

விநோதம்.... கும்மாளம்.... இசை
ஓய்ந்த அரங்கில்
மாபெரும் மௌனம்...
கிறுக்கனின் கேலிப் பாத்திரமாக எஞ்சிவிடுகிறது.

https://tamileelamarchive.com/







# எரிமலை
## வெளியீட்டரங்கு

எரிமலை வெளியீட்டகத்தால் நடத்தப்பட்ட இரண்டு நூல்களின் வெளியீட்டரங்கு நிகழ்வு 22 யூலை 2006 அன்று, பிரான்ஸ் பாரிஸ் நகரில் அமைந்துள்ள, Salle Jeanne d'Arc மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தமிழீழத்தின் மூத்த அரசியல் ஆய்வாளரும், விமர்சகருமான மு.திருநாவுக்கரசு அவர்களின் 'கொழும்பு 2007', தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவுப் போராளியான தூயவனின் 'யுத்தகாண்டம்' ஆகிய இரண்டு நூல்களும், எரிமலை வெளியீட்டகத்தின் இந்த முதலாவது விழாவின் ஊடாக, புலம்பெயர் மண்ணில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு யாழ். நாகர்கோவில் பகுதியில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட, மாவீரன் லெப். சின்னவீரனின் தாயார், மாலை 4:00 மணிக்கு பொதுச்சுடரினை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பொன்டி தமிழ்ச்சோலை மாணவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து, எரிமலை ஆசிரியர் குழுமத்திலிருந்து தா. பாலகணேசன் அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தினார். சிறப்புரையை பிரான்ஸ் பரப்புரைப் பொறுப்பாளர் மேத்தா அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து நூல்களின் வெளியீடு நடைபெற்றது.

'கொழும்பு 2007' நூலின் முதல் பிரதியை குமரன் ஆசிரியர் அவர்கள் வெளிட்டு வைக்க, சி.புவனேந்திரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். 'யுத்தகாண்டம்' நூலினை மேத்தா அவர்கள் வெளியிட்டு வைக்க, கந்தசாமி அழகிரிசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப்பிரதிகளை, பிரான்ஸ் வர்த்தகப் பிரமுகர்களும், சிறப்புப் பிரமுகர்களும் பெற்றுக்கொண்டனர். நூல்களின் வெளியீடு களைத் தொடர்ந்து, இவ்விழாவுக்கென நூலாசிரியர்கள் வழங்கிய உரைகள், அகன்ற வீடியோத்திரையில் காண்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, குமரன் ஆசிரியர் அவர்கள் இரண்டு நூல்களுக்குமான ஆய்வுரையை நிகழ்த்தினார்.

பிரான்ஸ் தமிழ் இளையோர் அமைப்பு (TYO), Imprimerie 27, eelamstore.com ஆகியவற்றின் அனுசரணையோடு நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, நியூலி சூ மார்ன் தமிழ்ச்சோலை மாணவர்களின் நடனம், தமிழ் Boys குழுவினரின் இசை நாடகம், பிரான்ஸ் தமிழர் கலை பண் பாட்டுக்கழகத்தினரின் இசைநிகழ்வு என்பனவும் செழுமை சேர்த்தி ருந்தன.



https://tamileelamarchive.com/






















https://tamileelamarchive.com/

# பல்துறைப் புலவன் பொன். கணேசமூர்த்தி



வன்துயர் ஏந்திவந்த
வரிகொள்ளா புண்ணது
செய்தியாய்

பொன். கணேசமூர்த்தியை
இழந்த கவலை
இந் நாளில்
எம்மை ஆட்கொண்டது!

இடுக்குறு நெருக்குவார
இலங்கை இனவாத அரசின்
நடுக்குறு கொலை
நாச ஆட்சியிலே,
நாளும் நிகழ்ந்து வரும்
நீள் மனித அழிப்பினிலே
யாழ்மண்ணில்
பல்துறைப் புலவன்
பொன். கணேசமூர்த்தியும்
பலியானான்!

உட்கனன்ற தாயக விடாயை
உயரிய போர் இலக்கியங்களாய்
வீரியங்கெடாது ஆக்கியவன்
வினைசோரா வித்தகன்
தன் கடமைக்காய் விரைந்தபோது
துரந்த படையால்
சுடுபட்டு இறந்தான்!

புறத்துறல் அஞ்சித் தன்
பேனாவை
மறைத்திடாது
திறத்துறு திடமுடன்
படைப்பதில்
முடுக்கியவன்!

அறத்தகைத் தலைவனை
உறவோடு உள்ளத்தில்
அமர்த்தியே
கருப்பொருளாய்க் காவி
விரவிய தரவு இலக்கியங்களை
உருவாக்கிய
மண்ணுள மா எழுத்தாளரில்
பொன். கணேசமூர்த்தியும்
ஒருவனாய் உலாவியவன்!

அடக்கிடா ஆர்வத்தோடு
நாடகங்கள்
நாட்டெழுச்சிப் பாடல்கள்
ஊடகத் தேடல்கள்
நாவல், கவிதை
என எழுதியவன்,
வேடம் தாங்கிய
மேடை நிகழ்வுகளிலும்
சோடைபோகாது திகழ்ந்தான்!

நுகரரும் விதத்தில்
அனைத்தையும்
நுன்மதியுறப் படைத்தவன்
ஓயா அருவித் திரள் வேக
உட்குவிந்த வார்த்தைகளால்
தீயவரின் தமிழினத் திரிவு
இலக்கியங்களை
தேன் சுவையோங்கிய பாங்கில்
வாய ஆய்வுகளோடு
அணுகித் துணிந்து ஆக்கி
வெளிவிட்ட அறிஞனை
விரிதளிர் முகையரும்பு முகத்தனை
ஊழிச் சிங்களத்து ஏவலர்
உயிர் குடித்தாரே!

இவன் உவப்புற எழுதிய
இலங்கைமண்
இலக்கிய நாடகம்
புலிகளின் குரல் வானொலியில்
பதிவாக்கப்பட்ட போதெல்லாம்
அன்ன வசனநடையின்
திண்மை திணியாத இலகுநடையை
உன்னி வியந்தே தினம்
என்னை வளர்த்தவன் நான்!

கரித்த வஞ்சத்தோ
நரித்திறல் ஆரியர்கள் விரித்த
இராமாயணத்தில்
அரக்கரெனத் தமிழரை
அடுக்காது அவர் அழைத்த
நெரித்தசொல் தாங்காது
எரித்த வார்த்தை கொண்டெழுந்து
எங்கள் புலவன்
பொன். கணேசமூர்த்தி

பலமான ஆய்வுத் தரவுகளோடு
எழுதி வளங்கியதே இந்த
இலங்கைமண் நாடகம்!

நிதர்சனத்தின்
வெளியீடாய் வந்த
மண்ணுக்காய்
திரைப்படம் முதல்
ஜதார்த்த இலக்கித் துறையில்
இவன் எத்தரத்திலும்
முயன்றவை
கொற்றத்துக்குரியனவாயக்
கணிக்கப்பட்டன!

செய்தொடர் சிறப்புறு சேவையை
நெய்மன விருப்பு நெகிழ்வுற
நிறைவேற்றும் இவனை
கைபட அணைத்தே
தலைவன்
கௌரவம் தந்தான்!

சுற்றாடல் கண்டு அஞ்சாத
சூரத்தனம் வாய்ந்தவனாய்
அற்றையடி நாளில் இருந்து
இறுதிவரை
உறுதியுடன் நின்று
செங்குருதி சிந்தும் நிலத்தில்
தலைவன் எம்
பங்குனி வெயிலோனின்
பாதங்களைத் தொடர்ந்த
இலக்கியப் பங்காளன்
பொன். கணேசமூர்த்தியின்

உருவமும் சுறுசுறுப்பும்
சிரிப்பிழைந்த மென்குரலும்
நினைவெழுந்து நிற்கையில்
அரக்கக்கரங்களால் அவன்
அழிக்கப்பட்டான் என்பதை
ஜீரணிக்க முடியவில்லை.

ந. கிருஷ்ணசிங்கம்

https://tamileelamarchive.com/



ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

எரிமலை
ERIMALAI

கலை
பண்பாட்டு
அரசியல்
சமூக
சஞ்சிகை

Tel: 01 43 58 11 42
Fax: (33) 1 43 58 11 91
e.mail: info@erimalai.info
ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

www.erimalai.info

https://tamileelamarchive.com/

எரிமலை
ERIMALAI






# சாவிலும் வாழ்வோம்

